வாரப்பதிப்பு விலை சதம் 20

தலைமைத் தபாலி நிலையத்தில் செய்திப் பத்திரிகையாகப் பதிவு செய்யப்பட்டது

# சுதந்திரன்

SUTANTIRAN

194 A, SILVERSMITH STREET, COLOMBO.

194 ஏ. பண்டாரநாயக்க மாவத்த, கொழும்பு-12.

திறம் சலவைக்கு

மில்க் வைற் சோப்




மில்க் வைற் சோப் தொழிற்சாலை

யாழ்ப்பாணம்

புத்தகம் 14 திருவள்ளுவர் ஆண்டு 1991 தைத் திங்கள் 18-ம் நாள் (31—1—1960) ஞாயிற்றுக்கிழமை ஷஃபான் 2 இதழ் 30

# தமிழரசுக்கட்சியின் சாத்வீக எதிர்ப்பு

## சிங்களவரை தூண்டுவதானால்...

## தமிழர் மூச்சு விடுவது கூட அவர்களுக்கு ஆத்தரமூட்டலாமே!

### பல்கலைக் கழகத்தில் தமிழரசுத் தந்தை நகைப்பும் சிரிப்புமாக ஆற்றிய பேருரை

"நாம் மாநாடு கூடி எமது பிரச்னைகளுக்கு தீர்வு காண்பதற்கான வழி முறைகளை ஆராய்வது கூடப் பெரும்பான்மை இனத்தவர்களைப் புண் படுத்துவதாகவும் அவர்களை எமக்கு எதிராகத் தூண்டிவிடுவதாகவும் இருக்கும் என்றால் நாம்மூச்சு விடுவது கூட அவர்களைப் புண் படுத்தவும் தூண்டவும் கூடும்.

"அதற்காகத் தமிழினம் என்றும் இந்நாட்டில் அடிமைகளாக வாழ முடியாது. விடுதலை பெற்றுத் தன் மானத்துடனும் சகல உரிமைகளுடனும் தமிழினம் வாழ்வதற்கான வாய்ப்பு கிடைக்கும் வரை தவறு செய்யும் அரசாங்கத்துக்கு அதை உணர்த்தும் பொருட்டு அகிம்சை வழியில் தீவிரமாகவும் தொடர்ச்சியாகவும் விடாப்பிடியாகவும் எதிர்ப்புக் காட்டவேண்டும்" என்று தமிழரசுத் தந்தை திரு. எஸ். ஜே. வி. செல்வநாயகம் கூறினார்.

தமிழரசுத் தந்தை கொழும்பிலுள்ள இலங்கை சர்வகலாசாலைத் தமிழ் சங்கத்தின் ஆதரவில் கடந்த 22-ந் தேதி நடைபெற்ற கூட்டத்தில் 'சிறுபான்மையோர் பிரச்னை' என்னும் பொருள் பற்றிப் பேசுகையிலேயே மேற் கண்டவாறு கூறினர். கொம்யூனிஸ்டு பிரமுகர் திரு. சண்முகதாசன் எழுப்பிய வாதம் ஒன்றுக்கு பதிலளிக்கு முகமாகத் தமிழரசுத் தந்தை அவ்விதம் சொன்னார். கூட்டத்துக்கு திரு. நா. யோகானந்தன் தலைமை தாங்கினர்.

#### பங்கு பற்றிய கட்சிகள்

இக்கூட்டத்தில் 'சிறுபான்மையோர் பிரச்னை' என்ற அதே பொருள் பற்றி தமிழரசுக் கட்சி, கொம்யூனிஸ்டு கட்சி ஜனநாயக தொழிலாளர் காங்கிரஸ் இலங்கை திராவிடர் முன்னேற்றக் கழகம் ஆகியவற்றின் பிரதிநிதிகளும் கொழும்பு மத்திய தொகுதியின் போட்டியிடும் திருமதி வசந்தா அப்பாத்துரையும் பேசினர்கள்.

திருமதி வசந்தா அப்பாத்துரை பேசுகையில் தமிழ் பேசும் மக்களின் பரம்பரைத் தாயகம் காப்பாற்றப்பட வேண்டும் என்றும் சமஷ்டி அரசமைப்பில்தான் தமிழ் பேசும் மக்கள் சிங்களவர்களோடு சமதையாக உரிமை வாழ்வு-விடுதலை வாழ்வு வாழலாம் என்றும் கூறினர். அவர் மேலும் பேசியதாவது:—

#### தமிழர் வீரம்

"தமிழனின் பரம்பரை வீரபரம்பரை. தமது வீரத்தைப் பழித்தனர் வட நாட்டுக் கனகவிசயர் என்பதறிந்ததும் குகை விட்டுக் கிளம்பிய புலியெனப் பாய்ந்து கனக விசயரைப் போரில் வென்று அவர் தம் தலையிலே கல் சுமத்திக் கொணர்ந்தவன் தமிழன். அவன் கொடி இமயத்திலே பட்டொடொளி வீசிப் பறந்தது.

"அன்று அப்படி நடந்தது. இன்று நிலைமை வேறாகி விட்டது. தேர்தலுக்குக் கூடக் கொடி கட்ட நமக்கு உரிமை இல்லை. மாற்றான் மீது கல் சுமத்திய வீரப் பரம்பரையில் வந்த எம்மைக் கொன்று குவிக்க, பூண்டோடு அழித்தொழிக்க அடுக்கடுக்காக இங்கே நடவடிக்கைகள் எடுக்கப்படுகின்றன.

#### ஆரியச் சூழ்ச்சி

"தமிழினம் இந்நாட்டில் என்றுமே சிறுபான்மை இனமாக இருந்ததில்லை. சரித்திரமே இதைக் கூறுகிறது. விஜயன் காலத்துக்குப் பின்னர்தான் சிங்கள இனம் என்ற பேச்சே தொடங்கியது. காலத்தின் கோளாறால் ஆதி இனமான தமிழினம் எப்படியோ சிறுபான்மை இனமாகக் குறுகிவிட்டது. ஆரிய இரத்தத்தோடு ஊறிப்போன சூழ்ச்சி நம்மைச் சிறுபான்மை இனமாக்குவதில் வெற்றி கண்டு விட்டது.

"சிங்களவர்களுக்கு எல்லாத் துறைகளையும் கற்றுக் கொடுத்தவர்கள் நாம். இப்போது நம்மைக் காலால் உதைக்கிறார்கள்; நமது பரம்பரைப் பிரதேசத்தை அபகரிக்க விழைகிறார்கள்; தமிழ் மொழியை அழிக்க வருகிறார்கள்; எமது அரசியல், மனித உரிமைகளைப் பறிக்க முனைகிறார்கள்.

#### சமஷ்டி அரசமைப்பு வேண்டும்

"இந்த அழிவுச் சக்தியிலிருந்து நாம் தப்பிப் பிழைக்க வேண்டுமானால் முதலில் எமது தமிழ்ப் பிரதேசத்தில் நாம் கால் ஊன்றி இருக்க வேண்டும். அதைக் காப்பாற்றி ஆக வேண்டும். கடந்த 1958 வகுப்புக் கலவரத்தின் போது வடக்குக் கிழக்கு மாகாணங்கள் இருந்த படியால்தான் நாம் அங்கு போய் ஆறுதல் பெற முடிந்தது.

"எமது பிரதேசத்தை எமதென உறுதியாக்கிக் கொண்டதும் பிற உரிமைகளுக்காகத் தீவிரமாகப் போராட வேண்டும். ஒற்றை ஆட்சியை ஒழிக்க வேண்டும்; சமஷ்டி ஆட்சி இந்த நாட்டில் மலரச் செய்ய

(5-ம் பக்கம் பார்க்க)

### 'யாழ்ப்பாணப் பொது மக்கள் மன்னிக்க வேண்டும்'

கடந்த வார சுதந்திரனில் குறிப்பிட்டிருந்தபடி சென்ற ஞாயிற்றுக்கிழமை (24—1—1960) யாழ்ப்பாணம் முற்றவெளியில் இலங்கைத் தமிழரசுக் கட்சியின் பொதுக் கூட்டம் நடைபெற முடியவில்லை.

இது சம்பந்தமாக யாழ்ப்பாணப் பொது மக்களிடம் பணிவோடு மன்னிப்புகோரி இலங்கைத் தமிழரசுக் கட்சியின் பொதுச் செயலாளர் டாக்டர் ஈ. எம். வி. நாகநாதன் ஒரு அறிக்கையை வெளியிட்டுள்ளார்:

பிரஸ்தாப அறிக்கையில் டாக்டர் நாகநாதன் கூறுவதாவது:-

"சுதந்திரனில் விளம்பரம் செய்திருந்தபடி கடந்த ஞாயிற்றுக்கிழமை யாழ்ப்பாணம் முற்றவெளியில் பொதுக் கூட்டம் நிகழ்த்த முடியாது போனமை பற்றி மிகவும் வருந்துகிறோம்.

"தவிர்க்க முடியாத காரணங்கள் சிலவற்றினால் கூட்டம் தடைப்பட வேண்டியதாயிற்று. வவனியா, முல்லைத்தீவுப் பிரதேசங்களில் பிரசாரம் நடத்துவதற்காகச் சென்ற கட்சித் தலைவர்

(4-ம் பக்கம் பார்க்க)

## இரண்டு இடங்களில் ஏககாலத்தில் கூட்டம்

### தமிழரசுத் தலைவர்களின் மட்டக்களப்பு விஜயம்

ஏககாலத்தில் இரண்டு இடங்களில் பிரமாண்டமான பொதுக்கூட்டங்களை நடத்த யாழ்ப்பாணம் தமிழரசுக் கட்சிக் கிளை திட்டமிட்டிருக்கிறது.

பெப்ரவரி நடுப் பகுதியில் தமிழரசுத் தலைவர்கள் மட்டக்களப்பு மாவட்டத்துக்கு விஜயம் செய்யத் திட்டமிட்டுள்ளார்கள்.

யாழ்ப்பாணப் பகுதியில் ஏககாலத்தில் இரண்டு இடங்களில் மாபெரும் பொதுக்கூட்டங்களை நடத்த தமிழரசுக் கட்சி ஏற்பாடு

(4-ம் பக்கம் பார்க்க)

இந்த சக்தி வாய்த நிவாரணி மார்பு நோய்களை விரட்டுகிறது!

ரிச்லெட்ஸ் பெக்டோரல்

(Richelet's Pectoral)



ஒரு பிரசித்தி பெற்ற தயாரிப்பு குறிப்பாக சுவாச சய நோய்களுக்கென்றே விசேஷமாகத் தயாரிக்கப்பட்டது. ஆகவே, நோய்வுக்கு இது ஒரு வரப்பிரசாதம்!

● மூச்சு விடுதல் தடைபடுவதால் வேதனை ஏற்படுவதுடன் நின்று விடாது. சில சந்தர்ப்பங்களில் அபாயத்தை ஏற்படுத்தக் கூடும்! எனவே இதை ஒழித்துக் கட்டுவதில் அலட்சியமாயிருத்தல் கூடாது.

● ரிச்லெட்ஸ் பெக்டோரல் துரிதமாகப் பரவி வேலை செய்யக் கூடிய ரஸச் சேர்க்கையும் சக்தியும் கொண்டது. ஆகவே ஒன்றிரண்டு வேளை மருந்து சாப்பிட்டதுமே சுவாசப்பை, மூக்குக் குழல் இவைகளில் ஏற்படும் அடைப்பை நீக்கி, கபத்தை உடைத்து, மூச்சுத் திணறலைத் தணித்து, சுவாசப் போக்கு வரத்தைச் சமநிலைப்படுத்துகிறது. பிசின்—நுரை—போன்ற சளியை இளகச் செய்து காரி உமிழ்வதை இலகுவாக்குகிறது.

● இடைவிடாத இருமல், இளைப்பு, நெஞ்சுவலி, தொண்டை ரணம், மூச்சடைப்பு; தொண்டையிலேற்படும் கர்ர் புர்ர் என்ற சத்தம், தடிமல், காய்ச்சல், குளிர், பீனசம், கக்குவான், போன்ற சகல நோய்களையும் தணிப்பதுடன், படிப்படியாக நிரந்தரமான—நிச்சயமான—குணத்தையும் அளிக்கிறது




ரிச்லெட்ஸ் பெக்டோரல்

நோய்வினால் துன்புற்ற பலர் ரிச்லெட்ஸ் பெக்டோரலின் புண்ணியத்தால் ஆச்சரியப்படத்தக்க விதத்தில் பூரண குணம் பெற்று வானளாவப் புகழ்கின்றனர்!

எங்கும் கிடைக்கும்.

ஏக விநியோகஸ்தர்கள்:

வெஸ்டன் ஏஜன்சீஸ்.,

63, பாங்ஷால் வீதி. கொழும்பு-11.

இலங்கை வாழ் தமிழ் மக்களின் உரிமைக் குரல்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# சட்டத்துறை இணங்குமானால் நீதிமன்றத்திலும் தமிழில் கருமமாற்ற தயார்

## தமிழியக்க வார விழாவில் அமிர்தலிங்கம்

### தமிழர் தமிழுணர்வு பெறவும் வாழ்வின் துறையாவிலும் தமிழைப் பயன்படுத்தவும் வற்புறுத்து

### நாடெங்கிலுமிருந்து தொண்டர்கள் திரண்டு முழக்கம்

"ஆங்கில அடிமை ஆட்சியிலிருந்து விடுதலை பெற்றபின் இன்னொரு ஆட்சியாளரிடம் தமிழினம் சிக்கித் தவிக்கின்றது. ஆங்கிலத்துக்குப் பதிலாக சிங்கள மொழி சட்டமாக்கப்பட்டிருக்கின்றது. இதனை அரசியல் துறைகள் அனைத்திலும் பரவச் செய்ய அரசாங்கம் முயற்சிகள் பலவற்றையும் நேரடியாகவும் மறைமுகமாகவும் செய்து வருகின்றது. ஆயினும் கொஞ்சம் தயங்கி நிற்கின்றது. இவ்வேளையில் நாம் எல்லோரும் ஒரே கொள்கையுடன் நின்று தமிழ்ப் பேசும் மக்களின் எதிர்ப்புக்களைக் காட்ட வேண்டியது அவசியமாகும்."

இவ்வாறு சென்ற 17-1-60-ல் நடைபெற்ற அகில இலங்கைத் தமிழ் மொழி இயக்கத்தின் எல்லாந் தமிழியக்க வார விழாவில் சொற்பொழிவாற்றிய முன்னாள் வட்டுக்கோட்டை பாராளுமன்றப் பிரதிநிதி திரு அ. அமிர்தலிங்கம் கூறினார்.

திரு அமிர்தலிங்கம் தொடர்ந்து பேசியதாவது: தமிழ் மக்களிற்சிலருக்குசிங்களம் படித்தால் என்ன என்று கேட்கத் தோன்றுகிறது. இதனால்நமது சமுதாயம்விடுதலை பெற்றுச் சுதந்திரம் அடைய முடியுமா என்பதை தமிழ்ப் பேசும் மக்கள் சிந்தித்துப் பார்க்க வேண்டும். இன்னும் சிலர் ஆங்கிலத்துக்குப் பதிலாகச் சிங்களம்படித்தால் பெருமையடையலாம் என எண்ணுகின்றனர். இங்ஙனமான செயல்கள் நமது இனத்துக்கு இழிவையே உண்டாக்கும் என்பதை உணர்ந்து கொள்ள வேண்டியது அவசியமாகும்.

#### நீதிமன்றத்தில் தமிழ்

மேலும் அவர் தொடர்ந்து கூறியதாவது: சில தமிழ்த் தலைவர்கள் கூறுவதைப் போல் சிங்களத்தைச் சாக்காக வைத்து ஆங்கிலத்தைக் கட்டித் தழுவிக் கொண்டிருக்கிறார்கள். இது சுயநலத்துக்கன்றி தமிழ் மக்கள் நலத்துக்காக அல்ல என்பதையும் இங்கு குறிப்பிட்டுக்காட்ட விரும்புகின்றேன். தமிழ்த் தலைவர்கள் தமிழ் மொழியை எல்லாத் துறைகளிலும் பாராளுமன்றம்வரையும் இதனைக் கைக்கொள்ள முன்வர வேண்டும். தமிழ் மொழியை உரிமை பெறச் செய்ய இது அவசியமாகும். சட்டத்துறைகள் இணங்குமானால் நீதிஸ்தலங்களிலும் தமிழ் மொழியில் கருமமாற்றுவதற்கு நான் தயங்கமாட்டேன் என்றும் திரு அமிர்தலிங்கம் கூறினார்.

வண்ணார்பண்ணை நாவலர் வித்தியாசாலையில் நடைபெற்ற இக் கூட்டத்திற்கு இயக்கத்தலைவர் திரு க. சத்தியானந்தசிவம் தலைமை வகித்தார். அவர் கூறியதாவது:-எமது இயக்கம் தமிழ் மொழியைச் சகல துறைகளிலும் பரவச் செய்ய வேண்டிய நடவடிக்கைகளை காலத்துக்குக் காலம் மேற்கொண்டு வருகிறது.

#### கோயில்களில் தமிழ்

கொழும்பு தமிழ் இயக்கச் சார்பில் பேசிய திரு ஈழவேந்தன் தமது பேச்சின் தொடக்கத்திலேயே தமிழன் இந்நிலைக்குத் தாழ்ந்ததின் காரணம் தமிழர் தங்களையும் தமது தனிப் பண்பையும் மறந்ததேயாகும் என்றார்.

தமிழன் சிந்தனையிலே அவன் வியர்வையிலே உருவாகிய கோயில்கள்தான் தமிழகத்தின் கோயில்கள். அங்கு வண்டமிழில் வழிபாடு நடைபெறுவது ஏன் தமிழ் மனத்தை வடிகட்டும் முறையில் வடமொழிக் கூச்சல் கேட்கிறதென்று கேட்டார்.

#### வைபவங்களில் தமிழ்

அத்துடன் ஒவ்வொரு தமிழன் இல்லத்திலும் நடைபெறும் திருமண, மரண வீட்டு நிகழ்ச்சிகளில் தமிழிலேயே வாழ்த்தொலியும் இரங்கல் ஒலியும் கேட்க வேண்டும் என்றும் வேண்டினார் தமிழன் தனது வீட்டிலே, தனது திருக்கோயில்களிலே தனது பொது நிகழ்ச்சிகளிலே தமிழுக்கு இடமளிக்க மறுப்பானாயின் நாட்டிலே நந்தமிழ் நல ஆட்சி புரியும் என எதிர்பார்க்க முடியாதென்று அவர் கூறி முடித்தார்.

திரு சி. சிவரத்தினம் பேசுகையில் கூறியதாவது:

#### அரசியலில் தமிழ்

ஏனைய சமூகத்தினர் தங்கள் தாய்மொழியில் காட்டும் ஆர்வத்தால் தங்கள் மொழியை அரசியல் மொழியாக்கியுள்ளனர். சிங்கள மக்கள் தங்கள் மொழியில் கொண்டிருக்கும் அக்கறை தமிழ் மக்களிடத்தில் இல்லாமலிருப்பதாலேயே தமிழ் மொழி அரசியலிலிருந்து புறக்கணிக்கப்பட்டிருக்கிறது. தமிழ் மொழி அரசியல் உரிமை பெற தமிழ் பேசும் மக்கள் அனைவரும் ஒன்று சேர்ந்து போராட முன்வர வேண்டியது அவசியம்.

#### வெட்கக்கேடு

மானிப்பாய் இந்துக் கல்லூரி ஆசிரியை செல்வி புஷ்பா செல்வநாயகம் பேசுகையில்: தமிழரின் பெருமையை உலகறியச் செய்தவர் திருவள்ளுவரே என்றும் அவரே மனித சமுதாயம் தழைத்து ஓங்க வழிவகுத்தார் என்றும் கூறினார்.

மேலும் அவர் கூறியதாவது: மற்றைய மொழிகளிலும் பார்க்க தனித்தியங்கும் மொழி தமிழாகும். இம்மொழியிலேயே சிறந்த சங்க இலக்கியங்கள் உள்ளன என்றும் பொருள் புரியாத அன்னிய மொழிகளைப் பாவிப்பதை மேன்மையாகக் கருதி வாழும் மக்களும் நம்முள்ளே உளர் என்றும் இது தமிழினத்துக்கு வெட்கக் கேடானதாகும் என்றும் கூறினார்.

#### இயக்கம் அவசியம்

வித்துவான் க. ந. வேலன் பேசியதாவது:- ஏனைய மக்களைக் குறைசொல்வதை விடுத்து தமிழர்கள் தமிழிலே பேச வேண்டும்-தமிழிலே எழுத வேண்டும்-அரசியல் கருமங்கள் அனைத்திலும் தமிழ் இடம்பெறச் செய்ய வேண்டும். இப்படியான இயக்கம் இன்றைய நிலையில் மிக அவசியம் என்றார்.

#### எதிலும் தமிழ்

திரு புதுமைலோலன் கூறியதாவது: தமிழுக்கு முதன்மை கொடுக்க வேண்டிய தமிழாசிரியர்கள் தமிழின் மேன்மையை மறந்து தமது கைச்சாத்துகளையும், பாடசாலைச் சம்பளத் தாள்களையும், மற்றும் கடிதப் போக்குவரத்துகளையும் தமிழிலே செய்யாமை வெட்கக் கேடான செயலாகும். இனிமேலாகுதல் தமிழிலே செய்வார்களென எதிர்பார்ப்போம் என்றார்.

கொழும்பு தமிழியக்க உறுப்பினராகிய நாவேலன், இலங்கைப் பகுத்தறிவுக் கழகத்தைச் சேர்ந்த திரு த. வேலழகன் (செயலாளர்) சி. வெ. கண்ணன், அகில இலங்கைத் தமிழாசிரியர் சங்கக் காரியதரிசி

(13-ம் பக்கம் பார்க்க)

★ லதா ★ லதா ★ லதா ★ லதா ★ லதா ★ லதா ★ லதா ★ லதா ★ லதா ★ லதா ★ லதா ★ லதா ★ லதா ★ லதா ★ லதா ★ லதா ★ லதா ★ லதா ★ லதா ★ லதா ★ லதா ★ லதா ★ லதா ★ லதா ★ லதா ★ லதா ★ லதா ★ லதா ★ லதா

கண்ணைக் கவரும் வண்ணங்களிலும்

கருத்தைக் கவரும் வடிவங்களிலும் சிறந்த பாவனையிலும் உறுதியான சாயத்திலும்

முன்னணி வகிக்கிறது

லதா

கேம்பிரிக்

சட்டை, ஜாக்கெட், கவுண், பாவாடை, கியோனு முதலியவைகளுக்குச் சிறந்தது.

இலங்கை முழுவதிலுமுள்ள புடவை வியாபாரிகளிடம்

கிடைக்கும்.

ஏக விநியோகஸ்தர்கள்:

குண்டன்மால்ஸ்

26, கெய்ஸர் வீதி, கொழும்பு.

# அழிந்துபோன தமிழ் நூல்கள் பல-எஞ்சியிருப்பவை சில

## ஆயினும் தமிழ் அழியவில்லை-இது தனிச்சிறப்பு

### தமிழறிஞர் கி. ஆ. பெ. விஸ்வநாதம் சொல்கிறார்

#### இயல் நூல்கள்

அகத்தியம், அடி நூல், அணியியல், அவிநயம், அவிந்தமாலை.

ஆசிரியமாலை, ஆசிரிய முறை, ஆசிரியமுறி, ஆன்மவியல், ஆட்சி நூல்.

இந்திரம், இந்திரக் காவியம், இளந்திரையும்.

எதிர் நூல், ஐந்திரம், ஒப்பு நூல், ஓவிய நூல்.

கச்சபுடம், கடகண்டு, கனக்கியல், கலியானகாதை, கலைக்கோண்டுதண்டி, கலிப் பாடல், களிரியாவிரை, களவு நூல், கனவு நூல்.

காலகேசி, காக்கை பாடியம், குருகு, குண்டலகேசி, கோல் நூல்.

சங்கயாப்பு, சயந்தம், சாதவாகனம், சிந்தம், சிற்ப நூல், சிறு குர் இயுறை, செயன் முறை.

தந்திரவுரை, தகடூர் யாத்திரை, கும்பிப்பட்டு, தேசிக மாலை, நாக குமாரகாவியம், நீலகேசி.

பஞ்சமரபு, பதிறுறு படலம், பரிநூல், பழைய பரிபாடல்கள், பல்காப்பியம், பல்காயம், பன்மணிமாலை, பன்னிருபடலம், பறவைப் பாட்டு.

பாண்டியன்மரபு, பாட்டுமடை, பாண்டிய பாரதம், பெருபாரதம், புனர் பாவை, புதைய நூல், பூதபுராணம், பெரியபம்மம், பெருவல்லம், பெருவஞ்சி, போக்கியல்.

மணியாரம், மந்திர நூல், [illegible] முதுநாரை, முதுகுருகு, முத்தொள்ளாயிரம், முப்பெட்டுச் செய்யுள், மூவடிமுப்பது, யசோதர காவியம்.

வஞ்சிப்பாட்டு, வளையாபதி, வாய்ப்பியம், வியாழமாலை, விசாகன்பாரதம், வீரகன்பாரதம், வீரமாலை வீர விளக்கம், வீரவனுக்கம், வெண்டாளி, வேந்தியன் முறை, வைப்பியம், வைரமாலை, அருபகைத் தொள்ளாயிரம் வஞ்சத்தொள்ளாயிரம் முதலியன.

#### இசை நூல்கள்

சிற்றிசை, பேரிசை, இசை நூல் இசை நுணுக்கம், இசை விளக்கம், பஞ்சமரபு, பஞ்சமாபாரதீயம், பண்வமைதி, பண்விரி விளக்கம், பாட்டும் பண்ணும், ஆளத்தியமைப்பு, கருவியிலக்கணம், தாளசமுத்திரம், தாள வகையோந்து, இசைக்கூறு, பாடற் பண்பு முதலியன.

#### நாடக நூல்கள்

கத்து வரிருள நூல், கூத்த நூல், சயந்தம், செயிற்றியம் பாரதம், பாரத சேனுபத்யம், மதிவாணர், மதிவாணர் நாடகத் தமிழ் நூல், முறுவல் விளக்கத்தார் கூத்து, அடிவைப்பு, அடிவரிசை, உறுப்பாட்சி, முத்திரை விளக்கம், மெய்ப்பாடகுயல், முகக் குறிமுறை, கைக்குறிமுறை, இலனுரைக் குறி, தாளக் கட்டு, நாட்டிய விளக்கம், நிறுத்த முறை முதலியன.

#### மருத்துவ நூல்கள்

அகத்திய பன்னிருகாண்டம், போகர் எண்ணாயிரம், கோரக்கர் மூலிகைப்பயன் ஆயிரம், கொங்கணவர் மூவாயிரத்து நூறு, கோரக்கர் வெண்பா ஏழாயிரம், மச்சமுனி ஏழு காண்டம், சிவவாக்கியர் ஐந்து காண்டம், காசிபர்வண்ணம், ரோமாமுனி வடுகம், ராமதேவர் சந்தப்பா, நந்திசர் சந்தம், சங்குமாமுனிக் கலித்துறை, திருமூலர், திருமந்திரம் எண்ணாயிரம், பதஞ்சலி ஏழு காண்டம், சட்டமுனி நிகண்டு, சட்டமுனி இரண்டாயிரத்து ஏழு நூல், சாலங்கிநாதர் நாலுகாண்டம், போகர் ஏழு நூறு முதலியன. (தமிழ்ப் பணிக்குழு தமிழ் நாடு—1950).

#### இருந்தால்......?

இந்நூல்கள் அனைத்தும் தமிழ் மொழியில் தமிழ் அறிஞர்களால் தோற்றுவிக்கப் பெற்றவை. இவை அனைத்தும் அழிந்து போயின என்று சிற்சில பாடல்கள் கிடைத்து இருப்பதனாலும் வேறு பல நூல்களில் மேற்கோள்களாக வந்து இருப்பதனாலும் அறிய முடிகிறது. இன்னும் எத்தனை நூல்கள் இருந்தனவோ. என்னென்ன நூல்கள் இருந்தனவோ. என்னென்ன பெயரில் இருந்தனவோ. அவற்றுள் என்னென்ன புதையல் இருந்தனவோ. அவற்றின் ஆசிரியர் யார் யாரோ. அறிய முடியவில்லை. அவை அனைத்தும் இன்று இருந்தால் தமிழ் மொழி......? இனியேனும் எங்கு இருந்தாவது அகப்படுமானால் தமிழகம்——??

#### அழிந்த முறை

தமிழகத்தில் அடுத்தடுத்துத் தோன்றிய கடற்கோள்களால் அழிந்தவை சில. தமிழ் மன்னர்களின் ஆட்சி

(6-ம் பக்கம் பார்க்க)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# ஈழத் தமிழகத்தின் தேசிய கீதம்

இலங்கைத் தமிழரசுக் கட்சியின் பிரசாரக் கூட்டங்களின் ஆரம்பத்திலும் முடிவிலும் பாடுவதற்காக ஈழத் தமிழகத்தின் தேசிய கீதத்தை மறு பிரசுரஞ் செய்து உதவுமாறு பல அன்பர்கள் நாட்டின் பல பகுதிகளிலுமிருந்து கேட்டுக் கொண்டதற்கிணங்க இங்கு இலங்கை வாழ் தமிழ் பேசும் மக்களின் தேசிய கீதத்தை மீண்டும் பிரசுரிக்கிறோம்.

வேண்டிய அன்பர்கள் இதைக் கத்தரித்துப் பாதுகாத்துக் கொள்ள வேண்டும் என்றும் தமிழரசுக்கட்சி சார்பில் நடாத்தும் ஒவ்வொரு நிகழ்ச்சியின் முன்னரும் பின்னரும் தேசிய கீதம் இசைப்பதை ஒரு முக்கிய தேசியக் கடமையாகக் கொள்ள வேண்டும் என்றும் பணிவன்புடன் கேட்டுக் கொள்ளுகிறோம்.

பவனி ஊர்வலம் முதலியவற்றின் போது பாடுவதற்குப் பொருத்தமான தமிழரசுக்கட்சி வாலிபர் முன்னணியின் ஆர்ப்பாட்ட கீதத்தையும் இங்கு மீண்டும் தருகிறோம். அன்பர்களும் அபிமானிகளும் ஆதரவாளர்களும் வேண்டும்போதெல்லாம் பயன்படுத்திக் கொள்வார்களாக.

—ஆசிரியர்.

எடுப்பு

வாழ்க ஈழத் தமிழகம், வாழ்க இனிது வாழ்கவே
மலைநிகர்த்திவ் வுலகில் என்றும் தலைநிமிர்ந்து
வாழ்கவே

முடிப்புகள்

அமிழ்தை வென்ற மொழியினள் அருள் கனிந்த விழியினள்
அரிய பண்பு நிதியினள், அவனி மெச்சும் மதியினள்
மமதை கொண்ட பகைவரும் வணங்கும் அன்பு விதியினள்
வளரும் இருபத் தைந்து லட்சம் மக்கள் கொண்ட
பதியினள்—வாழ்க

வானம்பாடி போலமீன் கானம்பாடும் வாவிகள்
மலர்கனி குலுங்கிடும் எழில் மிகுந்த சோலைகள்
தேனும்பாலும் பாய்ந்திடச் செந்நெல் பொலியும் கழனிகள்
தெய்வகற்ப கத்தருக்கள் உய்வளிக்கும் மாநிலம்—வாழ்க

திருவளர் இலங்கையில் திகழ்வட கிழக்குடன்
சேர்வடமேல் திசைகளே தேர்ந்தஎல்லை யாகிட
தரளமணிகள் புரளவே தவழ் அலைகடல் முரசொலி
தகுதகுமென முழங்கிடத் தமிழரசுசெய் எமது
தாய்—வாழ்க

பட்டிப்பளை, மகாவலி, பயில் அருவி முத்தாறுகள்
பலவளங்கள் பொலியவே எழில் நடஞ் செய்துலவிடும்
மட்டுக்களப்பு, யாழ்நகர், மாந்தை, புத்த ளம், திரு
மலையொடு மலைத் தமிழர்கள் மலரடி தொழும்
இனியவள்—வாழ்க

## தமிழரசு வாலிப முன்னணியினரின்
### ஆர்ப்பாட்டப் போர்ப்பாட்டு

முத்திரைப் பல்லவி (Chorus)

அமுதத் தமிழர் நாட்டிலே
தமிழ ராட்சி நாட்டவே
திமுதி மென்ன தீரர்காள்
திரண்டு வாரீர் ஓட்டமாய் (அமுத)

1. வீறு பெற்ற தமிழராய்
வீர இளைஞர் கூடினோம்
கூறு நூறு செய்யினும்
குலையு மோநம் லட்சியம்? -(அமுத)

2. தந்தை வாழ்ந்த நாட்டிலே-நம்
தாயும் வாழ்ந்த நாட்டிலே
சொந்த மற்ற பிரஜையாய்-நாம்
நிந்தை யுற்று வாழ்வதா? -(அமுத)

3. ஆதி உலகத் தாய்மொழி
அமுத மனைய தமிழ் மொழி
நீதி யற்ற சூழ்ச்சியால்
நீர்மை குன்றிப் போவதா? -(அமுத)

4. வடக்கும் தெற்கும் பரந்திட
வளரி லங்கை ஆண்டநாம்
இடர்ப்பட் டயலார் காலிலே
ஈன முற்று வீழ்வதா? -(அமுத)

5. எங்கள் உரிமை கேட்கிறோம்
என்ன நாங்கள் ஊமையா?
தங்கள் நாட்டில் தங்களரசு
தமிழர் நாட்டல் தீமையா? -(அமுத)

6. ஈழம் வாழும் ஈரினம்
இணங்கி வாழ ஏற்றது
நாமும் இன்பம் தருவது
நல்ல தோர் சமஷ்டியே -(அமுத)

7. சூழும் அடிமை போக்கவே
சொந்த ஆட்சி பூக்கவே
தோழர் பணிகள் ஆற்றுவோம்
சுதந்தி ரப்போர் தோற்றுவோம்
-(அமுத)

3—2—52.




அல்வைச்சிவன், அல்வாய்.

கே: மனிதனால் இலகுவில் செய்யக்கூடியது என்ன? செய்ய முடியாதது என்ன?

ப: செய்யக்கூடியது போதனை. செய்ய முடியாதது சாதனை.

ஃ

ஏ. ஜி. எஸ். சுசிலா, கட்டுக்கலை.

கே: இலங்கையில் தமிழன் தலைநிமிர்ந்து வாழ முடியாதா?

ப: 'தலை நிமிர் தமிழா' என்றார் தமிழ் காங்கிரஸ் தலைவர் ஒரு காலத்தில். தமிழர்கள் எல்லோரும் தலை நிமிர்ந்து ஏழு பிரதிநிதிகளை ஒரே மூச்சில் பாராளுமன்றத்துக்கு அனுப்பினார்கள். ஆனால் தலைவர் தலையைக் கவிழ்ந்துகொண்டு சேனநாயகா மந்திரி சபையில் சரணடைந்து விட்டார். அதனால் தமிழ்மக்கள் தலையைத் தொங்கப்போட வேண்டியதாயிற்று. இதன் பின்னர் தான் தமிழரசுக் கட்சி தோன்றியது. இப்போது படிப்படியாக தமிழர் தலை நிமிர்ந்து நிற்கப் பழகிக் கொண்டார்கள். தமிழரசு ஸ்தாபிக்கப்பட்டதும் இலங்கையில் மட்டுமல்ல உலகிலேயே தமிழர் தலை நிமிர்ந்து நிற்கும் ஸ்திர நிலை யேற்படும்.

கே: குயுக்தியாரே, தங்களுக்குப் பிடித்தமான தமிழ் நாவலாசிரியர் யார்?

ப: இறந்தவர்களுள் கல்கி. இருப்பவர்களுள் யாருமிலர்.

ஃ

த மாசிலாமணி, மட்டக்களப்பு.

கே: கலைக்கும் கல்விக்கும் வித்தியாசம் என்ன?

ப: உத்தியோகத்தை நாடுபவர்கள் எல்லாம் விரும்பிக் கற்பது கல்வி. உளத்திருப்தியை நாடுபவர்கள் மட்டும் தேடிப் பயில்வது கலை.

ஃ

வை. விமலாராணி, தம்பிலுவில்.

கே: பிரதமர் திரு தஹநாயகாவின் எதிர்காலம் என்ன?

ப: அவருடைய எதிர்காலம் மூன்று அம்சத்துக்குள் அடங்கும். 1. இருந்த இடம் தெரியாமல் அவருடைய பெயர் புகழ் எல்லாம் அழிந்து போகலாம். 2. எல்லோருக்கும் மேலாக அவர் ஒரு சர்வாதிகாரியாகலாம். 3. அவர் சிருஷ்டிக்கும் பொலீஸ், ராணுவ பூதமே அவரை முடிவில் பலிவாங்கலாம்.

ஃ

செ. பாலசுப்பிரமணியம், வெள்ளவத்தை.

கே: அமரர் வன்னியசிங்கத்தின் மனைவி கோப்பாய்த் தொகுதிக்குப் போட்டியிடாததன் மர்மம் என்ன?

ப: இதில் மர்மம் ஒன்றும் கிடையாது. பிரதிபலன் எதுவுமில்லாத அரசியல் பலிபீடத்தில் தனது கணவனை மனப்பூர்வமாக அர்ப்பணித்து அதனால் கலங்கிநிற்கும் அந்த அம்மணி தாமும் அதில் ஈடுபட்டு ஐந்து பெண் குழந்தைகளையும் தவிக்கவிட விரும்பவில்லை. அவர் செய்தது சரியான முடிவுதான்.

ஃ

ஜெயவீந்திரன், கண்டி.

கே: நீ என்னு மென் குவிஷன் கேட்டா ஆன்சர் குடுக்க மாட்டேங்கிரே?

ப: நா என்னு சார் பண்ணட்டும். தவுசன் தவுசனு குவிஷன் வந்து குவிஞ்சா எந்த பேஜ்ஜில சார் ஆன்ஸர் போடறது?

ஃ

ச. பரமநாதன், யாழ்ப்பாணம்.

கே: ஈழத் தமிழ் ஒற்றுமை முன்னணித் தலைவரைப் பற்றித் தங்கள் அபிப்பிராயம் என்ன?

ப: பாவம் ஒற்றுமை என்ற பதத்தின் உண்மைப் பொருள் அறியாத பேதை அவர். இல்லாவிட்டால் ஒற்றுமை முன்னணியின் பேரால் ஒரு தொகுதியில் இரு அபேட்சகர்களுக்கு ஆதரவு அளிப்பாரா? இதில ஒற்றுமை எங்கே யிருக்கிறது? பருத்தித்துறையில் இந்த வேடிக்கைதானே நடைபெறுகிறது!

திருவாளர் குயுக்தியார்
மே/பா சுதந்திரன்.
த. பெ. 1183
கொழும்பு.—12

ஃ

சு. கந்தையா, மந்துவில்.

கே: முற்போக்கு என்றால் என்ன குயுக்தியாரே?

ப: அது ஒரு வித வயிற்றுப் போக்கு! குறிப்பிட்ட தேதியில் குறிப்பிட்ட காரியத்தைச் செய்து முடிக்க வக்கில்லாதவாய் ஐம்ப வீரர்கள் சேர்ந்துகொண்டு தேதியைப் பின்னுக்குப் பின்னுக்குப் போட்டுப் போகும் பிற்போக்கும் இந்த நாளில் முற்போக்கு என்று பெயர் பெற்றுவிடுகிறதே!

ஃ

அபுல்ஹஸன், கனிதபுர.

கே: உமது வீட்டில் அதிக பணமும் அதிக தங்க நகைகளும் உண்டா?


ப: கிடையவே கிடையா. இவைகளைச் சேகரிக்க நான் என்ன பாங்கரா. என் வீட்டில் மதிப்பரிய நிதியிருக்கிறது. ஆம், புத்தக வடிவில் உள்ளன நான் திரட்டும் புதையல்.

ஃ

ஆர். கணேஷ் ஈச்சலம்பற்றை.

கே: நமது பெண்களிடம் தாங்கள் ரஸிக்கும் கலை அம்சம் என்ன?

ப: ஆறு முழ சேலையை அழகாகச் சுற்றிக்கொண்டு, இரண்டு முழத்துக்கு தங்கள் தலையைப் பின்னிவிடுகிறார்களே இந்த இரண்டும்தான் நமது நாட்டுப் பெண்களின் கலையம்சத்துக்கு எடுத்துக் காட்டு.

திறமாக நீர்ப்பாய்ச்சுவதற்குகந்த நம்பிக்கைவாய்ந்த பம்ப்.

விங்கெட்

நிர்மாண இயந்திரங்கள் உற்பத்தி செய்யும் உலகப்பிரசித்திபெற்ற மெஸ்ஸர்ஸ் விங்கெட் லிமிட்டெட் ஸ்தாபனத்தாரால் தயாரிக்கப்பட்ட இந்த அடக்கமான, உறுதிவாய்ந்த தண்ணீர் பம்ப்கள், அதிககாலம் மிகத்திறமான சேவையைத் தருகின்றன.

இவற்றின் பராமரிப்புச் செலவு மிக மிகக் குறைவு. லிஸ்டர் பெட்டர் போட்டி விலைகளில் கிடைக்கும். வில்லியர்ஸ் 4 ஸ்ரோக் பெற்றோல்/மண்ணெண்ணெய் என்ஜின்கள் பாவனைக்குச் சிக்கனமானவை. எம்மிடம் அவற்றின் பலரக உபகரணங்கள் உள்ளன. ஹோஸ் குழாய்களும், கை உருளைகளும் கிடைக்கும்.

உப விநியோகஸ்தர்கள்:
ராஜரத்னம் அன் கம்பெனி,
244, கே. கே. எஸ். ரோடு,
யாழ்ப்பாணம்.

முழு விபரங்களுக்கு எங்களை விசாரிக்கவும்:

தி கொழும்பு கொம்மேர்ஷியல் கம்பெனி லிமிட்
(பெரிய பிரித்தானியாவில் இணைக்கப்பட்டது. அங்கத்தவர்களின் பொறுப்பு வரையறுக்கப்பட்டது)
தபாற்பெட்டி 38, கொழும்பு.
காட்சிஅறை: ஜெனரல் லேக்ஸ்ரோட்
போன்: 71861.

உயர்ந்த சேவை

1½" மோடல்-மணித்தியாலம் 1500 - 6000 கலன் இறைக்கிறது.
2" மோடல்-மணித்தியாலம் 1680 - 11000 கலன் இறைக்கிறது.
3" மோடல்-மணித்தியாலம் 4800 - 16800 கலன் இறைக்கிறது.
டிலிவரிக்கேற்ப ஹெட்டும், சக்ஷன் லிவ்ட்டும தேவை
ஆகக் கூடுதல் முழு ஹெட் 70 அடி
ஆகக் கூடுதல் சக்ஷன் லிவ்ட் 25 அடி

எமது பிரதிநிதியை விசாரிக்கவும்:
எம். பூபாலசிங்கம,
244, கே. கே. எஸ், ரோட்,
யாழ்ப்பாணம். போன்


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

யாழ்ப்பாணத்தில்

# 'என். எம். இளைஞருக்கு எழுதிக் கொடுத்த உறுதி'

## தினப்பத்திரிகைச் செய்தி தவருனது என்கிருர் இளைஞர்

யாழ்ப்பாணத்தில் (உடுவில் தேர்தல் பிரசாரக் கூட்டத்தில்) டாக்டர் என். எம். பெரேரா தமிழ் இளைஞர் ஒருவருக்கு எழுத்தில் வாக்குறுதி அளித்ததாகத் தினசரிப் பத்திரிகை ஒன்றில் வந்த செய்தியில் கூறப்பட்டது சரியல்ல என்று குறைபட்டு சம்பந்தப்பட்ட இளைஞர் மிக்க ஆத்திரத்தோடும் வேதனையோடும் சுதந்திரனுக்கு ஒரு கடிதம் எழுதியிருக்கிருர்.

தமக்கு அந்தச் செய்தியால் கறை ஏற்பட்டு விட்டதென்றும் அதைப் போக்கியாக வேண்டும் என்றும் தமது கடிதத்தில் உடுவில் நேச ஒழுங்கையில் வசிக்கும் அந்த இளைஞர் கேட்டிருக்கிருர். நடந்த விஷயமே வேறு என்றும் செய்தி தினப் பத்திரிகையில் பிழையாக வெளிவிடப்பட்டு விட்டது என்றும் அவர் தெரிவிக்கிருர்.

மேற்படி வாலிபர் தமது கடிதத்தில் தெரிவித்திருப்பதாவது:

"டாக்டர் என். எம். பெரேராவிடம் ஒரு கேள்வித் தாளை நீட்டி அதற்கு அவரைப் பதில் கூறும்படி நான் கேட்டபோது விமானத்துக்கு நேரமாகி விட்டதென்று அவர் தட்டிக் கழித்தார். திரு பி. நாகலிங்கம் எனது கேள்வியை வாங்கிப் படித்து விட்டு தமது சட்டைப் பைக்குள் பதுக்கி விட்டார். பதிலை எதிர்பார்த்த நான் எனது கேள்வியை என். எம். இடம் கொடுக்கும்படி அவரை வேண்டினேன். அவர் தாமே அந்தக் கேள்விக்கு பதில் கூறுவதாக முன் வந்தார். நான் அதை விரும்பவில்லை. என். எம். இடம் என் கேள்வித் தாளைக் கொடுக்கும்படி அவரை வற்புறுத்தினேன். அவர் என்னிடம் கொடுத்தார்.

"நான் என். எம். மிடம் அதைக் கொடுத்து பதில் கேட்டேன். அவர் "நான் சமசமாஜக் கட்சியின் தேர்தல் விஞ்ஞாபனத்தில் சொல்லப்பட்டதற்கு இணங்க நடந்து கொள்வேன் என்று உறுதி அளிக்கிறேன்" என எழுதிக் கையொப்பம் இட்டுத் தந்தார். ஆனல் மக்களுக்கு எவ்வித உரிமை வழங்குவது தங்கள் நோக்கம் என்பதைக் கூறவில்லை.

நடந்தது இவ்வளவு தான். தினப் பத்திரிகையில் செய்தி வெளிவிடப்பட்டிருந்தபடி நான் எதையும் சொல்லவில்லை. இதுவரை நான் ஒரு அரசியல் கட்சியை ஆதரித்து வந்தேன் என்றும் இனிமேல் சமசமாஜக் கட்சியை ஆதரிக்கப்போகிறேன் என்றும் நான் கூறவே இல்லை. இப்படிச் செய்தி வெளியிட்டதால் எனக்குக் கறை ஏற்பட்டு விட்டது. இதைப் போக்க வேண்டும்." —இப்படி வே. சிவமயம் என்ற அந்த வாலிபர் தமது கடிதத்தில் எழுதியிருக்கிருர்.

# இரண்டு இடங்களில்....

(1ம் பக்கத் தொடர்ச்சி)

செய்து வருகிறது.

ஒரு கூட்டம் யாழ்ப்பாணம் முத்திரைச் சந்தையடியிலும், மற்றொரு கூட்டம் சாவகச்சேரி அரசினர் மைதானத்திலும் நடைபெறும்.

இரு கூட்டங்களும் எதிர் வரும் 30ந் தேதி சனிக்கிழமை மாலையில் ஏககாலத்தில் நடைபெறும். தமிழரசுக் கட்சித் தலைவர்களும் பிரமுகர்களும் இரு கூட்டங்களிலும் கலந்து கொண்டு சொற்பெருக்காற்றுவார்கள்.

பெப்ரவரி மாதம் 15ந் தேதி முதல் 22ந் தேதிவரை தமிழரசுக் கட்சித் தலைவர்கள் மட்டக்களப்பு மாவட்டத்தில் சுற்றுப்பிரயாணம் செய்து தேர்தல் பிரசாரம் நடத்துவார்கள் என்று தெரிகிறது.

திருவாளர்கள் எஸ் ஜே. வி. செல்வநாயகம், டாக்டர் ஈ. எம். வி. நாகநாதன் அ. அமிர்தலிங்கம், அட்வகேட் எம். பாலசுந்தரம், கே. துரைரத்தினம், டி. ஏகாம்பரம், என். ஆர். இராஜவரோதயம், செனட்டர் ஜி நல்லையா உட்பட மற்றும் பல பிரமுகர்கள் மட்டக்களப்புக்கு விஜயம் செய்யவிருக்கிருர்கள்.

மார்ச் மாதம் முதலி வாரத்தில் இவர்கள் திருகோணமலை, மூதூர்த் தொகுதிகளில் சுற்றுப்பிரயாணம் செய்வார்கள் என்றும் பொதுச் செயலாளர் டாக்டர் நாகநாதன் தெரிவித்தார்.




நீங்கள் இல்லாவிட்டால் ?

ஒரு சாதாரண வருமானம் உள்ள மனிதனின் கவலைக்கு முக்கிய காரணம் பணத் தட்டுப்பாடுதான். நீங்கள் இல்லாத காலத்தில உங்கள் குழந்தைகளின் கல்வியை யார் கவனிப்பார்கள், உங்கள் குடும்பம் எப்படிக் காலந் தள்ளும்—என்னுங் கேள்விகள் உங்களுக்கு மனக் கவலையாக இருக்கும். ..... பாதுகாப்பும், மன நிம்மதியும் கூட்டுறவு இன்சூரன்ஸ் பொலிசியை எடுத்தவுடன் உங்களுக்குக் கிடைத்துவிடும்.

கூட்டுறவு இன்சூரன்ஸ் இலாகா

CWE

வாழ்க்கை, நெருப்பு, கப்பற் பகுதி, மோட்டார், பொது விபத்துகள் ..... இன்சூரன்ஸ் உடன் சேவை புரிகிறது.

....., கொழும்பு 1

போன்: 5266, 5267.


## சினிமா விமர்சனம்

# அவள் யார்

படத்திலே ஆரம்பத்தில் சொக்கிப் போவது தவிர்க்க முடியாதது. பண்டரிபாயை அத்தனை சிறப்பாகப் பயன் படுத்தி இருக்கிருர் டைரக்டர் கே. ஜே. மகாதேவன். புதுப் பாணியில் ஓடத் தொடங்கி இடையில் விழுந்தடித்து கடைசியில் ஓய்ந்து போகிறது. கொலைக் குற்றம் சாட்டப்பட்டவன் நீதிபதியின் மனைவி என்பதும் அவள் உண்மையில் குற்றவாளி அல்ல-விடுதலை செய்யப் பட வேண்டியவள் என்பதும் இன்னும் சற்று விறு விறுப்பாகக் காட்டப்பட்டிருக்குமாஞல் படம் முதல்தரமானதாக அமையும்.

இப்போதும் பரவாயில்லை. கதையிலே நிறையச் சம்பவங்கள் இருக்கின்றன. வித்துவான் வே. இலட்சுமணனின் வசனத்திலே ஜீவன் இருக்கிறது. நடிப்பிலே அவரவர் முத்திரைகள் விழுகின்றன.

குறிப்பாக சிவாஜி, சகஸ்ரநாமம், ரங்கராவ், டி ஆர். ராமச்சந்திரன், பண்டரிபாய், சந்தியா—இவர்களின் நடிப்பை இமை கொட்டாமல் பார்த்து ரஸிக்கலாம்.

பாடல்களும் ஆடல்களும் சற்று அதிகமாகிவிட்டதாயினும் அவற்றுள் சில 'ஆஹா' போட்டு ரஸிக்கக்கூடியவை. கம்பன் குட்டிக்கதை ஆட்டம் கவர்ச்சிகரமானது.

மஞ்சள் பத்திரிகைகள் பிழைப்பு நடத்தும் விதம் கன கச்சிதமாக இந்தப் படத்தில் காட்டப்படுகிறது. கலை உலக நலனில் அக்கறை கொண்ட ரஸிகர்கள் சில உண்மைகளை அறிந்து கொள்ள இது நல்ல வாய்ப்பு.

கொடுக்கும் பணத்துக்கு கேடு இல்லை. பார்க்கக் கூடிய படம். கொழும்பு சென்ட்ரல் படமாளிகையில் காட்டுகிருர்கள்.

### யாழ்ப்பாணப்

(1-ம் பக்கத் தொடர்ச்சி)

கள் மழையின் காரணமாக உரிய காலத்தில் யாழ்ப்பாணத்துக்கு திரும்ப முடியாது போனதும் கூட்டம் தவிர்க்கப்பட்டதற்கு ஒரு காரணமாகும்.

"பிரஸ்தாப கூட்டம் நடைபெறும் என்று யாழ்ப்பாணத்தின் பல பாகங்களிலுமிருந்து ஆயிரக் கணக்கான அனுதாபிகளும், ஆதரவாளர்களும் பட்டணம் வந்து திரும்பியதாக அறிந்து மிகவும் கவலையுறுகிறேம். எதிர்பாராத வகையில் நடைபெற்ற இந்த தடங்கல் பற்றி பொதுமக்கள் எம்மை மன்னிக்க வேண்டும் என்று பணிவோடு கேட்டுக் கொள்ளுகிறேம்."

### கலைச்செல்வி கலாமன்றம்

கலைச்செல்வி கலாமன்றத்தின் ஆரம்ப விழா சென்ற 14-1-60ல் புதிய சோனகத் தெருவில் நடைபெற்றது. கூட்டத்திற்கு திரு க. வீரசிங்கம் தலைமைவகித்தார். திரு சி. செ. கணேசபிள்ளை "நாடகக் கலை" என்னும் பொருள்பற்றி சொற்பெருக்காற்றினுர்.

கீழ்க்கண்டவர்கள் மன்ற உத்தியோகத்தர்களாக தெரிவுசெய்யப்பட்டனர்: தலைவர் திரு த. வீரசிங்கம், செயலாளர்: திரு சி. செ. கணேசபிள்ளை, துணைச் செயலாளர்: திரு நா. வீரசிங்கம், பொருளாளர்: திரு பொ. திருஞானசம்பந்தர். கணக்கு பரிசோதகர்கள்: திருவாளர்கள் அ. பொன். நடேசன், இ சுப்பிரமணியம்.

பதினெரு பேர்கொண்ட நிர்வாக சபை ஒன்றும் அமைக்கப்பட்டது.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# பொருளாதாரப் பிரச்னையைத் தீர்ப்பதோடு எல்லாப் பிரச்னைகளுமே தீர்ந்துவிடப் போவதில்லை

## சமஷ்டி அரசமைப்பில் நமது பிரதேசத்தை நாம் வளம் கொழிக்கச் செய்யலாம்

### கொம்யுனிஸ்டு வாதத்துக்கு தமிழரசுத் தந்தை பதில்

(1ம் பக்கத் தொடர்ச்சி)

வேண்டும் சமஷ்டி அரசமைப்பில்தான், அரசியலில் எமக்குள்ள ஆட்சிப் பங்கு கிடைக்கும்; தமிழ் மொழி பெருமை பெறும்; உரிமைகள் பாதுகாக்கப்படும்"—இவ்வாறு திருமதி வசந்தா அப்பாத்துரை கூறி முடித்தார்.

கொம்யுனிஸ்டுக் கட்சி சார்பில் திரு என். சண்முகதாசன் பேசினார். அவர் கூறியதாவது:-

#### பொருளாதாரப் பிரச்னை

"இலங்கையில் உள்ள பிரச்னை பொருளாதாரப் பிரச்னை. இது பெரும்பான்மைச் சமூகத்துக்கும் சிறுபான்மைச் சமூகத்துக்கும் பொதுவான பிரச்னை. இதைத் தீர்த்தால் இனக்குரோதம் மறையும்; அமைதி நிலவும்; நாடு முன்னேற்றப் பாதையில் செல்லும் என்பது கொம்யுனிஸ்டு கட்சியின் உறுதியான நம்பிக்கையாகும்.

"1958-ம் ஆண்டுக் கலவரத்தின்போது தென் இலங்கையிலுள்ள தமிழர்கள் வடக்கு கிழக்கு மாகாணங்களுக்கு ஓடித் தப்பியது பற்றி திருமதி வசந்தா அப்பாத்துரை குறிப்பிட்டார். ஓடியவர்கள் அதே வேகத்தில் திரும்பி வந்துவிட்டார்கள். பொருளாதாரப் பிரச்னைதான் இதற்குக் காரணம்.

#### மலைநாட்டுத் தமிழரும் என். எம்மும்

"இங்கு தொழில் அபிவிருத்தி இல்லை. வேலை வசதி அளிப்பது மலைநாட்டுத் தோட்டங்களும் அரசாங்க சேவையுமே. தோட்டத் தொழிலாளர்களை நாடு கடத்தினால் தமக்கு அதிக வேலை வசதிகள் கிடைக்கும் என்று சிங்களவர்கள் நம்பினார்கள். 1939-லேயே இந்தியரை நாடு கடத்த வேண்டும் என்ற கோஷம் கிளப்பப்பட்டது. அப்போது டாக்டர் என். எம். பெரேரா அதை ஆதரித்தார். இன்று வேறு விதமாகக் கொக்கரிக்கிறார்.

"அரசாங்க சேவையைப் பொறுத்தவரையில் சிங்களத்தை அரசாங்க மொழியாக்கினால் அந்த மொழியைத் தாய் மொழியாகக் கொண்ட தமக்கு அதிகமாக உத்தியோகங்கள் கிடைக்கும் என்று சிங்களவர்கள் நம்பினார்கள். தமிழர்கள் அஞ்சினார்கள். இதனால்தான் பிரச்னை கிளப்பியது. அடிப்படையில் உள்ளது பொருளாதாரம் தான்.

#### சமஷ்டிக்கு நாம் மாறல்ல

"சமஷ்டி அரசமைப்பினால் இந்தப் பிரச்னையைத் தீர்க்கலாம் என்று நம்புகிறது தமிழரசுக் கட்சி. சமஷ்டி அரசமைப்புக்கு நாம் மாறல்ல. அதை வரவேற்கிறோம். ஆனால் சோஷலிஸ நாட்டில்தான் சமஷ்டி நன்றாகச் செயல்படும். முதலாளித்துவப் பொருளாதார நடைமுறைகள் உள்ள எந்த ஒரு நாட்டிலும் சமஷ்டி எந்தப் பிரச்னையையும் தீர்க்கவில்லை. ஆகவே இலக்கு சோஷலிஸ பொருளாதாரத் திட்டத்தில்தான் இருக்க வேண்டும்.

#### எதிர்ப்பு கூடாது

"நாட்டில் உள்ள சகல மக்களும் ஒன்றுபட்டு இந்த இலட்சியத்துக்காக உழைத்தால் விரைவில் பயன் அடையலாம். ஒற்றுமை ஏற்பட தமிழரசுக் கட்சி விடுகிறதா? சிங்களவர்கள் பெரும்பான்மையினர். அவர்களோடு சிறுபான்மையினரான தமிழ் பேசும் மக்கள் சண்டைக்கு நின்று என்ன ஆவது? அவர்களை நாம் புண்படுத்தித் தூண்டிவிடுவதால் யாருக்கு நஷ்டம்? 1958-ல் தமிழரசுக் கட்சி வவனியாவில் மாநாடு நடத்தியது. தமிழர்களுக்கு எவ்வளவு நஷ்டம்? ஏன் இதெல்லாம்? சிங்களவர்களுடைய ஒத்துழைப்பைப் பெற நாம் முயல வேண்டும். எதிர்த்து நின்று பயன் இல்லை"—இவ்வாறு திரு சண்முகதாசன் கூறிமுடித்தார்.

தமிழரசுத் தந்தை திரு எஸ். ஜே. வி செல்வநாயகம் தொடர்ந்து பேசுகையில் குறிப்பிட்டதாவது:-

#### பிரச்னைகளுக்கு தீர்வு

"இனப் பிரச்னை, மொழிப் பிரச்னை, மதப் பிரச்னை, கலாசாரப் பிரச்னை, உத்தியோகப் பிரச்னை, பிரதேசப் பிரச்னை, ஆட்சிப் பிரச்னை, பொருளாதாரப் பிரச்னை என்று இப்படிப் பல பிரச்னைகள் உண்டு. தீர்க்கப்பட வேண்டிய பிரச்னைகளுள் பொருளாதாரப் பிரச்னையும் ஒன்றாகும். அதைத் தீர்த்துவிட்டால் மட்டும் கொம்யுனிஸ்டு நண்பர்கள் சொல்வதுபோல எல்லாப் பிரச்னைகளுமே ஒழிந்துவிடா.

#### கலவரத்தின்போது நடந்தது

"1958 கலவரத்தின்போது தென் இலங்கையிலிருந்து வடக்கு. கிழக்கு மாகாணங்களுக்கு சென்று பாதுகாப்பு பெற்ற தமிழர்களைப் பொருளாதாரப் பிரச்னையே மீண்டும் தென்இலங்கைக்குக் கொண்டு வந்துவிட்டதாக நண்பர் சண்முகதாசன் சொன்னார். அதேபொருளாதாரப்பிரச்னைதான் வடக்கு கிழக்கு மாகாணங்களில் இருந்து பிழைப்பு நடத்திய சிங்களவர்களை திரும்பவும் அதே மாகாணங்களுக்குச் செல்ல வைத்தது. தமிழர்களைப் போலத்தான் சிங்களவர்களும் கலவரத்தின்போது இடம் பெயர்ந்து சென்றார்கள். பின்னர் திரும்பினார்கள். தமிழர்களை ஏற்றிப் பறித்த கப்பல்கள்தான் சிங்களவர்களையும் ஏற்றிப் பறித்தன. இதில் தமிழர்களை மட்டும் நையாண்டி செய்ய இடமில்லை.

#### கட்சியின் கடமை

"இன்று தமிழ் பேசும் இனம் ஒரு முக்கியமான கட்டத்தை அடைந்திருக்கிறது. தமிழ் பேசும் இனம் இந்த நாட்டில் வாழப்போகிறதா? இறந்தொழியப் போகிறதா? இதற்கு அவசியம் விடை காண வேண்டியிருக்கிறது. இனம் வாழ வேண்டும். அப்புறந்தான் மற்ற எல்லாம். தமிழ் பேசும் இனத்துக்கு வாழ்வு தேடுவதுதான் அந்த இனத்தின் நலனில் அக்கறை உள்ள எந்தக் கட்சியினதும் முதல் கடமை. அந்தக் கடமையைத் தமிழரசுக் கட்சி ஏற்றிருக்கிறது. கடந்த 12 வருட காலமாக கண்ணுங் கருத்துமாக அந்தக் கடமையைச் செய்து வருகிறது.

#### தாயகம் வேண்டும்

"ஒரு இனம் வாழ அதற்குத் தனது என்று ஒரு பிரதேசம் வேண்டும். தன்னுடைய தனித்தன்மையோடு நாட்டின் தேசிய [illegible] தலையெடுத்து இருப்ப[illegible] பிரதேசம் அல்லது தாயகம் இல்லாமல் முடியாது. உறைவிடம் அவசியம் வேண்டும். உறைவிடம் இல்லாத நாடோடி இனம் நல்லபடியாக வாழ முடியாது. தமிழ் பேசும் இனத்தைப் பொறுத்தமட்டில் அதற்கு தாயகம் உண்டு. வடக்கு கிழக்கு மாகாணங்கள் பரம்பரையாகவே தமிழ்ப் பிரதேசங்கள்.

#### குடியேற்றம்: பெரிய ஆபத்து

"தமிழ்ப் பிரதேசங்களைப் பறிபோகாமல் பாதுகாப்பதிலேயே தமிழ் இனத்தின் வாழ்வு தங்கியிருக்கிறது. 1958ம் ஆண்டுக் கலவரம் இதை ஓரளவுக்கு எடுத்துக் காட்டிவிட்டது. வடக்கு கிழக்கு மாகாணங்கள் தமிழ் பேசும் மக்களுடையனவாக இருந்தபடியால்தான் தமிழ் பேசும் மக்கள் அங்குசென்று தப்ப முடிந்தது. இப்படியான அனுகூலம் தமிழ் பேசும் மக்களுக்கு இருப்பதை விரும்பாத அரசாங்கம் தமிழ்ப் பிரதேசங்களில் குடியேற்றத் திட்டங்கள் என்ற பெயரில் சிங்களவர்களை குடியேற்றி வருகிறது. அதன்மூலம் தமிழ் பிரதேசங்களைச் சிங்களப் பிரதேசங்களாக்க விழைகிறது, தமிழ் பேசும் மக்களை அவர்கள் தம் சொந்தப் பிரதேசத்திலேயே சிறுபான்மையினராக்க முனைகிறது. இதுதான் எல்லாவற்றிலும் பெரிய ஆபத்து. இதை தடுத்து நிறுத்தத் தமிழரசுக் கட்சி நடவடிக்கைகள் எடுத்து வருகிறது. ஓரளவு வெற்றியும் கண்டிருக்கிறது.

> **அறிமுகப்படுத்துகிறோம்**
>
> கலைஞர்கள் அறிமுக வரிசை இட நெருக்கடி காரணமாக இவ் வாரம் வெளியிடப்படவில்லை. அடுத்த வாரம் வழமை போல் பிரசுரிக்கப்படும்.
>
> — ஆசிரியர்.

#### உடன்படிக்கை

"காலஞ்சென்ற திரு பண்டாரநாயகாவுக்கும் தமிழரசுக் கட்சிக்குமிடையே செய்து கொள்ளப்பட்ட உடன்படிக்கையில் குடியேற்றம் முக்கியமான அம்சமாகக் குறிப்பிடப்பட்டிருந்தது. தமிழ்ப் பிரதேசங்களுக்கு பிரதேச சபைகள் ஏற்படுத்துவது என்றும் தமிழ்ப் பிரதேசத்தில் குடியேற்றம், நீர்ப்பாசனம் சம்மந்தமான விவகாரங்களில் பிரதேச சபைகளுக்கு முக்கிய அதிகாரங்கள் அளிப்பது என்றும் ஏற்றுக்கொள்ளப்பட்டது. அந்த உடன்பாட்டின்படி காரியம் நடந்திருக்குமானால் தமிழ் பேசும் மக்கள் சற்று ஆறுதல் அடைந்திருக்கலாம்.

#### சமஷ்டி ஆட்சி வேண்டும்

"நமது பிரதேசம் நமதாகி, அதில் நாம் நமது விஷயங்களைப் பிறர் தலையீடு இன்றிப் பிரதேச சபை மூலம் கவனித்துக்கொள்வதானாலும் அந்த ஏற்பாடு சமஷ்டி அரசமைப்பின் கீழ் உள்ளதாக இருக்க வேண்டும். ஒற்றையாட்சியில் கிடைக்கும் விடுதலையோ அதிகாரப்பரவலோ நிரந்தரமானதல்ல. ஒற்றையாட்சியில் இன்றைய நிலைமையை நாளை பதவிக்கு வரும் இன்னொரு அரசாங்கம் மாற்றிவிடலாம்- சில வேளைகளில் முதலில் இணங்கிய அதே அரசாங்கமே பிணக்குற்றுத் தன் முடிவை பின்னர் மாற்றியமைத்துங் கொள்ளலாம். சமஷ்டி அரசமைப்பில் அது முடியாது. அதனால்தான் இந்த நாட்டில் சமஷ்டி அரசமைப்பு வேண்டும் என்றும் அந்த அமைப்பின் கீழ் தமிழ் பேசும் மக்கள் தம்மைத் தாமே ஆளும் உரிமை பெற வேண்டும் என்றும் தமிழரசுக் கட்சி வற்புறுத்தி வருகிறது.

#### எல்லோருக்கும் விஷயம் புரிகிறது

"சமஷ்டி ஆட்சி முறை பற்றி நாம் பன்னிரண்டு ஆண்டுகளுக்கு முதல் பேசத் தொடங்கியபொழுது பலரும் அதைப் பொருட்படுத்தவில்லை. பொருளற்ற பேச்சு என்று சொன்னார்கள். நடக்காது என்றார்கள். ஆனால் இப்போது அவர்களுக்கெல்லாம் விஷயம் புரிந்துவிட்டது. திரு. பிலிப் குணவர்த்தனவின் தலைமையில் உள்ள எம். ஈ. பி. கட்சி பிரதேச சுயாட்சித் திட்டத்தை ஒப்புக்கொள்கிறது. கொம்யுனிஸ்டு கட்சியும் ஒப்புக்கொள்கிறது. தமது கட்சி சமஷ்டி ஆட்சி முறையை ஏற்றுக் கொள்கிறது என்று சற்று முன்னர் பேசிய கொம்யுனிஸ்டு நண்பர் சண்முகதாசன் பகிரங்கமாகக் கூறினார்.

#### கனடா உதாரணம்

சமஷ்டி ஆட்சி முறை சோஷலிச நாட்டில்தான் சரிப் போகும் என்றும் எந்த ஒரு முதலாளித்துவ நாட்டிலும் சமஷ்டி ஆட்சி முறை பிரச்னைகளைத் தீர்த்ததாக இல்லை என்றும் நண்பர் சண்முகநாதன் சொன்னார். தமிழரசுக் கட்சி, சோஷலிஸ பொருளாதாரக் கொள்கைகள் அமுல் நடத்தப்படும் நாடுகளிலும் கூடச் சமஷ்டி ஆட்சி முறை தேசிய இனப் பிரச்னைகளுக்குத் தீர்வு கண்டிருப்பதை மறக்கவோ மறைக்கவோ விரும்பவில்லை. கனடா எப்படிப்பட்ட நாடு? முதலாளித்துவ நாடு என்று தானே சொல்கிறார்கள். அங்கு சமஷ்டி ஆட்சி நடக்கிறது. அங்கு இருந்த தேசிய இனப் பிரச்னைகளுக்கு எல்லாம் சமஷ்டி அரசமைப்பு முறை முற்றுப் புள்ளி வைத்திருக்கிறது. இந்த உண்மையை ஏன் பதுக்க வேண்டும்?

#### கொம்யுனிஸ்டுகள் செய்வார்களா?

"சோஷலிஸ பொருளாதார அமைப்பு உள்ள தேசத்தில்தான் சமஷ்டி சாத்தியமாகும் என்றால் கொள்கையளவில் சமஷ்டியை ஏற்றுக் கொள்பவர்கள் இலங்கையில் சமஷ்டி அரசியல் முறையை முதலில் ஏற்படுத்திவிட்டு பின்னர் அதற்கான பொருளாதாரத் திட்டத்தை அமுலாக்க முயற்சிக்கலாமே! இனப் பாதுகாப்புக்கு சமஷ்டி அவசியம் தேவைப்படுவதால் அதற்கு முதல் இடம் கொடுப்பது தானே முற்போக்குக் கொள்கையாக இருக்க முடியும்!

"தவிரவும் அரசியல் உரிமை கிடைத்த பின்னரே பொருளாதார அபிவிருத்தியை ஏற்படுத்தச் சரியான வாய்ப்புகள் ஏற்படும். அந்த வாய்ப்புக்களைப் பயன்படுத்தி பொருளாதாரத் துறை அபிவிருத்தி ஏற்படுத்தத் தவறுபவர்கள் கையாலாகாதவர்கள். அவர்கள் தலை குனிய வேண்டியது தான்.

(9-ம் பக்கம் பார்க்க)

பணம்! சேமியுங்கள்!! பணம்!!!

இன்றே நாஷனல் பாட்டரிகளைப்




பாவிக்க ஆரம்பித்து
அதிக லாபம் பெற்று
ஆனந்தியுங்கள்.
நீடியகாலம் பாவிக்கிறது



விலையோ
மிகக் குறைவு

இறக்குமதியாளர்கள்!

எஸ். யூ. முகம்மது ஹாஜியார்,

[illegible] கொழும்பு. போன்: 7653 ★ 143, மெ பல்லிதி கால், போன் 52

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# என். எம். பெரேராவின் ஆரம்ப சூரத்தனம் அடியோடு போய் விட்டது

## குடியேற்றத் திட்டத்தை தொடக்கத்தில் கண்டித்தவர் இப்போது 'கப் சிப்'

### சிங்களவருக்கு நீதியை எடுத்துச் சொன்னாலும் தமது கட்சிக்கு ஆபத்து என்று அஞ்சுகிறார்

### சமசமாஜிகளை நம்பினால் தமிழருக்கு அதோகதிதான்

டொனமூர் அரசியல் திட்டம் 1931-ம் ஆண்டில் அமுலுக்கு வந்த நாள் தொட்டு இலங்கை அரசாட்சியை நடாத்தி வரும் சிங்கள அரசாங்கம் வடக்கு கிழக்கு மாகாணங்களில் சிங்களவரைத் திட்டமிட்டுக் குடியேற்றி வருகின்றது. பெயரளவில் ஜன நெருக்கடியில்லாத வரட்டுப் பிரதேசங்களில் நீர்ப்பாய்ச்சல் வசதியுடன் விவசாயத் தொழிலைப் பெருக்குவதற்காக காணி நிலம் இல்லாதவர்கட்குக் குடியேற்ற வசதி செய்தல் என்று இதைக் கூறுவர். உண்மையில் பரம்பரை பரம்பரையாக தமிழர் வாழ்ந்து வந்த இடங்களில் சிங்களவரைக் குடியேற்றி இலங்கையில் எப்பாகமும் தமிழகமாக இல்லாது ஒழிப்பதற்காகச் செய்யும் சதித் திட்டமே இது.

இக்குடியேற்றத் திட்டம் தோன்றிய காலம்தொட்டு இன்றுவரை சமசமாஜக் கட்சியினர் செய்தவற்றையும் அனுஷ்டித்து வரும் கொள்கைகளையும் ஆராய்வது சமசமாஜ மந்திரத்தில் லயித்து உணர்விழந்து இருக்கும் ஒரு சில தமிழ் வாலிபருக்கு தெளிவான சுயபுத்தி உண்டு பண்ணுவதற்கு உதவியாக அமையும் என்று நம்புகிறோம்.

#### குடியேற்றத் திட்டத்தின் தோற்றம்

டொனமூர் அரசியல் திட்டம் 10ல் 7 பங்கு சுயராச்சியம் கொடுத்ததாகக் கூறி அத்திட்டத்தை வரவேற்ற காலஞ்சென்ற திரு டி. எஸ். சேனநாயகா அன்றுதொட்டு 1947ல் பிரதமராக வந்த காலம்வரை கமத் தொழில் இலாகா மந்திரிப் பொறுப்புள்ளவராக இருந்து வந்தார். மேலே குறிப்பிட்ட குடியேற்றத் திட்டத்தை சிருட்டித்து நிலைநாட்டியவர் திரு சேனநாயகாவே.

1931ம் ஆண்டு தொடக்கம் மின்னேரி முதலாய பல இடங்களிலும் குடியேற்ற வசதிகள் செய்து கொடுத்த போதிலும் அத்தகைய குடியேற்றங்கள் நிலைதரப்படவில்லை. கொண்டு சென்ற குடிகள் ஒரு விளைச்சல் முடிந்ததும் தமது ஊருக்குத் திரும்பிவிடுவர். சிலசமயங்களில் அதற்கு முன்னரும் திரும்பிவிடுவர். இவர்கள் நிலைதரமாகக் குடிபதிகளாகவில்லையேயென்று பெரிதும் கவலைப்பட்டார் திரு சேனநாயகா.

ஆகவே 1939ல் இந்த நிலைமைக்குப் பரிகாரமாக ஒரு புதிய குடியேற்றத் திட்ட முறையைத் தயாரித்து அதற்கு அநுமதி கோரி அரசாங்க சபைக்கு வந்தார்.

#### பணச் செலவும் குடியேற்றப்பட்டோர் நிலையும்

திரு சேனநாயகா தயாரித்த புதுத் திட்டம் வேறொன்றுமல்ல. குடியேற்றத்திற்குக் கொண்டு செல்லப்படும் குடிபதிகள் அக்கறையில்லாது சிலகாலங்களில் தம் சொந்த ஊருக்குத் திரும்பிவிடாது அக்குடியிருப்புகளில் அவர்களைத் தங்கும்படி தூண்டும் அளவுக்கு அதிகப்படியாகப் பணத்தைக் கொட்டி தலைத் தீபாவளிக்கு வீட்டுக்கு வந்த மாப்பிள்ளைக்குச் சீர் செய்வதுபோல அக்குடிபதிகட்கு சிசுருஷை செய்வதேயாகும்.

அக்குடிபதிகள் காணி நிலத்தைப் பண்படுத்தித் தொழில் செய்து பழக்கமில்லாதவர்கள். நகர்ப்புறங்களில் விடுகாலிகளாகத் தெரு அளந்தவர்கள்; அரசாங்கத்தின் விருந்தினராகப் பல தடவைகளில் வாழ்ந்தவர்கள்; நாரியை வளைத்து வேலை செய்ய விருப்பமில்லாதவர்கள்; இன்னோரன்ன பேர்வழிகள்தான் குடியேற்றத் திட்டத்திற்குக் கொண்டு செல்லப்பட்டவர்கள். அத்தகையோரைக் குடியேற்றங்களில் நிலைப்படுத்த பணத்தை நீர் போல இறைத்து நிலைமையைச் சீர் செய்ய வேண்டியிருந்தது.

**வன்னியூரன்**

#### அறிக்கைமீது விவாதம்

திரு சேனநாயகாவின் பிரேரணை கமத்தொழில் நிர்வாகக் கமிட்டியின் அறிக்கை என்ற முறையில் விவாதத்திற்கு விடப்பட்டது. 1939ம் ஆண்டு பெப்ரவரி மாதம் 23ந் தேதி தொடங்கி இரண்டு மூன்று தினங்களாக விவாதிக்கப்பெற்று மார்ச் மாதம் 7ந் தேதி அனுமதிக்கப்பட்டது பிரேரணை. திரு சேனநாயகாவின் பிரேரணை ஆங்கிலத்தில் Aided Colonization scheme என்று வர்ணிக்கப்படும். தமிழில் அரசினர் உதவி செய்யும் குடியேற்றத் திட்டம் எனப்படும். அக்காலத்தில் அரசாங்க சபையில் இருந்த சமசமாஜப் பிரதிநிதிகள் டாக்டர் என். எம். பெரேராவும் திரு பிலிப் குணவர்த்தனவுமாவர். இவர்கள் இருவரும் இவ்விவாதத்தில் பெரிதும் பங்குபற்றினர்.

#### என். எம். பெரேரா கண்டனப் பேச்சு

டாக்டர் என். எம். பெரேராவின் பேச்சு திரு சேனநாயகாவின் பிரேரணையில் உள்ள குறைகளை அம்பலப் படுத்திவிட்டது. ஏற்கனவே புத்தளப் பகுதியில் நடாத்தப்பெற்ற குடியேற்றத் திட்டத்தின் விருத்தியை ஆராய்ந்து அதிலுள்ள குற்றங்களை எடுத்துரைத்த ஒரு பொருளியல் நிபுணரின் அறிக்கையை அடிப்படையாக வைத்துப் பேசினார் டாக்டர் பெரேரா. அவருடைய பேச்சின் தாற்பரியம் பின்வருமாறு:

#### குறிக்கோள் ஒன்றுதான் வேண்டும்

"எந்த ஒரு திட்டமாயினும் ஒரு குறிப்பிட்ட திட்டவட்டமான குறிக்கோளை முன்வைத்தே தயாரிக்கப்படல் வேண்டும். பல குறிக்கோள்களை ஒரேசமயத்தில் எய்த எண்ணுவது தவறு. அவை ஒன்றுக்கொன்று முரண்பாடாக அமையக் கூடும். ஒன்றில் காணி நிலமற்றவர்கட்குக் காணி நில உதவி குடியேற்ற வசதி செய்வதாக இருக்க வேண்டும்; அல்லது உணவு உற்பத்தியைப் பெருக்கும் திட்டமாக இருக்க வேண்டும்; அல்லாவிட்டால் வேலையில்லாது திண்டாடுவோருக்கு கஷ்ட நிவாரணமளிக்கும் திட்டமாகத் தயாரிக்கப்படல் வேண்டும். இம்மூன்று குறிக்கோள்களையும் ஒன்றாகத் திரட்ட முடியாது. அவை முரண்பாடுடையன.

#### வீண் பணச் செலவு

"காணி நிலமற்றவர்கட்கு காணி நிலம் வழங்கிக் குடியேற்ற வசதி செய்வதாயின் அவர்களின் சொந்தக் கிராமங்கட்கு அண்மையில் அவர்கள் அநுபவப்பட்ட சூழ்நிலைக்கொத்தவாறு அவர்கட்கு காணி நிலம் கொடுத்துக் குடியிருக்கச் செய்தல் வேண்டும். மழைப் பிரதேசங்களில் வாழ்ந்த மக்களை நூற்றுக்கணக்கான மைல்களுக்கப்பால்கொண்டு சென்று கானல் நிறைந்த வரட்டுப் பூமியில் கமங் கொத்திப் பிழைக்கச் சொல்லிக் குடியேற்றம் செய்ய முற்படுவது வெறுமனே பணத்தை வாரியிறைப்பதாக முடியும்.

#### வேலையில்லாத் திண்டாட்டம் ஒழியாது

"வேலையில்லாமல் திண்டாடுபவர்களுக்கு கஷ்டநிவாரணமளிப்பது நோக்கமாயின் வேலையில்லாதோர்

(12-ம் பக்கம் பார்க்க)

வழுக்கை விழுகின்றதா.....?

அப்படியானால் உடனே

"ஹெர்பினேல்"

உபயோகியுங்கள்.

இந்த அற்புத தயாரிப்பு

★ உதிர்ந்த மயிர்களை மீண்டும் வளரச் செய்கிறது.

✱ மயிர் உதிர்வதைத் தடுக்கின்றது.

இந்த உன்னத தயாரிப்பு முகலாயச் சக்கிரவர்த்தி ஷா ஆலம் அவர்களின் அரண்மனை வைத்தியர்களது ஏட்டுச் சுவடியில் காணப்பட்ட விபரத்திற்கேற்ப தகுந்த மூலிகைகளைக் கொண்டு தயாரிக்கப்பட்டதாகும்.

42 வகையான மூலிகைகள், வேர்கள், மலர்கள் இலைகள் மற்றும் பெருமதியான சாறுகள் கலக்கப்பட்டது. ஒவ்வொரு கலவைப் பொருளும் மனித கேசத்திற்கு நன்மை பயப்பதற்கென பரீட்சிக்கப்பட்டு நிருபணமானது. இந்த ஆச்சர்யமான கேச டானிக்கை தயாரிப்பதற்கு, மேற் கூறப்பட்டவைகள் அனைத்தும் சுத்தமான சீசேம் எண்ணெயில் விஞ்ஞான ரீதியாக கலக்கப்பட்டுள்ளன.

"ஹெர்பினேல்" ஆரோக்கியமான அடர்த்தியான பட்டுப் போன்ற கருமையான கேச வளர்ச்சிக்கு உறுதுணை புரிகின்றது. பலவீனமான மயிர்க் கால்களை வலிமையடையச் செய்கின்றது. இதன் காரணமாக மயிர் உதிர்வது தடுக்கப்படுவதோடு புதிதாக கேசம் வளர ஏதுவாகின்றது.

சோல் ஏஜண்டுகளும் விநியோகஸ்தர்களும்:-

சிர்ருல் கதீர் அன் கம்பெனி,

41, & 43 இரண்டாம் குறுக்குத் தெரு, கொழும்பு.

# அழிந்துபோன தமிழ் நூல்கள்...

(2-ம் பக்கத் தொடர்ச்சி)

அழிந்தபோது அழிந்தவை சில. குறுநில மன்னர்கள் அழிந்த போது அழிந்தவை சில. பரம்பரைப் புலவர் பெருமக்கள் அழிந்தபோது அழிந்தவைசில ஜாதி வெறியால் அழிந்தவை சில. சமய வெறியால் ஒழிந்தவை சில. மொழி வெறியால் அழிக்கப்பெற்றவை சில. நலந்தா நூல் நிலையம் தீக்கு இரையாயின போது எரிந்து போனவை சில. கரையான்கள் தமிழ்ச் சுவடிகளை சுவைக்கத் தொடங்கியதால் அழிந்தவை சில. "பழஞ் சுவடிகளைக் கொண்டுபோய் ஆடிப் பதினெட்டாம் பெருக்கில் ஆற்றில் கொட்டினால் புண்ணியம்" என்ற கொள்கை ஒன்று தமிழகத்தில் பரப்பப் பெற்று வந்ததால் தமிழர்கள் தங்கள் கையாலேயே அள்ளிக் கொண்டு போய் ஆறுகளில் கொட்டிவந்த வழக்கத்தினால் அழிந்து போனவை பல, பல.

#### அழிந்த காலம்

இந்நூல்கள் அழியத் தொடங்கி 2,000, 3,000, 5,000, 7,000, 11,000 ஆண்டுகளாயின என்று பல பேராசிரியர்கள் ஆராய்ந்துக் கூறுகின்றனர். இவர்கட்குத்துணை செய்து வருவது இலக்கியச் சான்றுகளே. இத்துறை அறிஞர்கள் "இரண்டாயிரம் ஆண்டுகட்கு முன்பும், ஐயாயிரம் ஆண்டுகட்குப் பின்பும்" என்று கூறுகின்றனர். இவர்கட்குத் துணை செய்வது மொழியறிவும், வரலாற்று உண்மையும் கல்வெட்டுகளும், புதைபொருள் ஆராய்ச்சியும் ஆகும். எனினும் எவரும் அதை அழிந்து போன காலத்தைத் துணிந்து கூறியதாக இல்லை.

#### தொன்மைச் சிறப்பு

தமிழ் நூல்கள் அழிந்த காலத்தையே அறிய முடியாத போது அவை தோன்றிய காலத்தை எவ்வாறு அறிந்து கூறுவது? ஒரு மொழிக்கு இலக்கணம் தோன்றுவது தான் இறுதியாக இருக்கும். தமிழ் இலக்கண நூலாகிய "பேரகத்தியம்" தோன்றிய காலம் 5,000 ஆண்டுகட்கு பின்பு இல்லையென முடிவாகத் தெரிகிறது. அதற்கு முன் அது தோன்றிய காலம் எப்போதோ? அதற்கு முன் இலக்கியங்கள் தோன்றிய காலம்............? அதற்கு முன் உரை நடை தோன்றிய காலம்............? அதற்கு முன் எழுத்துதோன்றிய காலம்.........? அதற்கு முன் மொழி தோன்றிய காலம்............? எப்போது? எவர் கண்டு கூறுவது? எவ்வாறு காணமுடியும்? இவை களை எண்ணிப் பார்க்கும் போது தமிழ் மொழியின் தொன்மைச் சிறப்பு ஒருவாறு விளங்கும்.

#### தனிச் சிறப்பு

தமிழ் நூல்களில் இறந்தன போக இன்று இருப்பவை 36 நூல்களே. இவை பத்துப் பாட்டு, எட்டுத் தொகை, பதினென்கீழ் கணக்கு எனப் பெயர் பெறும். இவற்றுள்ளும் சிலமுழுதும் இல்லை. பரிபாடல் என்ற தமிழ் இசை நூலிலுள்ள பாடல்கள் 200-க்கு மேற்பட்டவை. இன்று கிடைத்து இருப்பன 70 பாடல்களே. ஐம்பெரும் காப்பியங்களில் ஐந்துக்கு இரண்டு பழுதாகி விட்ட 2,700பாடல்களைக்கொண்ட முத்தொள்ளாயிரத்தில் இன்று கிடைத்து இருக்கும் பாடல்கள் 230 மட்டுமே. இவ்வளவும் அழிந்தும் தமிழ் அழியவில்லை.

எத்தனையோ மன்னர்கள் படையெடுத்து வந்தும், எத்தனையோ மக்கள் தமிழ் மக்களை ஆண்டும், எத்தனையோ மொழி தமிழகத்தை ஆட்சி செய்தும், எத்தனையோ பிறமொழிச் சொற்களும், எத்தனையோ பிறமொழி எழுத்துக்களும் தமிழ் மக்களின் சமய நூல்களில், வழிபாடுகளில், இலக்கியங்களில் கலைகளில், கல்வியில், தினசரி பத்திரிகைகளில் புகுத்தப் பெற்று வந்தும் தமிழ் மொழியானது எழிலும் வளமும் குன்றாது இன்றும் அழியாது இருந்து வருவது வியப்புக்குரிய ஒன்று. இது தமிழ் மொழிக்குரிய ஒரு தனிச் சிறப்பு.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# அடிமைத் தளையை அகற்றுவதே

## தமிழரசுக் கட்சியின் லட்சியம்

### சமஷ்டி அரசமைப்பில் அது சாத்தியமாகும்

### நாட்டைப் பிரிப்பது அல்ல இணைப்பதுதான்

### சமஷ்டி-ஆட்சி அதிகாரம் மட்டும் பகிரப்படும்

## தமிழரசுக் கட்சி தேர்தல் விஞ்ஞாபனம்

இலங்கைத் தமிழ் அரசுக் கட்சியின் தேர்தல் விஞ்ஞாபனம் ஏனைய அரசியல் கட்சிகளின் தேர்தல் விஞ்ஞாபனங்களிலிருந்து அடிப்படையிலேயே மாறுபட்டிருக்க வேண்டியது அவசியமாகிறது. ஏனைய கட்சிகளைப் பொறுத்தவரை, அவற்றைச் சார்ந்த மக்கள் அரசியற் சுதந்திரம் பெற்றுவிட்டார்கள். எனவே இவ்வரசியற் சுதந்திரத்தைப் பயன்படுத்தித் தமது மக்களுக்குத் தேவையான சமூக பொருளாதாரத் திட்டங்களை நிறைவேற்றும் வழிவகைகள், கொள்கைகள் பற்றி அக் கட்சிகளின் விஞ்ஞாபனங்கள் கூறியாக வேண்டும்.

ஆனால் தமிழ் அரசுக் கட்சியின் நிலைமையோ வேறு. சிங்களப் பெரும்பான்மையோரின் அரசியல் தளையிலிருந்து தமிழ் பேசும் மக்களை விடுவிக்கும் இயக்கமொன்றில் ஈடுபட்டிருக்கிறோம் நாம் எனவே எமது விஞ்ஞாபனம் முக்கியமாக இவ்விடுதலை இயக்கத்தைப் பற்றியே கூற வேண்டியிருக்கிறது ஆயினும் ஆட்சிப் பொறுப் பேற்கும் அரசாங்கங்கள் மேற் கொள்ளும் மூற்போக்கான சமுதாய பொருளாதாரத் திட்டங்களுக்கு இலங்கைத் தமிழ் அரசுக்கட்சி ஆதரவளிக்கத் தவறாது.

### அஹிம்சைப் போராட்டம்

தமிழ் பேசும் மக்கள் விடுதலை பெறும் பொருட்டு, இன்றைய ஒற்றையாட்சி அமைப்பு மாற்றவும், அதற்குப் பதிலாக சமஷ்டி அரசமைப்பை நிறுவவும் சமஷ்டிக் கட்சி அகிம்சை வழிகளில் போராடிக் கொண்டிருக்கிறது.

### அரசாங்கத்தால் ஆபத்து

தற்கால நாகரிகத்தின் விளைவாக சமுதாய வாழ்க்கையில் சிக்கல்கள் ஏற்பட்டிருக்கின்றன. இது காரணமாக, ஒரு நாட்டின் அரசாங்கம் மக்கள் வாழ்வில் அளவு மீறித் தலையிடுவது அதிகரித்துக்கொண்டே போகிறது. இவ்வதிகரிப்பினால், ஆட்சி அதிகாரமோ ஒரு மத்திய அரசாங்கத்திடம் குவிந்துவிடுகிறது பிரதேச விஷயங்களில், அப்பிரதேச மக்களின் அபிப்பிராயம் புறக்கணிக்கப்படும் அபாயம் ஏற்படுகிறது. இக் குறைபாடுகளைத் தவிர்க்கவும் அரசியல் பொறுப்பில் ஆளப்படும் மக்களும் பங்குகொள்ளவும் அரசியல் தத்துவங்கள் பல்வேறு அமைப்பு முறைகளை வகுத்திருக்கின்றன. இவ்வமைப்பு முறைகள் அடித்தளத்தில் உள்ளூராட்சிச் சபைகளில் ஆரம்பித்து உச்சாணியில் சமஷ்டி ஆட்சிவரை விரிந்து கிடக்கின்றன.

### சுயாட்சிக்கு இணை இல்லை

மக்கள் ஆட்சியாகிய 'ஜனநாயகம்' உண்மையில் ஆளப்படும் மக்களின் ஆட்சியாகவே இருக்க வேண்டும் என்பதைத்தான் இவ்வமைப்பு முறைகள் வலியுறுத்துகின்றன. இந்தக்கொள்கையினால் மக்களை அரசாட்சியில உண்மைப் பங்காளிகளாக்கி அதன் மூலம் மக்களின் பூரண விசுவாசத்தைத் தூண்டுவதே இவற்றின் குறிக்கோளாகும். "நல்லாட்சி என்பது சுயாட்சிக்கு எவ்வகையிலும் ஈடாகாது" என்று கூறினார் மேனாட்டு அரசியல் மேதையான யோன் ஸ்ரவாட் மில். அப்பெரியார் 19-ம் நூற்றாண்டில் கூறிய இம் மணி மொழி 20-ம் நூற்றாண்டுக்கே மிக மிகப் பொருத்தமாகிறது.

### ஒற்றை ஆட்சியால் கேடு

இலங்கையில் இன்று நிலவும் சூழ்நிலை விசித்திரமானது. சிங்கள ஆட்சியாளருக்கும் தமிழ் பேசும் ஆளப்படுவோருக்குமிடையே அபிலாஷைகளில் ஒருமைப்பாடு கிடையாது. ஒரு இனத்தவர் சுன் மேல் இன்னோரினத்தவர் அதிகாரம் செலுத்தும் கருவியாக அமைந்துவிட்டது ஒற்றையாட்சி அரசமைப்பு எனவே இவ்வாட்சிமுறை ஜனநாயகத்திற்கு எதிரானது என்று கூறுகிறோம் நாம். இன்றும், மக்கள் வாழ்வின் அடித்தளங்களான மதம், மொழி, கலாச்சாரம் ஆகிய வற்றில் கூட எம்மை ஆளும் சிங்களவர்களும் ஆளப்படுவோராகிய தமிழ்ப்பேசும் மக்களுக்கு மிடையே உரிமை நாட்டங்களில் வேறுபாடுகள் தீவிரமாயிருக்கின்றன.

### ஜனநாயகத்தின் ஆணிவேர்

ஆளுபவர்களுக்கும் ஆளப்படுவோருக்குமிடையே உரிய நாட்டங்களில்ஒருமைப்பாடும்உள்ளத் துடிப்புகளினால் ஒற்றுமையும் நிலவ வேண்டும் என்பதே ஜனநாயக ஆட்சியின் ஆணிவேர். இந்த வேரிலிருந்து முளைத்தெழுந்த அரசமைப்புமுறைகள் ஒன்றிற்கு மேற்பட்டவை. ஒரே மொழியும் ஒரே கலாச்சாரமும் கொண்ட ஐக்கிய இராச்சியத்திற்கு விசேஷமாகத் தகுந்த ஒற்றை ஆட்சிமுறை இவற்றுள் ஒன்று. பிரதேச அரசாங்கத்துக்கும் மத்திய அரசாங்கத்துக்குமிடையே ஆட்சியதிகாரத்தைப் பங்கிட்டுக் கொள்ளும் சமஷ்டி ஆட்சி முறை இன்னொன்று.

### ஐக்கிய இராச்சியத்தில்...

மொழியிலும் கலாச்சாரத்திலும் ஒன்றுபட்டிருக்கும் மக்களைக் கொண்ட ஐக்கிய இராச்சியத்தில்கூடஸ்கொட்டிஷ் மக்கள் ஐக்கிய இராச்சிய ஆட்சிக்கெதிராக கிளர்ச்சிகள் நடத்தியிருக்கிறார்கள் பரந்த சாம்ராச்சியம் ஒன்றின் அதிபதியாக இருந்த ஐக்கிய இராச்சியம் இம் மக்களுக்குத் தனது சாம்ராச்சியத்தின் பல்வேறு பகுதிகளிலும் பெருமளவில் உத்தியோக வாய்ப்புகளை அளிக்கக் கூடியதாயிருந்தது. ஆனால் சாம்ராச்சிய நாடுகள் விடுதலை பெற்றதும் இவ்வாய்ப்புக்கள் துண்டிக்கப்பட்டு ஐக்கிய ராச்சியத்தின் பொருளாதாரம் நலிவுற்றது. இதைத் தொடர்ந்து ஸ்கொட்டிஷ், உவெல்ஷ் மக்களின் தேசிய இயக்கங்கள் இன்று வலுப்பெற்று வருவதை நாம் காண்கிறோம்.

உண்மை ஜனநாயகம் செயல்படும் பல்வேறு அரசமைப்புத் திட்டங்களில் ஒற்றை ஆட்சி முறை ஒன்று என்றும் சமஷ்டி ஆட்சி முறை மற்றொன்று என்றும் குறிப்பிட்டிருந்தோம். சமஷ்டி முறை பற்றி இனிக் கவனிப்போம்.

### சமஷ்டி மூலம் பிரச்னைகளுக்கு தீர்வு

பிரதேச அரசுகளைஇணைத்து அரசோச்சும் இணைப் பரசு (சமஷ்டி)த் திட்டம் [illegible] றுக்கு மேற்பட்ட [illegible] இனங்கள் வாழும் நாடுகளுக்கு உகந்தது என்று இன்று ஏற்றுக்கொள்ளப்பட்டிருக்கிறது.

பிரித்தானிய பொது நலவரசுகள் அமைந்த கனடா, இந்தியா, மலாயா, மேற்கிந்தியத் தீவுகள் போன்ற நாடுகளும் உலகின் ஏனைய பகுதிகளிலுள்ள, சோவியத் யூனியன், சுவிற்சர்லாந்து, யூகோஸ்லேவியா ஆகிய நாடுகளும் தம்மகத்தேயுள்ள பன்மொழி, பலவினச் சமுதாயத்தில் ஏற்படக்கூடிய கலாச்சார, இனவாரி, மொழிவாரிப் பிரச்னைகளுக்கு இணைப்பாட்சி (சமஷ்டி) முறையில் திறம்படத் தீர்வு கண்டிருக்கின்றன.

> ### விஞ்ஞாபன வாதம் வெற்றி
>
> தமிழரசுக் கட்சி தேர்தல் விஞ்ஞாபனம் இம் மாதம் 15ந் தேதி இலங்கை வானொலியில் தமிழ், சிங்களம், ஆங்கிலம் ஆகிய மும்மொழிகளிலும் ஒலிபரப்பப்பட்டது முதலில் இவ்வொலிபரப்பை அனுமதிக்க முடியாது என்று அரசாங்கம் தடை விதித்தது.
>
> கட்சிப் பொதுச் செயலாளர் டாக்டர் நாகநாதன் காரசாரமாக ஒரு கடிதம் எழுதினார் சம்பந்தப்பட்டவர்களுக்கு. அத்தோடு பிரதமரை நேரடியாகச் சந்தித்து வாதாடினார்.
>
> டாக்டர் நாகநாதனின் வாதத்துக்கு எதிர்வார்த்தை பேச முடியாத பிரதமர் தமிழரசுக் கட்சித் தேர்தல் விஞ்ஞாபனத்தை ஒரு சொல்தானும் மாற்றாமல் அப்படியே ஒலிபரப்ப அனுமதிக்கவேண்டியதாயிற்று விஞ்ஞாபனம் இங்கே முழுமையாக வெளியிடப்படுகிறது.

### ஆட்சி அதிகாரத்தில் பங்கு

சிங்கள மக்களும் தமிழ் பேசும் மக்களும் ஆட்சி அதிகாரத்தில் சமதையுடன் பங்குபற்றத்தக்கவகையில், அதிகாரத்தைப் பரவலாக்கி இணைப்பாட்சி அடிப்படையில் இலங்கை அரசாட்சியை அமைத்தாலன்றி உண்மையான ஜனநாயகம் இந் நாட்டில் தலைதூக்கவே முடியாது. தமிழ் பேசும் மக்களின் பேராதரவைப் பெற்ற இலங்கைத் தமிழ் அரசுக் கட்சியின் உறுதியான நம்பிக்கை இது.

அரசியல், கலாச்சார, பொருளாதார நலன்களில், சிங்கள மக்களுக்கும் தமிழ் பேசும் மக்களுக்குமிடையே முரண்பாடு தோன்றிய போதெல்லாம் பெரிதும் பாதிக்கப்பட்டவர்கள் தமிழ் பேசும் மக்களேயாவர். [illegible] வேதனையடைந்தவர்கள் தமிழ் பேசும் மக்கள். அனுபவவாயிலாக இதை அவர்கள் உணர்ந்து கொண்டிருக்கிறார்கள்.

### அரசியல்துறை

உதாரணமாக அரசியல் துறையைக் கவனிப்போம். மலைநாட்டுத் தமிழ் மக்களின் வாக்குரிமை பிடுங்கப்படுவதினால் பாராளுமன்றத்திலுள்ள தமிழ் பேசும் பிரதிநிதிகள் தொகை குறைக்கப்பட்டது (இத் தமிழ் பேசும் பிரதிநிதிகளுக்குப் பதிலாகச் சிங்களப் பிரதிநிதிகளே இன்று தெரிவு செய்யப்படுகிறார்கள்.) அதாவது தமிழ் பேசும் பிரதிநிதிகள் அகற்றப்படும் அதே நேரத்தில் அவர்களின் ஸ்தானங்களில் சிங்களப் பிரதிநிதிகள் வைக்கப்படுகிறார்கள். இதனால் ஒரே மூச்சில் இரட்டித்த மடங்கு தமிழ் பேசும் பிரதிநிதித்துவம் சிதைக்கப்பட்டிருக்கிறது.

### நிர்வாகத்துறை

நிர்வாகத்துறையில் அரசாங்க நியமனங்களில் பாரபட்சம் காட்டப்படுவதன் காரணமாகத் தமிழ் பேசும் மக்கள் இன்னல்பட்டிருக்கிறார்கள், அரசாங்கத்தின் மொழிக் கொள்கையினால் எமது மக்கள் படும் தொல்லை வர்ணிக்க முடியாதது.

### நிதித்துறை

நிதித்துறையில் தமிழ்ப் பிரதேசங்களுக்கு அவற்றின் வளர்ச்சிக்குரிய உரிமைப் பணம்தானும் வழங்கப்படுவதில்லை.

### கல்வித்துறை

கல்வித்துறையில், இலங்கையிலே உயர்தரக் கல்வியைத் தொடர்ந்து பெற வாய்ப்புக்களில்லாத தமிழ் பேசும் மாணவர்கள் பல்கலைக் கழகக் கல்விக்காகவும் தொழில் நுட்பக் கல்விக்காகவும் இந்தியாவிற்குச் செல்லுதற்கு வேண்டிய சந்தர்ப்பங்கள் இந் நாட்டின் அரசாங்கத்தால் மறுக்கப்பட்டிருக்கிறது.

இன்னும் எத்தனை எத்தனையோ துறைகளில் தமிழ் பேசும் மக்களுக்கெதிராகப் பாரபட்சமான நடவடிக்கைகள் நீதி நியாயமின்றி நெஞ்சழுத்தத்தோடும், உரிமை உணர்ச்சியுடனும் மேற்கொள்ளப்படுகின்றன.

### தமிழ் பேசும் மக்கள் உணர்வு

இணைப்பாட்சி அரசமைப்பிலே தமிழ்ப் பிரதேசங்கள் தன்னாட்சி பெற்றுக் கொண்டால் மட்டுமே தமது எதிர்காலவாழ்வு வளமுறும் என்பதனை ஆட்சியாளரின் இக் கொடூரமான கொள்கைகளின் விளைவாகத் தமிழ் பேசும் மக்கள் உணரத் தொடங்கிவிட்டார்கள்.

1958-ம் ஆண்டு மே மாதம் நடந்த வகுப்புக் கலவரம் தமிழ் பேசும் மக்களின் இவ்வெண்ணத்தைப் பட்டவர்த்தனமாக மேலும் வற்புறுத்திவிட்டது கொள்ளையடிப்போரும் சூறையாடுவோரும் தம்மைத் தாக்கும் போது, தாம் ஓடிப்போய்த் தஞ்சம் புகக்கூடிய "புகலிடம்" வடக்குக் கிழக்குமாகாணங்கள் தாம் என்பதைத் தமிழ்பேசும் மக்கள் தெளிவாக உணர்ந்து கொண்டார்கள்.

### தேர்தல் முடிவுகள்

தமிழரசுக் கட்சியிலும் அதன் கொள்கைகளிலும் தமிழ் பேசும் மக்கள் நம்பிக்கை கொண்டுள்ளார்கள்என்பதனை தமிழ்ப பிரதேசத்தின் முக்கிய நகரங்களான வவுனியா, காங்கேசந்துறை, மட்டக்களப்பு ஆகிய இடங்களில்

(10-ம் பக்கம் பார்க்க)

ஆங்கிலம்

ஆங்கிலம் அழகாகப் பேச, வாசிக்க, எழுத ஆறே மாதங்களில் படிக்க விரும்பினால் இலவச விபரங்களுக்கு எழுதுக.

அற்லஸ் ஹோல்,
723, மருதானை ரோடு,
கொழும்பு-10.
த. பெட்டி 649.

அன்பர்களே

நீங்கள் எவ்வளவு நல்ல உணவுகள் சாப்பிட்டாலும் உடல் மெலிந்துகொண்டே போகிறதா? பசியின்மை பல் ஈறு கரைதல், கை கால் நோவு, சோம்பல், சிறுநீருடன் சக்தி போகுதல் என்பன போன்ற வியாதிகளால் கஷ்டப்படுகிறீர்களா? அப்படியானால் மூன்று விதமான சிகிச்சைகள் தேவை.

உள் சுத்தி, புறச் சுத்தி, இரண சிகிச்சைகள் இச் சிகிச்சைகளுக்கு ஒரே வார்த்தையில் பதில்

ஸ்பேமடோன் கொம்பவுண்ட்

(Spermatone Compound)

ஒரு பிரபல ஜெர்மன் டாக்டரின் மருந்து சீட்டிலிருந்து தயார் செய்த ஒரு அற்புத சக்திவாய்ந்த மருந்தாகும்.

8 அவுன்ஸ் பாட்டில் மருந்தின் விலை ரூ. 3/25
வி. பி. பி. தனி.

விபரங்களுக்கும் வி. பி. பி. ஆடர்களுக்கும்,

டாக்டர்

'மோடர்ன் கிலினிக்'

(MODERN CLINIC)
255, காலி ரோட், கொழும்பு-4.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

சுதந்திரன்
SUTANTIRAN

1960 ஜனவரி மாதம் 31-ந் தேதி

194ஏ, பண்டாரநாயக்க மாவத்த, கொழும்பு-12.
தொலை பேசி எண்: 3411. த. பெ 1183

# காலம் மாறும் கோலம்

இவ்வளவு காலமும் இலங்கைத் தமிழரசுக் கட்சியின் ஏகபோக உரிமையாயிருந்த ஒரு காரியத்தை இம்முறை இலங்கையிலுள்ள மற்றும் ஆறு அரசியல் கட்சிகளும் ஒன்றுகூடி உக்கிரமாக அனுஷ்டிக்கப் போகின்றன என்ற செய்தியைத் தினப் பத்திரிகைகளில் படித்ததும் இலங்கைத் தமிழரசுக் கட்சியின் ஆத்மீக பலத்தைப்பற்றி ஆச்சரியப்படாமல் இருக்க முடியவில்லை.

கடந்த பத்து ஆண்டுகளாகத் தொடர்ந்து இலங்கைத் தமிழரசுக்கட்சி இந்த நாட்டின் சுதந்திரதினமான பெப்ரவரி 4-ந் தேதியன்று நடைபெறும் அரசாங்க கொண்டாட்டங்களைப் பகிஷ்கரித்து வந்திருக்கிறது. இம்முறை, காரணம் எதுவாயிருந்த போதிலும், இலங்கைத் தமிழரசுக் கட்சியுடன் சேர்ந்து மற்றும் ஆறு அரசியல் கட்சிகள் சுதந்திர தினத்தைப் பகிஷ்கரிக்கப் போகின்றனவாம். என்னே விந்தை! காலம் மாறுகிற கோலத்தைப் பார்க்கும்போது மூக்கின்மேல் விரல் வைத்து அதிசயப்படத்தான் வேண்டியிருக்கிறது!

இப்படியாக தமிழரசுக் கட்சியுடன் சேர்ந்து சுதந்திர தின வைபவங்களைப் பகிஷ்கரிக்கப் போகிற அந்த ஆறு அரசியல் கட்சிகளும் எவை எவை என்று நினைக்கிறீர்கள்?

திருவாளர் பொன்னம்பலத்தின் தமிழ் காங்கிரஸா? திருவாளர் சுந்தரலிங்கத்தின் ஒற்றுமை முன்னணியா? அன்றி, திருவாளர் எதிர்மன்னசிங்கத்தின் தமிழ் பேசும் முன்னணியா? இல்லை, கிடையவே கிடையா.

இந்த நாட்டுக்குச் சுதந்திரத்தைப் பெற்றுத் தந்தவர்கள் தாங்கள் தாம் என்று ஜம்பமடிக்கும் ஐக்கிய தேசியக் கட்சி, முழுச் சுதந்திரத்தையும் கடைசிச் சொட்டுவரை பிழிந்து கொடுத்தவர்கள் தாங்கள் தாம் என்று கூத்தாடிய பண்டாரநாயகாவின் ஸ்ரீ. எல். எப். பி—பிலிப் குணவர்த்தனாவின் எம். ஈ. பி. ஆகிய கட்சிகள். இவற்றோடு சமசமாஜக்கட்சி, கொம்யூனிஸ்டு கட்சி, இரியகொல்லையின் சமாஜவாதி மஹாஜனகட்சி ஆகியவையே எதிர்வரும் இலங்கைச் சுதந்திர தினத்தைக் கூட்டாகப் பகிஷ்கரிக்கப் போகின்றன!

அரசியல் துறையில் நிரந்தரமான குறிக்கோளை முன்வைத்து, ஸ்திரமான கொள்கையுடன் தளப்பமும் தள்ளாட்டமும் இன்றி மலையைப்போல் நிலையாக நின்று காரியமாற்றிவரும் வழக்கத்துக் கிணங்க, இலங்கையின் சுதந்திர தினத்தையும் கடந்த பத்து ஆண்டுகளாகத் தமிழ் பேசும் மக்களின் துக்கதினமாக அனுஷ்டித்து வந்திருக்கும் ஒரேயொரு அரசியல் கட்சி இலங்கைத் தமிழரசுக் கட்சிதான்.

1948-ம் ஆண்டு பெப்ரவரி 4-ந் தேதி இலங்கை பிரிட்டிஷாரின் பிடியிலிருந்து விடுதலையடைந்தது. ஆனால் அதே நாளில்தான் சோல்பரியின் ஒற்றையாட்சி அரசமைப்புத் திட்டத்தின்கீழ் இலங்கையில் வாழும் சிறுபான்மை மக்கள் அனைவரும், குறிப்பாகத் தமிழ் பேசும் மக்கள், சகல அரசியல் உரிமைகளும் இழந்து, பெரும்பான்மைச் சிங்கள மக்களின் ஆதிக்கத்தின் கீழ், சிறகொடிந்த பறவைகளாகச் சிக்கிக் கொண்டார்கள். எனவே அந்த ஆண்டு முதற்கொண்டு சிங்கள ஆதிபத்தியத்துக்குத் தமது எதிர்ப்பைக் காட்ட சுதந்திர தினத்தைத் துக்க தினமாக அனுஷ்டிக்க முற்பட்டார்கள் தமிழ் பேசும் மக்கள். இன்றுவரை வருடா வருடம் தொடர்ந்து அனுஷ்டித்து வருகிறார்கள்.

திருவாளர்கள் சுந்தரலிங்கம், பொன்னம்பலம் போன்றோர் தம் சுய நலத்துக்காகத் தமிழ் பேசும் மக்களின் நல்வாழ்வைப் பலியிட்டு சிங்கள அரசாங்கத்தில் மந்திரியாக இருந்த காலத்தில் அரசாங்கத்தோடுசேர்ந்து சுதந்திர தினத்தைக் கொண்டாடினார்கள்.

அரசாங்கத்திலிருந்து உதைத்துத் துரத்தப்பட்டதும் சுதந்திர தினத்தைத் துக்க தினம் என்று இடையிடையே வாயளவில் சொல்லிக் கொண்டார்கள். உருப்படியாக அவர்கள் சுதந்திர தினத்துக்குத் தமது எதிர்ப்பைக் காட்டியதில்லை. எப்படித்தான் காட்டுவார்கள்?

1957ம் ஆண்டு சுதந்திர தினத்தின்போது யாழ்ப்பாணத்தில் நடைபெற்ற "கடைஅடைப்பு கடை திறப்பும்" சம்பவம் தமிழ் மக்கள் அறிந்ததே. துக்க தினத்தன்று கடைகள் அடைக்கப்பட்டு, கறுப்புக் கொடி ஏற்றப்பட்டு துக்கம் அனுஷ்டிக்கப்பட வேண்டும் என்று தமிழரசுக் கட்சியினர் கூறினர். தமிழரசுக் கட்சியின் இந்த ஏற்பாட்டைக் குலைத்துத் தமது செல்வாக்கை வளர்ப்பதற்காக "கடைகளைத் திறந்து வைக்க வேண்டும். மூடக்கூடாது. தமிழரசுக் கட்சியினரின் பேச்சைக் கேட்கக்கூடாது" என்று கிளர்ச்சி செய்ய முற்பட்டார் தமிழ்க் காங்கிரஸ் தலைவர் திரு ஜீ. ஜீ. பொன்னம்பலம். ஆனால் பாவம், படுதோல்வியடைந்தார்! அதன் பின்னர் 1958, 1959ம் ஆண்டுகளில் சுதந்திர தினத்தைப்பற்றி அவர் எண்ணிக்கூடப் பார்த்ததில்லை. எதிலும் நிலையில்லாத கொள்கையை அனுஷ்டிக்கும் இவர் சுதந்திர தின விஷயத்திலும் கோட்டை விட்டு விட்டார்!

சுதந்திர தினத்தைத் துக்க தினமாக அனுஷ்டிக்க வேண்டும்; அதன்மூலம் பெரும்பான்மையினரின் சர்வாதிகாரத்துக்கு ஒடுக்கப்பட்டவர்களான தமிழ் பேசும் மக்களின் எதிர்ப்பைத் தெரிவிக்க வேண்டும் என்று தமிழரசுக் கட்சி கூறியபோது பலருக்கு அத்தகைய எதிர்ப்பின் மகத்தான தத்துவம் என்ன என்பது புரியவில்லை.

சுதந்திரம் இந்த நாட்டில் எல்லோருக்கும்தானே ஒன்றாகக் கிடைத்தது. சுதந்திர தினத்தைத் தமிழரசுக் கட்சியார் பகிஷ்கரிக்கிறார்களே இது மடமையல்லவா என்று கூறிச் சிலர் சிரித்தார்கள். மற்றும் சிலர் இலங்கை சுதந்திரம் பெற்றது இவர்களுக்குப் பிடிக்கவில்லை இவர்கள் ஏகாதிபத்திய தாஸர்கள், வகுப்புவாதப் பித்தர்கள் என்று கூறிச் சினந்தார்கள்.

இன்று நாம் கேட்கிறோம்: சுதந்திர தினத்தைப் பகிஷ்கரிப்பதென ஆறு அரசியல் கட்சிகள்—அவ்வளவும் பெரும்பான்மை சமூகத்தவர்களைக்கொண்ட கட்சிகள்—தீர்மானித்துள்ளனவே எதற்காக?

தஹநாயகா தலைமையில் அமைந்துள்ள இடைக்காலக் காபந்து அரசாங்கம் உள்நாட்டுப் பாதுகாப்பு அமைச்சு என்ற பெயரில் பொதுமக்கள் சுதந்திரத்தையும் உரிமைகளையும் கட்டுப்படுத்தப்போகிறது என்ற ஐயுறவு ஏற்பட்டதுமே இவர்கள் எதிர் நடவடிக்கையாகச் சுதந்திர தினத்தைப் பகிஷ்கரிப்பது என்று முடிவு செய்துள்ளார்கள்.

அப்படியானால் சகல அடிப்படை ஜீவாதார உரிமைகளையும், அரசியல் உரிமைகளையும், கலை கலாச்சார மொழி உரிமைகளையும் இழந்துவிட்ட இலங்கைவாழ் தமிழ் பேசும் இனம் சுதந்திர தினத்தைப் பகிஷ்கரிப்பதும், துக்க தினமாக—கரிநாளாக—அனுஷ்டிப்பதும் எவ்வளவு பொருத்தம் என்பது இப்போது புலனாகிறதல்லவா?

சுதந்திர தினத்தைத் தமிழ் பேசும் மக்களின் துக்க தினமாகப் பிரகடனம் செய்த தமிழரசுக் கட்சியின் முந்நோக்கையும், அரசியல் தீர்க்கதரிசனத்தையும் பாராட்டாமல் இருக்க முடியுமா?

# சிங்கள அரசிடம் தஞ்சம் புகுந்த தனிப் பெரும் தலைவர் ஜீ. ஜீ.

## ஜம்பமடிக்கிறார்--எச்சரிக்கை விடுக்கிறார் அதே அரசுக்கு! இதன் மர்மம் என்ன?

## தேர்தல் 'ஸ்ரன்ட்'! ஏமாறத்தான் ஆளில்லை

சுதந்திரன்
அரசியல் விமர்சகர்

அகில இலங்கை தமிழ் காங்கிரஸ் என்று அலங்காரமாக அழைக்கப்படும் அகில இலங்கை ஆலைப்பந்தி காங்கிரஸ் வெளியிட்டுள்ள "கொள்கைகளும் திட்டங்களும்" என்ற பிரசுரத்தில் பின்வரும் பந்தி மிகவும் வேடிக்கையானது.

"தமிழரது அடிப்படை உரிமைகளையும் இஷ்ட லட்சியங்களையும் பறிக்கும் சட்டங்களை நீடித்து ஆக்க வேண்டாம் என்று சிங்கள மக்களையும் அவர்களது அரசாங்கத்தையும் கோருவதோடு, தமிழர்கள் தன்மானத்தோடும், கண்ணியமாகவும், முன்னேறளித்த அருட் செல்வத்தில் பங்குள்ளவர்களாகவும், சம அந்தஸ்தும், சந்தர்ப்பங்களில் சம உரிமை உள்ளவர்களாகவும், இத்தீவின் எப்பகுதியிலும் வாழ்க்கையை நடத்துதற்கு அனுமதிக்கும் விஷயத்தில் அவர்களிடம் மனமாற்றம் ஏற்படாமல், தற்போதுள்ளதுபோல் கொடுமை செய்து இனபேதம் காட்டினார்களானால், தமிழினம் முழுவதும் ஒன்றுபட்டுத் தங்களது அசைக்க முடியாத சுயநிர்ணய உரிமையைப் பாவிக்க வேண்டிவரும் என்று எமது காங்கிரஸ் எச்சரிக்கின்றது"

பிரபல வழக்கறிஞரும், வர்த்தக திறமை மிக்கவரும் கால் நூற்றாண்டு காலம் அரசியல்வாதியாக விளங்கி வருபவருமான ஒருவரைத் தலைவராகக்கொண்டு இயங்கும் ஸ்தாபனத்தின் "கொள்கைகளும் திட்டங்களும்" எப்படியான குளறுபடிகளையும், முரண்பாடுகளையும், தர்க்க வழுக்களையும் உடையனவாய் இருக்கின்றன என்பதை நாம் புட்டுக்காட்டுவதற்கு முன்னால் மேற்படி பந்தியை நமது வாசகநேயர்கள் நன்றாக ஒருமுறைக்கு இருமுறை படித்துப் பார்த்துக்கொள்ள வேண்டும் என்று கேட்டுக்கொள்ளுகிறோம்.

படித்துவிட்டீர்களா? இப்போது விஷயத்துக்கு வருவோம்.

தமிழரது அடிப்படை உரிமைகளையும், இஷ்ட லட்சியங்களையும் பறிக்கும் சட்டங்கள் பலவற்றை, காலஞ்சென்ற திரு டி. எஸ். சேனநாயகா காலந்தொட்டு இன்றுவரை இருந்துவரும் சிங்கள அரசாங்கங்கள். ஆக்கிவிட்டன; தொடர்ந்து ஆக்கிக்கொண்டு வருகின்றன; மேலும் ஆக்கத்தான் போகின்றன தமிழ் மக்கள் உறங்கிக் கிடந்தால் அல்லது ஒத்துழைப்புக் கொடுத்தால்.

இந்தியப் பிரஜாஉரிமைச் சட்டத்தின்மூலம் நமது சகோதரர்களான மலைநாட்டுத் தமிழ் மக்களின் வாக்குரிமை பிரஜாஉரிமைகள் பறிக்கப்பட்டுவிட்டன. இலங்கைப் பிரஜாஉரிமைச் சட்டத்தின் மூலம் இலங்கைத் தமிழ் மக்களும், முஸ்லிம் மக்களும் சந்தேகப் பிரஜைகளாகவும், இரண்டாந்தரக் குடிமக்களாகவும் ஆக்கப்பட்டுவிட்டார்கள். சிங்களம் மட்டும் சட்டத்தின் மூலம் தமிழ் மக்களின் அடிப்படை உரிமைகளில் ஒன்றான மொழியுரிமை பறிக்கப்பட்டுவிட்டது. யாழ்ப்பாணத் தமிழ் மக்களின் 'இஷ்ட லட்சியமான' அரசாங்க உத்தியோகங்களுக்கு கதவு அடைக்கப்பட்டுவிட்டது.

இவ்வளவு பாரதூரமான காரியங்கள் நடைபெற்றிருந்தும் இவற்றை ஆட்சேபித்து, அல்லது எதிர்த்து தமிழ் காங்கிரஸும் அதன் ஆயுட் கால மாபெருந் தலைவரும் ஆற்றியதென்ன? சாதித்தது யாது?

"தமிழரது அடிப்படை உரிமைகளையும், இஷ்ட லட்சியங்களையும் பறிக்கும் சட்டங்களை நீடித்து ஆக்க வேண்டாம் என்று சிங்கள மக்களையும், அவர்களது அரசாங்கத்தையும் கோரப் போகிறதாம்" தமிழ் காங்கிரஸ்!

'நீடித்து ஆக்க வேண்டாம்' என்று கோரப் போகிறாராம் தனிப் பெருந் தலைவர்! என்னே வேடிக்கை!

நீடித்து ஆக்க வேண்டாம் என்றால், 'இதுவரை ஆக்கியது போகட்டும். அப்படி ஆக்கிய அநியாயச் சட்டங்களை ஏற்றுக் கொள்ளுகிறோம். இனிமேல் தொடர்ந்து ஆக்க வேண்டாம் என்றுதானே பொருள்படும்? ஆம், எப்படித்தான் இதுவரை ஆக்கிய சில சட்டங்களை ஒழிக்குமாறு தமிழ் காங்கிரஸ் தலைவர் கோர முடியும்? உதாரணமாக, மலைநாட்டுந் தமிழ் மக்களின் பிரஜா உரிமை வாக்குரிமைச் சட்டங்கள் போன்றவை தனிப்பெருந் தலைவரின் அனுசரணையோடும் ஆதரவோடுந்தானே ஆக்கப்பட்டன? அவற்றையும் சேர்த்து நீக்குமாறு கோரத் தலைவருக்கு திராணியுண்டா? யோக்கியதை உண்டா? எனவேதான் "நீடித்து ஆக்க வேண்டாம்" என்று மிதமாகக் கேட்டுக் கொள்ளுகிறார். அதுவும் "ஆக்காதீர்!" என்று அறுத்துஉறுத்து ஆணையிட்டுச் சொல்ல அவருடைய பழையகால ஒத்துழைப்பு மனப்பான்மை இடந்தரவில்லை. அடிபணிந்து, தெண்டனிட்டு "கொள்கைகளும் திட்டங்களும்" என்ற பிட்டிசத்தின் மூலம் கோருகிறார்.

இப்படியாக யாரைக் கோருகிறார் தெரியுமா? 'அவர்களது அரசாங்கத்தை'க் கோருகிறார்!

அவர்களது அரசாங்கம் என்றால் தமிழர்கள் சம்பந்தப்படாத சிங்களவர்களுடைய அரசாங்கம் என்று பொருள். அப்படியானால் இன்றைய அரசாங்கம் முழுக்க முழுக்க சிங்களவர்களுடைய அரசாங்கமாகப் போய்விட்டது—ஒற்றை ஆட்சி, ஒரு சாராருடைய ஆட்சியாகப் போய்விட்டது—என்பதைத் தனிப் பெருந் தலைவர் உணர்ந்துகொண்டு அவர்களது அரசாங்கத்திடம், அடிமை ஆண்டானிடம் அடிபணிந்து யாசிப்பதுபோல் கோரிக்கை சமர்ப்பிக்கிறார்.

இலங்கை அரசாங்கத்தைத் தனிப் பெருந் தலைவர் எப்பொழுது நமது அரசாங்கம் என்று கொள்ளாமல் அவர்களது அரசாங்கம் என்று குறிப்பிட முற்பட்டாரோ அப்பொழுதே தமிழர்களாகிய நமது அரசாங்கம் வேறு, அவர்களது அரசாங்கம் வேறு என்ற அர்த்தம் புறப்பட்டு விடுகிறது. அதன் பின்னர் ஒற்றை ஆட்சியினால் நாம் அனைவரும் ஒன்றுபட்டு விடலாம், ஒருமித்து சமுகமாக வாழலாம் என்று எண்ணுவதும் பிறரை எண்ணும்படி செய்வதும் கேடு கெட்ட ஏமாற்றுத்தனமாகும்.

மேல் பந்தியில் 'அவர்களது அரசாங்கம்' என்று பிரித்துக் காட்டிய தனிப்பெருந் தலைவர் அதற்கு அடுத்து வரும் பந்தியில் இலங்கைக்கு ஏற்றது சோல்பரியின் ஒற்றையாட்சித் திட்டந்தான் என்பதை வற்புறுத்துவது போல சமஷ்டி ஆட்சியைக் கண்டித்து ஒற்றையாட்சிக்கு வக்கலாத்து வாங்கியிருப்பது சுத்த முரண்பாடு உடைய ஒரு வாதமாகும். இந்த நொண்டியான தர்க்க வாதத்தை தனிப்பெருந் தலைவரின் சட்ட மூளை எப்படித்தான் சிருஷ்டித்ததோ தெரியவில்லை.

அவர்களது அரசாங்கத்துக்கு விண்ணப்பம் சமர்ப்பித்த பிரகஸ்பதி அடுத்து,

"ஒற்றை ஆட்சி முறையின் அடிப்படையில் தமிழ் பேசும் மக்களது பிரச்னைகளை தீர்க்க முடியாதாயின், சமஷ்டி அரசியற் திட்டத்தின் அடிப்படையில் அவை ஒருபோதும் தீர்க்கப்படமாட்டா"

என்று கூறுவது வடிகட்டிய விதண்டாவாதமாகும்.

நாம் எடுத்துக்கொண்ட பந்தியில் இன்னொரு விஷயத்தைப் பார்ப்போம்: சிங்கள மக்களுக்கு மன மாற்றம் ஏற்படாமல், தற்போதுள்ளதுபோல் கொடுமை செய்து அவர்கள் இனபேதம் காட்டினார்களானால் தமிழ்

(9-ம் பக்கம் பார்க்க)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# கோபாலன்-கோமதி சந்திப்பு

## எழுதுபவர்கள்தான் எழுத்தாளர்களா?

## உழைக்கும் தமிழ்ப் பத்திரிகையாளர் சங்கத் தொடக்கக் கூட்டத்தில் பேச்சு

“இலங்கையில் உழைக்கும் தமிழ்ப் பத்திரிகையாளர்கள் எண்ணிக்கையில் குறைந்தவர்களாயிருந்தும் அவர்களில் பலருக்கு ஆளை ஆள் தெரியாத வெட்கக்கேடான நிலைமை இருக்கிறது இது ஒழிய வேண்டும் மற்றும் உழைக்கும் தமிழ்ப் பத்திரிகையாளர்கள் கலந்து பேசவும், கூடி இயங்கவும், அவர்களுக்குள் பரஸ்பரம் நல்லெண்ணமும் நேச மனப்பான்மையும் நிலவவும் கலாசார உறவுகள் வளரவும் வகை செய்ய வேண்டும். உழைக்கும் தமிழ்ப் பத்திரிகையாளர்கள் சங்கம் இந்த வகையில் மிகவும் உபயோகமானதே”—இவ்வாறு வீரகேசரி பிரதம ஆசிரியர் திரு கே. வி. எஸ். வாஸ் உழைக்கும் பத்திரிகையாளர்கள் சங்க ஆரம்பக் கூட்டத்தில் பேசும்போது கூறினார்.

கூட்டம் கடந்த 16-ந் தேதி சனிக்கிழமை கொழும்பு விவேகானந்த வித்தியாலய மண்டபத்தில் நடைபெற்றது. வீரகேசரி, தினகரன், சுதந்திரன் ஆகிய பத்திரிகாலயங்களில் கடமை செய்யும் உழைக்கும் பத்திரிகையாளர்கள் கூட்டத்தில் கூடியிருந்தனர்.

தினகரன் ஆசிரியர் திரு கே. கைலாசபதி பேசுகையில் உழைக்கும் தமிழ்ப் பத்திரிகையாளர் சங்கம் இருக்க வேண்டியது அவசியம்தான் என்றும் அப்படி ஒரு சங்கத்தை தோற்றுவிக்க முயற்சி எடுத்தவர்களைப் பாராட்டியாக வேண்டும் என்றும் சொன்னார்.

சுதந்திரன் ஆசிரியர் திரு எஸ். டி. சிவநாயகம் பேசுகையில் பின்வருமாறு கூறினார்:-

### யார் எழுத்தாளர்கள்?

“பேனா பிடித்து எழுதாதவர்கள் கூடத்தாம் எழுத்தாளர்கள் என்று லேபல் ஒட்டிக்கொண்டு வெளிநாடுகளுக்கு ஈழத்து எழுத்தாளர் ‘பிரதிநிதி’யாகச் சென்று திரும்புகிறார்கள். ‘கோபாலன் வந்தான்......கோமதியைச் சந்தித்தான்...’ என்ற ரீதியில் இரண்டு சிறுகதைகளை எழுதிவிட்டவர்கள் எல்லோரும் தம்மை எழுத்தாளர்கள் என்று விளம்பரப்படுத்திக் கொள்ளுகிறார்கள்.

“இவர்களின் கதைகளை பிரசுரிக்கும் பத்திரிகையாளர்களுக்கு ஓயாத எழுத்து வேலை. நாங்களெல்லாம் பல்வேறு துறைகளிலும் எழுதும் பத்திரிகாலய எழுத்தாளர்களை வெளியில் உள்ளவர்கள் எழுத்தாளர்கள் என்று சொல்கிறார்களா? ஒப்புக்கொள்கிறார்களா? அல்லது எழுதுபவர்கள்தானும் நெஞ்சை நிமிர்த்திக் கொண்டு தம்மை விளம்பரப்படுத்தித் திரிகிறார்களா?

“தம் சக்தியை அறிந்து இருக்க வேண்டும் உழைக்கும் பத்திரிகையாளர்கள். அவர்களால் நல்லதும் செய்ய முடியும்; அல்லதும் செய்ய முடியும்”-இவ்வாறு திரு எஸ். டி. சிவநாயகம் பேசி முடித்தார்.

தற்காலிக தலைவராக இருந்து கூட்டத்தை நடத்தி வைத்த திரு கே. வி. எஸ். வாஸ் தமது குறிப்புரையில் திரு சிவநாயகம் வெளியிட்ட கருத்தை ஆமோதித்துப் பேசினார். அவர் சொன்னார்: “நான் 13 வயதிலேயே எழுதத் தொடங்கிவிட்டேன். இதுவரையில் எத்தனையோ எழுத்தாளர்களை நாட்டுக்கு தயாரித்து அளித்திருக்கிறேன். ஆயினும் என்னை யாரும் எழுத்தாளர் என்று சொன்னதாகவோ அல்லது ஒப்புக்கொள்வதாகவோ தெரியவில்லை. நானும் அப்படி சொல்லிக்கொள்ள விரும்பவில்லை”—இப்படித் திரு கே. வி. எஸ். வாஸ் நகைச்சுவையோடு சொன்னார்.

இலங்கையில் மிக்க அனுபவம்வாய்ந்த பத்திரிகையாளர் என்று தலைவரால் பாராட்டி அழைக்கப்பட்ட ‘தினகரன்’ திரு எஸ். டி. தங்கையா பேசுகையில் “கடந்த காலத்தில் எழுத்தாளர்கள் சங்கங்கள் எல்லாம் ஒருசில சுயநலம் மிக்க பத்திரிகை ஆசிரியர்களாலேயே வேட்டு வைத்து அழிக்கப்பட்டன. நான் வேலை பார்க்கும் ஸ்தாபனத்திலேயே அப்படி ஒரு ஏமாற்றுப் பேர்வழி இருந்தார். ஆனால் அவரது குட்டுகள் அம்பலமாகவே ஆசாமி விரட்டியடிக்கப்பட்டு விட்டார். இனிமேல் இத்தகைய சங்கங்கள் தழைத்து வளரும் என்பது திண்ணம்” என்று கூறினார்.

“உழைக்கும் தமிழ்ப் பத்திரிகையாளர் சங்கம் என்ற பெயரில் ஒரு சங்கத்தை இப்போது ஆரம்பிப்பதென்று இக்கூட்டம் முடிவு செய்கிறது” என்று ஒரு பிரேரணையை திரு. கே. கே. இரத்தினசிங்கம் கொண்டு வந்தார். திரு. எஸ். நடராசா அதை ஆமோதினார். அப்பிரேரணை ஏகமனதாக ஏற்றுக் கொள்ளப்பட்டது.

அடுத்து சங்கத்துக்கு தலைவரும் செயலாளரும் ஏகமனதாகத் தெரிவு செய்யப்பட்டார்கள்.

தலைவர்: திரு. கே. வி எஸ். வாஸ், செயலாளர் திரு. த. சபாரத்தினம்.

சங்கத்தின் சட்ட திட்டங்களை ஆக்க திருவாளர்கள் கே. வி. எஸ். வாஸ், கே. கைலாசபதி, எஸ். டி. சிவநாயகம், த. சபாரத்தினம், பி. பாலசுந்தரம் ஆகியோரைக் கொண்ட சட்ட திட்டக்குழு ஒன்றும் ஏகமனதாகத் தெரிவு செய்யப்பட்டது.

திருவாளர்கள் தேவசிகாமணி, மகேசன் ஆகியோரும் கூட்டத்தில் குறிப்புரை வழங்கினார்கள்.

# சிங்கள அரசிடம்..

(8-ம் பக்கத் தொடர்ச்சி)

னம் ஒன்றுபட்டு ஏதோ ஒரு காரியம் செய்துவிடுமாம் இப்படிப் பயங் காட்டுகிறார் தனிப்பெருந் தலைவர்.

அப்படியானால் சிங்கள மக்கள் தொடர்ந்து கொடுமை செய்யட்டும் என்று யார்தான் விரும்பமாட்டார்கள்? அப்படிச் செய்தால் தமிழ் மக்கள் ஒன்றுபட்டுவிடுவார்கள் என்று தமிழ் காங்கிரஸ் தலைவர் உறுதியளிக்கிறார் அல்லவா? தமிழ் மக்கள் ஒன்றுபட வேண்டும் என்பது தானே அவரது லட்சியம்! இந்த வகையிலாவது அந்த ஒற்றுமை ஏற்பட்டு விடக்கூடாதா?

> “எனவே எமது காங்கிரஸ் மறுபடியும், மக்கள் ஒன்றுபட வேண்டும் என்று மன்றுடுவதோடு, உறுதியான ஒரு ஒற்றுமை முன்னணியும் ஏற்பட வேண்டும்......”

என்று தமிழ் காங்கிரஸ் ஒற்றைக் காலில் நின்று தவம் புரிந்து வருவதாகவும் ஏற்கனவே பிரசுரத்தில் சொல்லப்பட்டிருக்கிறது.

ஒற்றுமையை ஏற்படுத்த இவ்வளவு கஷ்டமேன்? தனிப்பெருந் தலைவர் விரும்புகிற ஒற்றுமை வருவதற்காக வேண்டியேனும் “அவர்களிடம் மனமாற்றம் ஏற்படாமல், இனபேதமும் கொடுமையும் வளர்ந்தால் அதுவே சுருக்க வழியாகிவிடுமல்லவா? என்னே முரண்பாடு! என்னே முரண்பாடு!

தமிழ் மக்கள் ஒன்றுபட்டு அடுத்து என்ன செய்வார்களாம்?

தங்களது அசைக்க முடியாத சுயநிர்ணய உரிமையைப் பாவிப்பார்களாம்!

இது என்ன புதுப் பூச்சாண்டி என்று கேட்கிறோம்.

தமிழ் மக்கள் ஒன்றுபட்டு தங்களது அசைக்க முடியாத சுயநிர்ணய உரிமையைப் பாவிப்பது என்றால் என்ன? யாருக்குத் தெரியா[illegible] யாத, விளங்காத [illegible] யோகத்தின்மூலம், ஏதோ பெரிய காரியத்தை செய்யக் கூடிய திட்டம் தமிழ்க் காங்கிரஸிடம் இருக்கிறது என்று சில ஏமாந்த தமிழ் மக்களை எண்ண வைப்பதற்காக “அசைக்க முடியாத சுயநிர்ணய உரிமை” என்ற பூச்சாண்டியை அவிழ்த்து விடுகிறார் திரு பொன்னம்பலம். இது ஒன்றும் நடக்கப்போவதில்லை என்று நாம் தமிழ் பேசும் மக்களுக்கு அழுத்தந் திருத்தமாகக் கூறுகிறோம்.

அப்படியேதும் அசைக்க முடியாத காரியம் இவரால் செய்ய முடிந்தால் ஏன் இது வரை செய்து முடிக்கவில்லை என்று கேட்கிறோம். இவருடைய அசைக்க முடியாத சுயநிர்ணய புஸ்வாணத்தைப் பிரயோகிக்க இது வரை சிங்கள அரசாங்கம் செய்த அழிமதிகளும், அட்டூழியங்களும் போதாவா? 1958 வகுப்புக் கலவரம் காணாதா? சிங்களம் மட்டும் சட்டம் பற்றாதா?

ஐயா, தனிப் பெருந் தலைவரே! யாருக்குப் பூச்சாண்டி காட்டுகிறீர்? யாரை ஏமாற்றப் பார்க்கிறீர்? கொடுமை செய்து இன பேதம் காட்டினீர்களானால், அசைக்க முடியாத சுய நிர்ணய உரிமையைப் பாவிக்க வேண்டி வரும் என்று உமது காங்கிரஸ் எச்சரிக்கின்றதாமே! கெட்டது ஒரு கேடு! விட்டுத் தள்ளுமையா வீண் வாய் ஜம்பத்தை, உம்மால் ஆகக் கூடியது ஒன்றுமில்லை என்பதை, என்று நீர் டி. எஸ். சேனநாயகாவின் முன் முழந்தாள் இட்டீரோ அன்றே சிங்கள மக்கள் தெரிந்து கொண்டார்கள். சிங்கள அரசாங்கம் அறிந்து கொண்டது. உலகம் உணர்ந்து கொண்டது. செல்லாக் காசான உமது [illegible] இனியும் உடை[illegible]

(தொடரும்)

# பொருளாதாரப் பிரச்னை....

(5-ம் பக்கத் தொடர்ச்சி)

### நாம் மூச்சு விடுவதும் ஆத்திரமூட்டலாம்

“நாம் சிங்கள மக்களுக்கு எமது நடவடிக்கைகளால் ஆத்திரமூட்டுவதாகச் சில அரசியல் வாதிகள் சொல்லுகிறார்கள். வவுனியாவில் நாம் மாநாடு நடத்தியதால் தான் வகுப்புக் கலவரம் ஏற்பட்டது என்ற தோரணையில் நண்பர் சண்முகதாசன் பேசினார். நாம் தமிழ் பேசும் மக்களின் நல்வாழ்வுக்கான வழி வகைகளை வகுக்க மாநாடு கூட்டுவது சிங்கள மக்களுக்கு ஆத்திரமூட்டி அவர்களைக் காட்டு அநாகரிகமாக நடக்கத் தூண்டுமாயின் நாம் மூச்சு விடுவது கூட அவர்களைத் தூண்டவே செய்யும்.

1958-ல் கலவரம் செய்தவர்கள் தமிழர்களைக் கண்டபடி தாக்கினார்கள், கொன்று குவித்தார்கள். அத்தோடு அவர்கள் நின்று விடவில்லை. நாட்டின் பிரதமரை, தம்மில் ஒருவரையும் பின்னர் கொன்று தீர்த்தார்கள்.

### எதிர்ப்பு காட்ட வேண்டும்

“நாம் எங்கள் நல் வாழ்வுக்காக எதைச் செய்தாலும் சிங்கள மக்கள் ஆத்திரமடைவார்களே என்று சும்மா இருந்தால் எமது இனம் பூண்டோடு அழிய வேண்டியதுதான். உரிமைகள் தாமாக வரா. விடுதலை நம்மைத் தேடி வராது. நாம் அதை நாடிப் போக வேண்டும். அதற்காகப் பாடுபட வேண்டும்.

இன்றைய நிலையில் சிங்கள அரசாங்கம் தமிழ்பேசும் மக்களுக்கு மென்மேலும் தீமையே செய்துகொண்டு வருகிறது. அதனால் தமிழ் பேசும் இனம் அரசாங்கத்துக்குத் தன் எதிர்ப்பைத் துலாம்பரமாகக் காட்ட வேண்டும்; தொடர்ந்து காட்டியாக வேண்டும்: விடாப்பிடியாகக் காட்டிக் கொண்டே இருக்க வேண்டும்.

### எதிர்ப்பும் ஒத்துழைப்பே

“நாம் சிறுபான்மையினராக இருக்கும் வரையில் பெரும்பான்மையினரை எதிர்த்து நிற்பதால் எமக்கு ஆகப்போகும் நன்மை ஒன்றுமில்லை என்றும் ஒத்துழைப்பு நல்குவதால் மட்டுமே லாபமடையலாம் என்றும் சொல்பவர்களுக்கு நாம் கூறுவது இதுதான்: எங்களுடைய எதிர்ப்புக்கூட ஒரு வகையில் ஒத்துழைப்பே. அதாவது தீமை செய்பவர்களுக்கு அவர்கள் செய்யும் தீமையை எமது எதிர்ப்பு மூலம் சுட்டிக் காட்டி அவர்களை நல்வழிப் படுத்த முயல்வது அசல் ஒத்துழைப்பே தவிர வேறொன்றுமில்லை.

### சிங்களவர்கள் எமது சகோதரர்கள்

“அரசாங்கம் தமிழ்பேசும் இனத்துக்கு பாதகமாக எடுக்கும் நடவடிக்கைகளுக்காக அரசாங்கத்தையே நாம் எதிர்க்கிறோம்; சிங்கள மக்களை அல்ல. அவர்கள் எப்பொழுதும் எங்கள் சகோதரர்களே. சமஷ்டி (இணைப்பு) ஆட்சியில் சுதந்திர புருஷர்களாகத் தன்மானத்துடன் அவர்களுடன் சரிசமதையாகக் கூடி வாழவே நாம் விரும்புகிறோம். தமிழரசுக் கட்சி இந்த லட்சியத்தை முன் வைத்தே தொண்டாற்றி வருகிறது”—இவ்வாறு தமிழரசுத் தந்தை திரு. எஸ். ஜே. வி செல்வநாயகம் பேசி முடித்தார்.

### முதல் தேவை விடுதலை

ஜனாப் மஷூர் மௌலானா பேசுகையில் தமிழ்பேசும் மக்களுக்கு தனிப்பிரதேசம் வேண்டும் என்பதை ஆதாரபூர்வமாக விளக்கிக்கூறினார்.

ஜனாப் மஷூர் மௌலானா தொடர்ந்து பேசுகையில், “அடிமைத் தளையில் சிக்கித் தவிக்கும் சிறுபான்மை இனத்தின் முதல் தேவை விடுதலை-பின்னர்தான் மற்ற எல்லாம்” என்றார்.

ஜனநாயக தொழிலாளர் காங்கிரஸ் சார்பில் ஜனாப் பீர்முகமதுவும், மற்றும் திருவாளர்கள் இரா அதிமணி ஏ. இளஞ்செழியன் ஆகியோரும் கூட்டத்தில் பேசினார்கள்.


மாபெரும் கவியரங்கம்

தலைவர்

**கவிஞர் கண்ணதாசன்**

1. கவிஞர் முடியரசன்
2. ” வாணிதாசன்
3. ” தமிழண்ணல்
4. ” பெரி. சிவனடியான்
5. ” இளஞ்சேரன்

ஆகியோர் பங்குபற்றுகிறார்கள்.

எங்கே?

**1960 “இனமுழக்கம்”**

பொங்கல் மலரில்

இன்னும் ஆசிரியர் சி. பி. சிற்றரசின் அண்ணா, பெரியார் பற்றிய சிறப்பு கட்டுரைகளும் அறிஞர் பெரு மக்களின் கதைகள், கட்டுரைகள் கவிதைகளும் மலரில் உண்டு. எம். ஜி. ஆரின் பேட்டியும் புகைப்படமும் மலரில் இடம் பெறுகிறது.

தனிமலர் தபால் செலவு உட்பட ரூபாய் 2/50

வியாபாரிகளுக்கு தகுந்த கழிவு உண்டு.

போஸ்டல் ஓடர் அனுப்பி மலர் பெறுக!

V. P. P. ஏற்றுக்கொள்ளப்படும்

விபரங்களுக்கு:-

**தென்னவன் நூலகம்,**

த. பெ. எண் 1383

151, செட்டியார் தெரு,

கொழும்பு.


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# தமிழ்ப் பிரதேசம் பறிபோவதைத் தடுக்க

## தமிழரசுக்கட்சி தொடர்ந்து நடவடிக்கை எடுக்கும்

## (சிங்கள) குடியேற்றத் திட்டங்களால் தமிழினத்துக்கு என்றும் ஆபத்தே

### தமிழுக்கு சம அந்தஸ்து வேண்டும் - சிங்களமல்ல சிங்களம் மட்டும் சட்டமே எமது வைரி

(7-ம் பக்கத் தொடர்ச்சி)

சமீபத்தில் நடந்த உள்ளூராட்சித் தேர்தல் முடிவுகள் எடுத்துக் காட்டுகின்றன.

#### இன வெறியும் மொழி வெறியும்

இலங்கைக்குக் கிடைத்த சுதந்திரத்தில் தமிழ் பேசும் மக்களும் யாதேனும் பயனடைய வேண்டுமெனில் இன்றைய ஒற்றையாட்சி முறைக்குச் சாவுமணி அடிக்க வேண்டும். சிங்கள அடக்குமுறை ஆட்சிக்குத் தூண்டுதல் அளிப்பது இவ்வொற்றையாட்சி அரசமைப்பேயாகும். இவ்வாட்சிமுறை இன வெறியையும் மொழிவெறியையும் தூண்டி அரசியல்வாதிகளின் சுயநலம் பொது மக்களைச் சுரண்டுவதற்கு சந்தர்ப்பங்களை உண்டாக்கிவிடுகிறது. எமது தாய்நாட்டின் சமுதாய வாழ்க்கையையும் பொருளாதாரத்தையும் நிர்மூலமாக்கும் சீர்கேட்டை ஒழிக்க இந்நாட்டிலே இணைப்பரசு ஏற்படுத்தப்பட வேண்டும்.

#### சமஷ்டி எது?

இணைப்பரசு ஏற்பட்டால் மாத்திரமே தமிழ் பேசும் மக்கள் தங்கள் அலுவல்களைத் தாங்களே கவனித்துக் கொள்ளச் சந்தர்ப்பம் கிடைக்கும். நாட்டின் பொருளாதாரக் கொள்கைக் குறைபாடுகளுக்கெல்லாம் தமிழ் பேசும் மக்களே காரணமென்று சிங்கள அரசியல்வாதிகள் தமிழ் பேசும் மக்கள்மீது பழிகூறிச் சிங்கள மக்களை ஏமாற்ற முடியாத நிலையும் அப்போதுதான் ஏற்படும்.

பிரதேச விவகாரங்களைக் கவனிப்பதற்கு ஏற்படக்கூடிய 2 அல்லது அதற்கு மேற்பட்ட பிரதேச அரசுகள் நாட்டின் வலிமையையும் ஒற்றுமையையும் கருத்தில்கொண்டு தமக்குப் பொதுவான பிரச்னைகளைக் கவனிப்பதற்காக ஒரு மத்திய அரசில் இணைந்து செயலாற்றும் இணைபரசுத் திட்டம் நாட்டைக் கூறுபடுத்தும் திட்டம் என்று யார்தான் கூற முடியும்? ஆங்கில ஆட்சியில் வல்லுநர் டைசி கூறுவதுபோல, "அரசாங்கத்தின் உரிமைகளையும் தேசிய இனங்களின் ஒற்றுமையையும் இசைவுபடுத்தும் ஒரு சாதனமே சமஷ்டி அரசமைப்பு.

வேற்றுமையில் ஒற்றுமை காண்பதே இணைப்பரசின் குறிக்கோள். "இணைப்பு-ஆட்சி" என்பது பிரிவினையே என்று கூறுபவர்கள் ஒன்றில் இவ்வாட்சி முறை இன்னதென்று அறியாதவர்களாக இருத்தல் வேண்டும்; அல்லது அறிந்தும் தமது நேர்மையற்ற அரசியல் வாதத்திற்காக உண்மையைத் திரித்துக் கூறும் நயவஞ்சகர்களாக இருத்தல் வேண்டும்.

#### பிரிக்கப்படுவது அதிகாரம்-நாடு அல்ல

அவ்வப் பிரதேசங்களுக்குரிய பிரச்னைகளுக்குத் தீர்வு காண்பது பிரதேச அரசாங்கத்தின் பொறுப்பு. இவை தவிர்ந்து, தேசிய முக்கியத்துவம் பெறும் விஷயங்களான பாதுகாப்பு, வெளிநாட்டுத் தொடர்புகள், போக்குவரத்து, சுங்கம், ஏற்றுமதி இறக்குமதித் தீர்வைகள்போன்றவை மத்திய அரசாங்கத்தின் பொறுப்பில் இருக்கும். இவ்விதமாகத் தேவைக்கேற்றபடி நாட்டையல்ல ஆட்சியதிகாரத்தை பிரித்துப் பங்கிட்டுக்கொள்ளும் அரசமைப்பே சமஷ்டி அரசமைப்பு ஆகும். இராணுவமும், வெளிநாட்டுத்தொடர்புகளும் மத்திய அரசாங்கத்திடமிருக்கும்பொழுது பிரிந்துபோவது என்ற பேச்சுக்கே இடமிருக்க முடியாது.

இணைப்பாட்சி முறையை நிலைநாட்ட ஐக்கிய அமெரிக்காவில் ஓர் உள்நாட்டுப் போரே நிகழ்ந்திருக்கிறது. இராணுவம் மத்திய அரசாங்கத்தின் கைகளிலிருந்தபடியால் பிரிவினைச் சக்திகள் அங்கு வெற்றிபெற முடியவில்லை.


இந்தியாவின் உயர்ந்த ரக உற்பத்தி!
மங்கையர் மனதுக்குகந்தது

உஷா தையல் மெஷின்களே!




- ஒருவரின் ஆயுள் காலம்முழுவதும் உழைக்கக்கூடிய வெகுமதி
- மாதத் தவணைக் கட்டணங்களில் பெறுக் கொள்ளலாம்.
- இலங்கை பூராகவும் விற்பனையாகிறது.
- உங்கள் உள்ளூர் விற்பனையாளர்களைக் கேளுங்கள்.

சோல் ஏஜண்டுகள்:

ரெய்முசன்ஸ் லிமிட்டெட்,

88 A, மெயின் வீதி, கொழும்பு-11

போன்: 4243, 5060

கல்கத்தாவிலுள்ள இந்தியன் என்ஜினியரிங் எக்ஸ்போர்ட் புரொமோஷன் கவுன்ஸிலால் நடாத்தப்படுவது


#### நாட்டுப் பிரிவினை தற்கொலை முயற்சி

துண்டிக்கப்பட்ட இலங்கைத் தமிழ் பேசும் பகுதிகளில்தனி ஆட்சி ஒன்றை ஏற்படுத்தி, இலங்கையில் வாழும் ஏனைய தமிழ் பேசும் மக்களையும் எம்மிடமிருந்து துண்டித்துவிடும் பயங்கர நிலையை நாம் விரும்புவதற்கில்லை. நாட்டை இவ்வகையில் துண்டாடுவதினால் இலங்கை மக்கள் அனைவரின் நலனுமே தற்கொலையில் முடிந்துவிடும் என்பது எமது திடமான கருத்து. எமது வேண்டுகோள் மிகத் தெளிவானது. நாம் வேண்டுவதும் ஒன்றேயொன்றுதான். வாழையடி வாழையாகத் தமிழ் பேசும் மக்கள் வாழும் பகுதிகளை ஆட்சிபுரியும் அதிகாரத்தில் தர்மநியாயமான பங்கைத் தமிழ் பேசும் மக்களுக்குத் தந்துவிட வேண்டும் என்றுதான் கோருகிறோம்.

#### தமிழ்ப் பிரதேசப் பாதுகாப்பு

தமிழ் அரசுக் கட்சியின் இன்னொரு இலட்சியம் பரம்பரைபரம்பரையான தமிழ் பேசும் பிரதேசங்களைப் பறிபோகவிடாது காப்பாற்றுவதாகும். சுதந்திரம் கிடைத்த நாள்தொடக்கம் ஒன்றன்பின் ஒன்றாக வந்த அரசாங்கங்கள் வரண்ட பகுதிகளில் நிறைவேற்றி வந்த குடியேற்றத் திட்டங்களினால், இந்நாட்டிலுள்ள தமிழ் பேசும் இனத்திற்கும் பேராபத்து ஏற்பட்டிருக்கிறது. அன்று மலைநாட்டுத் தமிழ் பேசும் மக்கள் வாக்குரிமை இழந்ததினால் பாராளுமன்றத்தில் தமிழ் பேசும் மக்கள் பிரதிநிதிகள் தொகை குறைந்தது இன்று தமிழ்ப் பிரதேசங்களில் சிங்கள மக்களைக் குடியேற்றுவதினால் தமிழ் பேசும் மக்கள் பிரதிநிதிகள் தொகை மேலும் குறைக்கப்பட்டிருக்கிறது.

#### அம்பாறை சிங்களமயம்

தமிழ் பேசும் மாகாணமான கல்லோயாவின் தென் பகுதியில் உள்ள அம்பாறை இன்று தனிச் சிங்களத் தொகுதியாகிவிட்டது. பறிபோய்விட்ட இத் தமிழ்ப் பிரதேசத்தின் சார்பில் பாராளுமன்றப் பிரதிநிதியாவதற்குப் போட்டியிடுபவர்கள் பன்னிரண்டு பேர். அத்தனை பேரும் சிங்களவர்கள்!

#### கந்தளாய் பறிமுதல்

இதேபோன்றுதான் புகழ் பெற்ற தமிழ்ப் பிரதேசமாகிய கந்தளாயிலும் குடியேற்றம் என்ற ஆயுதம் தமிழ்ப் பிரதேசத்திலேயே தமிழ் பேசும் மக்களைச் சிறுபான்மையோராக்குவதில் வலுப்பெற்றிருக்கிறது. இன்னும் சிறிதுதூரம் சிங்களக் குடியேற்றம் நடைபெறுமானால் மூதூர், திருமலைத் தொகுதிகளும் சிங்களத் தொகுதிகளாகிவிடும். பாராளுமன்றத்தில் மேலும் அதிகப்படியாக இரண்டு சிங்களப் பிரதிநிதிகள் இடம் பெறுவார்கள்.

#### பதவியாவின் கதி

திருமலைப் பகுதியிலுள்ள பதவியா இன்னுமோர் உதாரணம். பிரிட்டிஷ் கடற்படைத் தளம் திடீரென்று மூடப்பட்டதினால் வேலையிழந்த ஆயிரக்கணக்கான மக்களுக்கே பதவியாத் திட்டத்தில் காணி வழங்கப்படுமென்று திரும்பத் திரும்பக் கூறியது பண்டாரநாயகா அரசாங்கம். ஆனால் இவ்வாக்குறுதியை அரசாங்கம் கௌரவிக்கவில்லை. முன்னாள் காணி-காணி நில அபிவிருத்தி மந்திரி திரு சி. பி. டி. சில்வா மேல்மாகாணத்திலிருந்து 100 வீதம் சிங்களவர்களைக் கொண்டுபோய் அங்கே குடியேற்றி வைத்திருக்கிறார். சிங்கள இனவெறிக்குப் பதவியாவிலும் பார்க்க வேறு பிரசித்தி பெற்ற இடம் இன்று எங்கும் காண முடியாது.

# தமிழுக்கு உரிமை இல்லையேல் இன ஒற்றுமையும் இல்லை

மொழி விஷயத்தில் எமது கட்சி சிங்களத்துக்கும் தமிழுக்கும் சமஅந்தஸ்து அதாவது ஒத்த மதிப்பு நிலை கோருகிறது. இப்படிக் கூறும் போது நாம் கருதுவது இதுதான். சிங்களப் பிரஜைகளுக்குச் சிங்களம் எப்படியிருக்கிறதோ அப்படியே தமிழ் பேசும் பிரஜைகளுக்குத் தமிழ் இருத்தல் வேண்டும். சிங்கள மொழி புனரமைக்கப்படுவதைத் தமிழ் அரசுக் கட்சி மனமுவந்து ஆதரிக்கிறது. ஆனால் "சிங்களம் மாத்திரமே" என்று போற்றும் போக்கினையே நாம் மூர்த்தண்யமாக எதிர்க்கிறோம். ஏனெனில் 'சிங்களம் மட்டுமே' என்ற போக்குத் தமிழ் மொழியை நசுக்கிவிடும்; தமிழ் பேசும் மக்களை அடிமைப்படுத்திவிடும். இரண்டு, அல்லது ஆகக்கூடியது மூன்று மொழிகள் பேசப்படும் நாட்டில் ஒரேயொரு மொழிக்குத்தான் மதிப்பு நிலை என்பதற்கு எவ்வித நியாயமும் கிடையாது.

#### தமிழுக்கு உரிமை இல்லையேல் இன ஒற்றுமையும் இல்லை

உதாரணமாக, பெல்ஜியம், பின்லாந்து, கனடா ஆகிய நாடுகளில் ஆங்காங்கே வழங்கும் மொழிகள் அனைத்திற்குமே சமநிலை வழங்கப்பட்டிருக்கிறது. இன்னும் இரண்டுக்கு மேற்பட்ட மொழிகள் வழங்கும் நாடுகளிலேகூட, வெகு அற்ப எண்ணிக்கையுடைய தேசிய இனங்களின் மொழிகளுக்கும் சம அந்தஸ்து வழங்கப்பட்டிருக்கின்றது. இதற்கு உதாரணமாக சுவிற்சர்லாந்தைக் கூறலாம். இலங்கையில் எமது தமிழ் மொழி தாழ்ந்த நிலைக்குத் [illegible] நிரந்தர சாந்தியோ ஏற்படும் என்று நம்புவதற்கில்லை.

#### கல்லோயாத் திட்டத்தில் நயவஞ்சகம்

கல்லோயாப் பள்ளத்தாக்கு அபிவிருத்தித் திட்டம் ஆரம்பித்தபொழுது அப்போது பிரதமராயிருந்த திரு டி. எஸ். சேனநாயகாவும் விவசாய மந்திரியாயிருந்த திரு டட்லி சேனநாயகாவும் கிழக்கு மாகாணத் தமிழ் பேசும் மக்களுக்காகவே அதைத்தாம் ஆரம்பிப்பதாகப் பறைசாற்றினார்கள். மேலும் சிங்கள அரசாங்கங்கள் தமிழ் பேசும் மக்களைப் பொறுத்தவரை எத்தகைய தாராளமனப்பான்மையுடன் நடந்துகொள்ளுகின்றன என்பதற்கு இது ஒரு எடுத்துக்காட்டு என்றும் பெருமையடித்துக் கொண்டார்கள். ஆனால் சிங்கள அரசாங்கங்கள் எத்தகைய நயவஞ்சகத்துடன் நடந்து கொண்டன என்பது அன்று எம்மை நம்ப மறுத்தவர்களுக்கும்கூட இன்று தெளிவாகிவிட்டது.

#### ஒத்துழைப்பு தமிழர்கள்

இந்தவிதமான நயவஞ்சகத் திட்டங்களுக்கு வழிவகுத்தவர்கள் முன்னாள் சிங்கள அரசாங்கங்களின் தலைவர்கள் மாத்திரந்தான் என்று அவர்களை நாம் குறைகூற முடியாது. தமது (சிங்கள) இனத்தின் நலன்களைப் பாதுகாப்பதில் கண்ணுங்கருத்துமாய் நின்று பணிபுரிந்தவர்கள் அவர்கள். ஆனால் சிங்கள எதிர்ப்புக் கோஷங்களினால் வாக்குகளைப் பெற்றுப் பாராளுமன்றமேறி தம் வாக்குறுதிகளைக் காற்றில் பறக்கவிட்டு சிங்களத் தலைவர்களுடன் ஒத்துழைத்த தமிழ் பேசும் பிரதிநிதிகள் இருக்கிறார்களே அவர்களுக்கும் மேற்படி விஷயத்தில் பங்குண்டு. தமிழ் பேசும் இனம் அவர்களை மன்னிக்க முடியாது.

#### கட்டுக்குளத்தின் கதி

தமிழ்ப் பிரதேசமாகிய மன்னார் வரண்ட மணற்பாங்கான பகுதி. இங்கே பசுமை சிறிதாவது வேண்டுமானால் கட்டுக்குளத்தை சுற்றிய சிறு பிரதேசத்தில்தான் அதைக் காண முடியும். இப்பிரதானமான குளத்தையோ இதற்கு அளிக்க வேண்டிய நீர் வசதிகளையோ பற்றி சிங்கள அரசாங்கங்கள் கடந்த 10 வருடங்களாகக் கவனித்ததில்லை. இதன் காரணமாகக் குளம் தூர்ந்து தண்ணீர் வீணே வடிந்தோடி விடுகிறது விலைமதிப்பற்ற நீர் வீணாகிறது, இல்லை வீணாக்கப்படுகிறது. முன்னாள் மந்திரி திரு மைத்திரிபால சேனநாயக்காவின் தொகுதியான மதவாச்சியிலுள்ள சிங்களப் பகுதிகளுக்கு நீர்ப்பாசன வசதியளிக்கவும் இவ்வசதிகளைப் பயன்படுத்தி அச் சிங்களப் பகுதிகளில் சிங்கள மக்களைக் குடியேறவும் கட்டுக்குளத்துக்கு வரும் நீர் மதவாச்சியில் தடுத்து நிறுத்தப்படுகிறது. தமிழ் பேசும் மக்களின் வாழ்க்கையைப் பாழ்படுத்தி சிங்கள மக்களுக்கு வாழ்வளிக்கும் சிங்கள அரசாங்கத்தின் நெஞ்சழுத்தமான செயல் இது.

#### பணம் பாழ்

சிங்கள அரசாங்கத்தின் மனிதாபிமானமற்ற இத்

(11-ம் பக்கம் பார்க்க)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# மலைநாட்டுத் தமிழரின் வாக்குரிமையை பறித்தது முதல் சதி

## இம்மக்களுக்கு பிரஜா உரிமை பெற்றுக் கொடுக்க தமிழரசுக் கட்சி சங்கற்பம்

### தீண்டாமை ஒழிப்புக்கும் விரதம் ஏற்றிருக்கிறது

(10-ம் பக்கத் தொடர்ச்சி)

நில விநியோகத்திட்டம் மன்னார்ப் பகுதியினைத்தையுமே பாலைவனமாக்கிவிடப் போகிறது. தமிழ் பேசும் இனத்தை நிர்மூலமாக்கும் கொள்கை இது. அடுத்தடுத்துவந்த ஐக்கிய தேசியக் கட்சி, மக்கள் ஐக்கிய முன்னணி அரசாங்கங்களின் இக் குடியேற்ற, காணி அபிவிருத்தித் திட்டங்கள் நாட்டின் பொருளாதாரத்தை எவ் வழியிலும் அபிவிருத்தி செய்ய உதவவில்லை என்று கூறப்படுகிறது. எனவே கோடிக்கணக்கான் ரூபாய்களை விழுங்கிவிட்ட இக் குடியேற்ற காணி அபிவிருத்தித் திட்டங்கள் பொருளாதார வளர்ச்சியையே இலட்சியமாகக் கொண்டன என்று யாரும் வேஷம் போடுவதில் பயனில்லை.

#### குடியேற்றத் திட்டங்கள் படுதோல்வி

இதை நாங்கள் ஐக்கிய தேசியக் கட்சிக்கும் மக்கள் ஐக்கிய முன்னணிக்கும் மாத்திரம் கூறவில்லை. லங்கா சமசமாஜக் கட்சிக்கும் இதைக் கூற விரும்புகிறோம். தமிழ் பேசும் மக்களுக்கெதிரான இந்த இனவாரிஆக்கிரமிப்பிலேயே நாட்டின் நிதி விரயமாக்கப்படுகிறது உலக அறிஞர்களால் ஏற்றுக் கொள்ளப்பட்ட சமூக—பொருளாதார அளவுகோலின்படி, கந்தளாய், கல்லோயாபோன்றகுடியேற்றத் திட்டங்கள் படுதோல்வியே தவிர வேறல்ல என்று பட்டவர்த்தனமாகக் கூறப்படுகிறது. கூறியவர் யார் என்பது கவனத்துக்குரியது. கிராமிய சமூகங்கள், சமூக-பொருளாதார அபிவிருத்தி என்னுந் துறைகளில் மாபெரும் மேதையான பேராசிரியர் பி. எச். பார்மர், (B. H. Farmer) இலங்கையிலுள்ள விவசாயிகள் குடியேற்றத் திட்டங்கள்" என்னும் நூலில் இக் கருத்தை ஐயந்திரிபுக்கிடமின்றி அழுத்தமாகக் குறிப்பிட்டிருக்கிறார்.

#### தாயகத்தை தமிழரசுக் கட்சி பாதுகாக்கும்

சிங்கள அரசாங்கங்களின் இக் குடியேற்றக் கொள்கைகளுக்கெதிராகக் கண்டனம் தெரிவித்திருப்பதுடன் சிங்களக் குடியேற்றங்களைச் சில சமயங்களில் தடுத்து நிறுத்தியும் இருக்கிறோம். பெருந்தொகையான தமிழ் பேசும் குடியேற்ற வாசிகளுக்கு நிலம் பெற்றுக் கொடுத்தும் இருக்கிறோம் நாம் என்று தமிழ் அரசுக் கட்சி தைரியமாகக்கூற முடியும். பண்டாரநாயகா-செல்வநாயகம் ஒப்பந்தம் கையெழுத்தான பொழுது, தமிழ் பேசுவோா பெரும்பான்மையாயிருக்கும் பகுதிகளைச் சிங்களப் பெரும்பான்மையோர் பகுதிகளாக்குவதற்குக் குடியேற்றத் திட்டங்களை ஒரு கருவியாகப் பாவிக்கக் கூடாது என்று ஒரு வாக்குறுதியை இலங்கையின் பிரதமர் ஒருவரிடமிருந்து பெறுவதில் வெற்றி கண்டிருக்கிறது தமிழ் அரசுக் கட்சி. இவ்வழியில் தமிழ் பேசும் மக்களின் பரம்பரைத் தாயகத்தைப் பாதுகாப்பதற்கு தமிழரசுக் கட்சி தன்னாலானவரை இன்னும் தொடர்ந்து போராடும்.

#### மலைநாட்டுத் தமிழர் பிரஜா உரிமை

பிரஜா உரிமை: மலைநாட்டில் நிரந்தரமாகக் குடியேறியிருக்கும் தமிழ்த் தொழிலாளிகளின் வாக்குரிமையைப் பிடுங்கியது ஜனநாயகத்துக்கு முரணானது மட்டுமல்ல விவேகமற்ற செயலும்கூட அது என்று தமிழ் பேசும் மக்களென்ன தாராள மனம் படைத்த சிங்களவர்களே அப்படி நம்புகிறார்கள். மலைநாட்டுத் தமிழ் மக்களின் பிரச்னை இலங்கை—இந்தியப் பிரச்னையல்ல என்பது எமது கட்சியின் கருத்து. இந்திய அரசாங்கம் "நாடற்றவர்கள்" பற்றித் தனக்குக் கரிசனையே யில்லை என்று கூறிவிட்டபின் இந்த எம் கருத்து இன்றும் வலியுறுத்தப்பட்டிருக்கிறது. காலஞ்சென்ற திரு டி. எஸ். சேனநாயகாவைத் தலைவராகக் கொண்ட அமைச்சர் சபை இலங்கை அரசமைப்புச் சீர்திருத்தம் பற்றிச் சமர்ப்பித்த பிரேரணைகளில் ஒன்றை இங்கு ஞாபகப்படுத்துவது பயனுள்ளதாகும்.

#### வாக்குரிமை பறித்தது முதல் சதி

101 பிரதிநிதிகளைக் கொண்ட பாராளுமன்றத்தில் 14மலைநாட்டுத் தமிழ்ப் பிரதிநிதிகள் இருப்பார்கள் என்று குறிப்பிடப்பட்டது. பெரும்பான்மை இனத்தவர்கள் தமிழ் பேசும் மக்களுடன் நியாய நெறியுடனே நடந்து கொள்வார்கள் என்பதற்கு இச் சலுகை ஒரு எடுத்துக்காட்டாகுமென திரு டட்லி சேனநாயகா ஒரு தெளிவுரை விஞ்ஞாபனம் மூலம் உறுதிப்படுத்தினார். இச் சமிக்கை இதயபூர்வமானதேயெனச் சோல்பரி ஆணைக் குழுவினரும் ஏற்றுக் கொண்டார்கள். இவ் வேற்பாட்டினால், அமைச்சர் சபை இந்திய பரம்பரையினரான மலைநாட்டுத் தமிழ் மக்களை இந் நாட்டின் சமுதாயத்தில் ஒரு பகுதியினர் என ஏற்றுக்கொள்ளும் விருப்பத்தை எடுத்துக் காட்டி விட்டது. ஆனால் பின்னர் இவர்கள் இம் மக்களின் வாக்குரிமையைப் பிடுங்கியது மாபெரும் நம்பிக்கைத் துரோகமாகும். இன்று நடைமுறையிலுள்ள ஒற்றை ஆட்சி அரசமைப்பில் இலங்கை வாழ் தமிழ் பேசும் மக்களுக்கிருந்த அற்ப அரசியற் செல்வாக்கையுமே அபகரிப்பதற்கு எடுத்த முதல் சதித்திட்டம் மலைநாட்டுத் தமிழ் மக்களின் வாக்குரிமையைப் பிடுங்கியதாகும்.

#### கட்சியின் சங்கற்பம்

இலங்கையின் பொருளாதார சுபீட்சத்திற்காகப் பெருமளவில் தொண்டுபுரிந்தவர்கள் இம் மக்கள், இன்றும் அப்படியே தொண்டாற்றி வருகிறார்கள். மற்றும், புகலிடமும் இவாகளுக்கில்லை. எனவேதான் எமது கட்சி இம் மக்களை "மலைநாட்டுத் தமிழர்" எனக் குறிப்பிடுகிறது. இவர்கள் பிரச்னை இந்திய-இலங்கைப் பிரச்னையல்ல. இது மனிதாபிமானத்துடன் தீர்க்க வேண்டிய பிரச்னை. இம் மக்களுக்குப்பிரஜா உரிமை அனைத்தையுமே பெற்றுக் கொடுக்கத் தமிழரசுக் கட்சி சங்கற்பம் பூண்டிருக்கிறது.

#### தீண்டாமை ஒழிப்புக்கு விரதம்

சமுதாய ஏற்றத் தாழ்வுகளையும், குறிப்பாக ஒரு பகுதியினரிடையே இன்னும் நிலவிவரும் தீண்டாமையையும் ஒழித்துக் கட்டுவதெனத் தமிழ் அரசுக் கட்சி விரதமேற்றிருக்கிறது. தேசிய விடுதலை இயக்கம் ஒன்றிற்கு மக்களைத் தயார் செய்து அவ்வியக்கத்தின் முன்னணியில் நின்று உழைப்பதற்கு தன்னை அர்ப்பணித்திருக்கும் ஒரு கட்சி, தனது சகோதரர்களில் ஒரு பகுதியினர் ஏனைய சகோதரர்களை அடக்கி ஒடுக்கவும் அவமானப்படுத்தவும் இடங்கொடுக்கமுடியாது தீணடமை என்பது தார்மீக சிந்தையிலும் விடுதலை உணர்ச்சியிலும் எமது மனச்சாட்சிக்கு விடப்படும் ஒரு மாபெரும் சவால் ஆகும். உருப்படியான தொண்டினைச் செய்வதின் மூலமே நாம் இந்தச் சவாலுக்குப் பதிலளிக்க வேண்டும். எனவே தமிழ் பேசும் மக்களின் விடுதலைக்காகப் போராடுவதில் எமக்குத் தேவையான அறநெறி வலியையும் ஆன்ம பலத்தையும் தேடிக் கொள்வதற்கு சகலரையும் தூய்மைப்படுத்தி ஒற்றுமைப்படுத்தும் இயக்கமொன்றில் எமது மக்கள் உடனே ஈடுபடுதல் வேண்டும். இதையொட்டி, "தாழ்த்தப்பட்டோர்" என்று அழைக்கப் படுவோரை எத்துறையிலேனும் பாரபட்சமாக நடத்த முற்படுவோருக்கு தண்டனை விதிக்கும் "உரிமைத் தொகுப்பு சட்ட"மொன்றை ஆக்குவதில் எமது ஆட்சி தனது பூரண ஆதரவை அளிக்கும்.

#### கட்சியின் வேண்டுகோள்

இறுதியாக ஒரு வார்த்தை. இவ்விஞ்ஞாபனம் தமிழ் பேசும் மக்களுக்கு விடுக்கப்படும் ஒரு செய்தியாகும். எம்மினத்தின் சரித்திரத்தில் நெருக்கடி நிறைந்த கட்டத்தில் வாழ்கிறோம். நசுக்கப்படும் எமது குரல் இந்நாட்டின் பாராளுமன்றத்தில் மாத்திரமல்ல, உலக அரங்கிலும், ஐக்கிய நாடுகள் சபையிலும் ஒலிக்க வேண்டுமானால், தமிழ் பேசும் மக்களின் ஐக்கியம் வலுப்பெற வேண்டும். இவ்வைக்கியத்தின் பேரில், தமிழ் பேசும் மக்கள் அனைவரின் சார்பிலும் பேசுதற்கு வேண்டிய தத்துவத்தை எமக்குத் தாருங்கள் என்று இலங்கை வாழ் தமிழ் பேசும் மக்களை இலங்கைத் தமிழ் அரசுக் கட்சி கேட்டுக்கொள்ளுகிறது.

#### அரசாங்கம் பணிந்தது

தீவிர தமிழ் எதிர்ப்பு வெறிகொண்ட மக்கள் ஐக்கிய முன்னணி தன் செல்வாக்கின் சிகரத்திலிருந்த பொழுதுகூட தன் பிடியிலிருந்து இறங்கி வந்து தமிழ் அரசுக் கட்சியுடன் சமாதானம் பேசி ஒப்பந்தம் செய்து கொள்வது அந்த அரசாங்கத்தைப் பொறுத்தவரையில் அவசியமாயிற்று; [illegible] பிரதேச சாதி சமய பேதங்களின்றித் தமிழ் பேசும் மக்கள் ஏகோபித்து சட்டமறுப்புச் செய்யத் திடங்கொண்டு விட்டார்கள் என்பதை உணர்ந்தபடியினால்தான் அரசாங்கம் பணிந்துபோக வேண்டியேற்பட்டது.

#### நல்ல சந்தர்ப்பம்

'ஆளப்படுவோருக்குள் பிரிவினைகளுக்குத் தூபமிடும் சூழ்ச்சிகளால் சுலபமாக ஆட்சி செலுத்த முடியும்' என்ற ஏகாதிபத்திய வாதிகளின் உத்தியை கடந்த பத்தாண்டுகால அனுபவத்தில் சிங்கள அரசாங்கங்கள் கற்றுத் தேறிவிட்டன. இவ்வனுபவத்தின் அடிப்படையில் தமிழ் பேசும் மக்கள் ஒரே கொடியின் கீழ் வலுப்பெறுவதை விரும்பாத ஆட்சியாளர், தமிழ் அரசுக் கட்சியை எதிர்ப்பவர்களுக்கு ஆக்கமும் ஊக்கமும், அளிப்பதைக் கண்ணுறக் காண்கிறோம். எனவே ஆட்சியாளர்களின் சூழ்ச்சிகளுக்குச் சாவுமணியடித்து, ஆளப்படும் தமிழ் பேசும் மக்கள் ஒரே குரலில் போர்முரசு கொட்ட வாக்காளர்களுக்கு மீண்டுமொரு சந்தர்ப்பம் அளிக்கப் பட்டிருக்கிறது.

#### கட்சியின் தனிச் சிறப்பு

தமிழ் பேசும் மக்கள் வட மாகாணத்திலோ, கிழக்கு மாகாணத்திலோ, மலைநாட்டிலோ வாழ்ந்தாலும் அம் மக்கள் பெருங்குலத்தின் நல்வாழ்விற்காக தான் காட்டும் இலட்சியம் மூலமாகவும் அவற்றை அடையும் வழிகளான

* வேலைத் திட்டம்
* பிரசாரம்
* தன்னலமறுப்பு
* தியாகம்

ஆகியவற்றாலும் தமிழ் பேசும்மக்களுக்காகத்தன்னை அர்ப்பணித்திருக்கும் ஒரே யொரு கட்சி இலங்கைத் தமிழரசுக்கட்சியே ஆகும். வாழும் பிரதேசம், சாதி சமயம் ஆகிய பேதங்களை ஒழித்து, இலங்கைத் தமிழ்

(13-ம் பக்கம் பார்க்க)


கெம்பீரமாக தோற்றமளிக்கவேண்டுமா?
அணியுங்கள்
மௌலானு சாரங்களை
அகில இலங்கையிலும் அரை நூற்றாண்டுக்கு மேல் அழியாப் புகழ்பெற்ற இன்னமும் எழிலுடன் ஒப்புயர்வற்று சிறந்தோங்குவன
மௌலானு சாரங்கள்

MOULANA (Ceylon) Ltd.
மௌலானு (சிலோன்) லிமிட்.,
இரண்டாம் குறுக்குத் தெரு, கொழும்பு.


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# என். எம். பெரேராவின் ஆரம்ப சூரத்தனம்

(6-ம் பக்கத் தொடர்ச்சி)

பெருந்திரளாக வசிக்கும் நகர்ப்புறங்களில் கைத் தொழில் ஸ்தாபனங்களை நிறுவி உழைப்புச் சந்தர்ப்பம் கொடுப்பதுதான் முறை. கொழும்பு நகரிலும் அந்நகர்ப்புறத்திலும் வேலையில்லாது திண்டாடுவோரை நூறு மைல்களுக்கப்பால் கொண்டு சென்று குடியிருத்துவது வேலையில்லாத் திண்டாட்டத்திற்கு எவ்வகையிலும் மருந்தாகாது.

### உணவு உற்பத்தி பெருகாது

"உணவு உற்பத்தியைப் பெருக்குவதாயின் பெருமளவில் விவசாயம் செய்ய வேண்டும். விவசாய யந்திரங்களை உபயோகித்து நவீன உற்பத்தி முறைகளைக் கையாள வேண்டும். 2 அல்லது 3 ஏக்கர் காணியில் கல்வியறிவில்லாத மக்கள் தனித்தனியாகக் கமம் செய்து உணவு உற்பத்தியைப் பெருக்கமாட்டார்கள்.

இவ்வாறு திரு சேனநாயகாவின் பிரேரணையைக் கண்டித்துப் பேசினர் டாக்டர் என். எம். பெரேரா. குறித்த பிரேரணையைக் கமத் தொழில் நிர்வாகக் கமிட்டி புனராலோசனை செய்ய வேண்டுமென்று ஒரு திருத்தப் பிரேரணையையும் அவர் கொண்டு வந்தார். அத் திருத்தப் பிரேரணையை அட்டன் பிரதிநிதி திரு நடேச அய்யர் ஆம் ஓதினர்.

### ஆங்கிலேயர் பிறீமன் பேச்சு

இவ்விவாதத்தின்போது அநுராதபுரிப் பிரதிநிதியான காலஞ்சென்ற திரு ஈச். ஆர். பிறீமன் (ஆங்கிலேயர்) பேசிய சில குறிப்புகள் மிகவும் நுட்பமானவையாகவும் நகைச்சுவைக் கலப்புடையனவாகவும் இருந்தன. அவர் பேச்சின் சாராம்சம் பின்வருமாறு:

"சபையில் சமர்ப்பிக்கப்பட்ட அறிக்கை கமத் தொழில் நிர்வாகக் கமிட்டி முன்பு கொண்டுவரப்பட்டதேயல்லாமல் அந்த நிர்வாகக் கமிட்டியால் தயாரிக்கப்பட்டதல்ல. மந்திரி சேனநாயகா அவ்வறிக்கையைச் சமர்ப்பித்து அனுமதி கோரினார். மற்றையோர் 'ஆம்' என்றனர். அறிக்கை ஏற்றுக் கொள்ளப்பட்டது.

தாம் மாத்திரம் ஒரு அனுபந்தக் குறிப்பைச் சேர்த்ததாகத் திரு பிறீமன் சொன்னார். அக்குறிப்பு பின்வருமாறு: "Modesty compels the statement that the Executive Committee had nothing to do with the framing of this utopia" "அடக்கம் என்ற கோட்பாடு இந்த ஆகாயக் கோட்டையைத் தயாரித்ததில் நிர்வாகக் கமிட்டிக்கு ஒரு பங்குமில்லை என்று சமர்ப்பிக்கும்படி கட்டாயப்படுத்துகின்றது" என்று மேற்படி ஆங்கில வசனத்துக்கு தமிழாக்கம் கொடுக்கலாம்.

விவாத முடிவில் திரு சேனநாயகாவின் பிரேரணை எதிர்ப்பின்றி ஏற்கப்பட்டது. அதற்கு முன்னர் டாக்டர் பெரேராவின் திருத்தப் பிரேரணைக்கு மூன்றே மூன்று வாக்குகள் மாத்திரம் சாதகமாக கிடைத்தன. 31 வாக்குகள் பாதகமாகப் பதிவாயின. இவ்விவாதத்தின் போது தமிழ் பிரதிநிதிகள் என்ன செய்தார்கள் என்பதைக் கவனிக்க வேண்டும்.

### தமிழர் பிரதிநிதிகள் செய்தது

திரு மகாதேவா விவாதத்தின்பொழுது எதுவும் பேசவில்லை; வாக்கெடுப்பின் பொழுது ஆஜராகவுமில்லை. அதேமாதிரித்தான் திருவாளர்கள் பொன்னம்பலமும் குஞ்சு நடேசபிள்ளையும். திரு தர்மரெத்தினம் பேச்சு எதுவுமின்றி திரு சேனநாயகாவுக்கு ஆதரவு கொடுத்தார். சிறீ பத்மநாதனும் திரு தம்பிமுத்துவும் ஆதரித்துப் பேசினார்கள். திரு வைத்திலிங்கம் துரைசுவாமி அரியாசனத்திலமர்ந்திருந்தார்.

தமிழினத்தை அழித்தொழித்துவிடுவதற்குச் சதித் திட்டமிடுகிறார் திரு சேனநாயகா என்பது தமிழ் பிரதிநிதிகட்கு சிறிதும் விளங்கவில்லை. வருமுன் காப்பவன், வருங்கால் காப்பவன், வந்தபின் காப்பவன் என்ற தன்மையர் ஒருவருமில்லை. வந்த பின்னுந் துயில்பவர் என்ற தரத்தினரையே நாம் அன்று தெரிந்தனுப்பியிருந்தோம். பிரதிநிதிகள் என்று தற்பெருமைப்படும் சுயஇச்சைப் பிராணிகளையே நாம் நம்பியிருந்தோம். தமிழருக்கு என்று ஒரு அரசியல் கட்சி இல்லாதிருந்தது அப்போது. டாக்டர் பெரேரா அரசியல், பொருளாதாரத் துறை என்ற கோணங்களிலிருந்து ஆராய்ந்தார். தமிழினத்தின் தற்பாதுகாப்பு என்ற கோணத்திலிருந்து ஆராயவோ தொடர்ந்து கருமமாற்றவோ ஒருவருமில்லை. விடயமே புரியவில்லை.

20 வருடங்கட்கு முன்னர் பொருளாதார, அரசியல், சமூகவியல் என்ற கோணங்களிலிருந்து இக்குடியேற்றத் திட்டங்கட்கு எத்தகைய கண்டனம் பொருத்தமாக அமைந்ததோ அத்தகைய கண்டனம் இன்றைக்கும் மறுக்க முடியாத வகையில் பொருந்துவதாக இருக்கிறது.

### பார்மெர் கருத்து

இலங்கைப் பல்கலைக் கழகத்தில் சிலகாலம் பேராசிரியராக கடமை பார்த்த பார்மெர் என்பவர் ஒக்ஸ்போட் பல்கலைக் கழகப் பிரசுராலயத்தால் வெளியிடப்பட்ட ஒரு நூலில் "Pioneer Peasant Colonization in Ceylon" by B. H. Farmer-Oxford University Press 1957 page 316) இலங்கையில் நடாத்தப் பெற்று வரும் குடியேற்றத் திட்டம் அளவுக்கு மிஞ்சிய செலவைக்கொண்டுள்ளதாகவும் அத்தகைய குடியேற்றத் திட்டம் இலங்கையிலுள்ள பொருளாதார ஜன நெருக்கடிப் பிரச்னைகளுக்குகந்ததல்லவென்றும் கண்டித்திருக்கின்றார். ஒரு குடிபதிக்கு ரூபா 10,500 தொடக்கம் ரூபா 13,000 வரை முதலீட்டுச் செலவாக அமைகிறது என்றும் இவ்வளவு பண விரயத்தில் குடியேற்றம் நடாத்த முற்படுவது புத்திபூர்வமல்லவென்றும் அவர் அழுத்தம் திருத்தமாகக் கூறியிருக்கிறார்.

### கல்டோர் கண்டனம்

அதேமாதிரி கேம்பிரிட்ஜ் பல்கலைக் கழகப் பொருளியல்துறைப் பேராசிரியரும் ஒரு அபேதவாத அபிமானியுமான நிக்கோலஸ் கல்டோர் (Nicholas Kaldor) என்பவர் இலங்கை அரசாங்கத்தின் கோரிக்கையின் பேரில் இந்நாட்டுப் பொருளாதாரத்தை ஆராய்ந்து வெளியிட்ட அறிக்கையில இக்குடியேற்றத் திட்டத்தைத் தீவிரமாகக் கண்டித்திருக்கிறார். அவருடைய ஆணித்தரமான முடிவு பின்வருமாறு:-

"இக்குடியேற்றத் திட்டம் மிகப் பெரும் பண விரயத்தை ஏற்படுத்துவதாகும். இப்பணத்தை ரப்பர் தேயிலை முதலாய தோட்டப் பொருள் அபிவிருத்தியில் செலவிட்டால் மிகக் கூடிய பயனைக் கொடுக்கும். வேலையில்லாத் திண்டாட்டத்தை நிவர்த்தித்து உழைப்புச் சந்தர்ப்பம் கொடுப்பதற்கு கைத்தொழில்துறை விருத்தியே அத்தியாவசியமானது. குடியேற்றத் திட்டம் பயனற்றது" இதை ஆங்கிலத்தில் அவர்கள் பின்வருமாறு கூறினார்கள்:—

"Large scale scheme for the development of food production — by means of irrigation schemes etc. are found to be very wasteful in comparision with large scale schemes for the development of plantation agriculture."

........."In the long run the employment problem in my view can only be successfully tackled through industrialisation and large scale construction projects associated with industrial development than by agricultural colonization schemes"—vide "papers by visiting economists"—published by the National planning council, Colombo 1959.

மேற்கண்டவாறு அழுத்தந்திருத்தமாக இலகுவில் புரியும் வகையில் நிபுணர்கள் அபிப்பிராயம் கொடுத்திருக்கின்றனர்.

### பிலிப் குணவர்த்தன கருத்து

அவர்கள் மட்டுமல்ல, டாக்டர் என். எம் பெரேராவின் முன்னைநாள் சகபாடியான திரு பிலிப் குணவர்த்தனவே மந்திரியாக இருந்த பொழுது தயாரித்த "கமத் தொழில் திட்டத்தில்" ஐயத்திற்கிடமின்றி இந்தக் குடியேற்றத் திட்டங்களைக் கண்டித்திருக்கின்றார். மேலே கூறிய பேராசிரியர்கள் எடுத்துக்கூறிய நியாயங்களைவிட வேறு ஒரு பலமான காரணத்தையும் அவர் காட்டியிருக்கின்றார். இத்தகைய குடியிருப்புகளில் சமுதாயப் பற்று சமூக ஒற்றுமை (Social Cohesion) என்ற பண்புகள் இல்லாமலிருப்பதாகவும் அதன் காரணமாக விரும்பத்தக்க நாட்டு வாழ்க்கை எந்த வகையிலும் உருவெடுக்கவில்லையென்றும் 1958ல் கமத் தொழில் மந்திரி காரியாலயம் வெளியிட்ட "கமத் தொழில் திட்டம்" என்ற பிரசுரத்தில் சுட்டிக்காட்டியிருக்கின்றார். அப்படிக் கூறப்பட்டுள்ள பகுதியைக் கீழே தருகிறோம்:

"Colonization has brought in its train new social problem. From the few sociological studies made of some Colonization schemes, it is obvious that the new communities established in these areas lack that degree of social cohesion necessary for their economic improvement and the growth of a vigorous rural population" — vide Page 36 of Agricultural Plan — Ministry of Agriculture and Food.

### டாக்டர் பெரேரா 'கப்சிப்'

1939ல் பொருளாதார அரசியல் சமூகவியல் கோணங்களிலிருந்து இக்குடியேற்றத் திட்டத்தை ஆராய்ந்து டாக்டர் என். எம். பெரேரா கண்டித்தது போல் இன்றைக்கு பிரபல பேராசிரியர்களும் அவருடைய பழைய "சகோதரனும்" புள்ளி விபரங்களையும இதர அனுபவ உண்மைகளையும் முன்வைத்துக் கூடிய பலத்துடன் கண்டிக்கின்றனர். ஆனால் டாக்டர் என். எம். பெரேராவும் அவர் கட்சியினரும் இன்றைக்கு அதே மாதிரிக் கண்டிக்கத் தயாராயில்லை.

காலஞ்சென்ற அமரர் வன்னியசிங்கமும் இதர தமிழரசுப் பிரதிநிதிகளும் பாராளுமன்றத்தில் குடியேற்றப் பிரச்னையை பல சந்தர்ப்பத்திலும் பிரஸ்தாபித்து பலமாகக் கண்டித்தனர். ஆனால் அச்சமயங்களில் டாக்டர் என். எம். பெரேராவோ அவர் கட்சியினரோ எதுவித ஒத்தாசையும் கொடுக்க முன்வரவில்லை.

### யாழ்ப்பாணத்தில் வேதாந்தம்

பாராளுமன்றத்தில் குடியேற்றத் திட்டங்களைப் பொருளாதாரக் கோணத்திலிருந்து ஆராய ஆச்சாரியார் பெரேரா இப்பொழுது விரும்புவதில்லை. இந்த விஷயத்தை தேர்தல் விஞ்ஞாபனத்தில் பேசுகிறார் இல்லை. யாழ்ப்பாணத்தில் நடாத்தும் தேர்தல் கூட்டங்களில் மாத்திரம் கேள்விகட்குப் பதிலாக ஏதோ மென்று விழுங்குகிறார். வெளியாகப் பேசிவிட முடியாது ஏதோ விக்குகிறார். இயன்றவரையில் அந்தந்த இடத்து மக்களையே குடியேற்றங்களில் இருத்த வேண்டும் என்று ஏதோ வேதாந்தம் பேசுகிறார் எங்கே பேசுகிறார்? யாழ்ப்பாணத்தில் நடக்கும் தேர்தல் பிரசாரக் கூட்டங்களில் மட்டும் பேசுகிறார்.


### ஆரம்ப சூரத்தனம் இப்போ இல்லை

முன்னர் பேசிய அழுத்தம் திருத்தத்தை இப்போது மருந்துக்கும் காணோம். காரணம் என்ன? குடியேற்றத் திட்டம் என்பது சிங்களக் குடியேற்றத் திட்டம்; தமிழ் பிரதேசங்களை அமுக்குவதற்குகந்த வழி ஆகையால் எவ்வளவு பணம் செலவானாலும் அதைக் கடைப்பிடிக்க வேண்டுமென்று சிங்கள வெறியர் கங்கணம் கட்டி நிற்கின்றனர். அவர்கட்கு மாறாக நியாயத்தை எடுத்துரைக்க—பொருளாதார நியாயத்தைததானும் எடுத்துரைக்க—ஆச்சாரியார் என். எம். பெரேரா தற்பொழுது தயாராகவில்லை.

### என். எம். உதவமாட்டார்

டாக்டர் என். எம். பெரேராவோ அவர் கட்சியினரோ தாமாகத் தமிழ் மக்களை அழித்தொழிக்க முன்வாரமல் விடக்கூடும் ஆனால் சிங்கள வெறியரின் ஆர்ப்பரிப்புக்கோ சதித் திட்டத்திற்கோ எதிர்ப்புக்காட்ட முன்வரமாட்டார்கள் தமிழினத்தை அழிக்க வரும் ஆபத்தை எதிர்த்துப் போராட பிறர் வருவார்கள்.

(13-ம் பக்கம் பார்க்க)



எதிர்வரும் பொதுத் தேர்தலில் மூதூர் தொகுதியில் தமிழரசுக் கட்சி அபேட்சகராகப் போட்டியிடும் திரு த. ஏகாம்பரம் ஜே பி. கடந்த 4-ந் தேதி திருமலைக் கச்சேரியில் தமது நியமனப் பத்திரத்தை தமிழரசுக் கட்சித் தலைவர் திரு ந. இராஜவரோதயம் முன்னிலையில் தாக்கல் செய்யப்பட்டபோது எடுத்த படம்.

வவனியா

## சுப்பிரமணியத்தை ஆதரித்து ஒட்டு சுட்டானில் கூட்டம்

தமிழரசுக் கட்சியின் வவனியா, முல்லைத் தீவு தொகுதி அபேட்சகர் திரு ச. சுப்பிரமணியத்தை (பட்டின சபைத் தலைவர்) ஆதரிக்குமுகமாக, ஒட்டுசுட்டான் தான் தோன்றி ஈஸ்வரன் கோவில் மைதானத்தில், கிராமச்சங்கத் தலைவர் திரு எஸ். யூ. சிவகுரு தலைமையில் தமிழரசுக் கட்சியின் பொதுக்கூட்டம் ஒன்று நடைபெற்றது.

தமக்கே உரித்தான தனி நடையில் சொற்பொழிவாற்றினர் இரும்பு மனிதர் டாக்டர் ஈ. எம். வி நாகநாதன் தமிழரசுக் கட்சியின் கொள்கைகளை நன்கு எடுத்து விளக்கினர் அவர்.

திரு ச. சுப்பிரமணியம், திரு ராஜவரோதயம், திரு திரு கதிரவேற்பிள்ளை, திரு கே. ஜெயக்கொடி, மற்றும் மட்டக்களப்பிலிருந்து சென்ற பிரதிநிதிகளும் பேசினார்கள்.


# ஆசிரிய கலாசாலைப் பிரவேசப் பரீட்சை 1960

சாதாரண விஞ்ஞான தூயகணிதப் பயிற்சிகள்

ஆசிரிய கலாசாலைப் பிரவேசப் பரீட்சைக்கு அற்லஸ் ஹோல் புதுப் பாடங்கள் தயாராகிவிட்டன

★ தமிழ்ப்பாஷை ★ பொதுவிஞ்ஞானம்
★ எண்கணிதம் ★ தூய கணிதம்
★ பொது விவேகம் ★ பூமிசாஸ்திரம்
சரித்திரம்

பரீட்சை விபரங்கட்கும் புதிய பாடத் திட்டத்திற்கும் இன்றே எழுதுங்கள்.

## அற்லஸ் ஹோல்,

723, மருதானை, த. பெட்டி 649.
கொழும்பு—10.


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# என். எம். பெரேராவின்...

(12-ம் பக்கத் தொடர்ச்சி)

ளென்று எதிர்பார்க்க முடியுமா? ஒருவருமே வரமாட்டார்கள் நமது பிரச்னைக்கு நாமே தீர்வு காண்பதற்கான வழியைத் தேட வேண்டும். தமிழினம் ஒருமித்துக் கட்டுக்கோப்பாக இயங்கி தனது ஒரே கட்சிமூலமாகப்போராடியே விமோசனம் பெற முடியும் தமிழ் இனத்தின் பிரதிநிதி தமிழரசுக் கட்சி ஒன்றே. ஒருமித்து நிற்கும் தமிழ் இனத்தின் கோரிக்கையை மறுக்க முடியாது என்ற நிலைமை உதயமாக வேண்டும். அப்பொழுது தான் குடியேற்றத் திட்டம் என்ற இடரை நாம் தவிர்க்க முடியும்.

தமிழரசுக் கட்சி பலம் பெறுவது ஒன்றன்மூலமே தமிழினத்தின் இன்னலுக்குப் பரிகாரம் கிடைக்கும்.

## குறிப்பு,

டாக்டர் என். எம். பெரேரா அரசாங்க சபையில் 1939ல் பேசிய பேச்சின் சாராம்சத்தை மேலே குறிப்பிட்டிருந்தோம். அவர் பேசிய ஆங்கிலப் பேச்சிலிருந்து குறிக்கப்பட்ட பாகங்களைக் கீழே அநுபந்தமாக தருகின்றோம்.

Dr. N. M. Perera: "......... The Hon. Minister must decide for himself — and I hope to the satisfaction of the Hon, Members — that the Scheme is either for food production, or to put the surplus population on the land, or to provide work for the unemployed in Colombo. You must have one of the purposes in view, you cannot have a mixture of the three.

I say the reason for the failure of the colonization scheme of the Minister is the failure to realize the necessity for having one definite purpose for which this Colonization policy is persued. And that has been well set out in the Economic Survey of the Puttalam District. At page 45 of the Report you will find these words:

"A colonization scheme should, as far as possible, serve one clearly defined object......".

I am reading from the report of an impartial person who went into the whole question and satisfied himself that this was the reason:

"A mixture of objects is fatal to success. We should make sure whether our aim is to increase food production or create a peasantry or simply relieve congestion of population in other areas, or do something for unemployed or ill-employed people of the country."

That Sir, is the first defect in the policy that has been pursued, that it is neither a food-production scheme, nor a scheme to put the surplus population on the land. One definite object we must have in mind — page 680 of Hanzard of 7th March, 1939.

# சட்டத்துறை...

(2-ம் பக்கத் தொடர்ச்சி)

திரு இ. க. தியாகராசா, இளந் தமிழர் இயக்கத் தலைவர் திரு கரிகாலன், செல்வி அ. சூரியகுமாரி செ. ப. ஜீவானந்தம் ஆகியோரும் பேசினர். செல்வி சி. சச்சிதானந்தத்தால் தமிழ் வணக்கப் பாக்கள் பாடப்பெற்றன.

### தீர்மானங்கள்

பின்வரும் தீர்மானங்களும் அங்கு நிறைவேற்றப்பட்டன.

(1) இலங்கையில் வாழுகின்ற தமிழ் பேசும் மக்கள் அரசாங்கத்துடன் நடாத்தும் சகல கடிதப்போக்குவரத்துகளையும் தமிழ் மொழியிலேயே கட்டாயமாகச் செய்ய இன்றிலிருந்து தொடங்க வேண்டுமென தமிழ் மொழி இயக்கம் மன்றாட்டமாய்க் கேட்டுக்கொள்கின்றது.

(2) சன சமூக நிலையங்கள் பாடசாலைகள், வியாபார நிலையங்கள். கிராமச் சங்கங்கள், நகர சங்கங்கள், ஆசிரியர்கள், தமிழ்த் தலைவர்கள் இத்துறையில் முன்னின்று கருமமாற்ற வேண்டுமெனத் தமிழ் மொழி இயக்கம் கேட்டுக்கொள்கின்றது.

(3) திருமலையில் தொடங்கப்பெற்றிருக்கும் தமிழ்ப் பல்கலைக் கழக இயக்கத்துக்கு தமிழ்ப் பேசும் மக்கள் யாவரும் ஒரேமுகமான ஆதரவு கொடுக்க வேண்டுமெனத் தமிழ் மொழி இயக்கம் கேட்டுக்கொள்கின்றது.

# மொழிப்பற்று

(14-ம் பக்கத் தொடர்ச்சி)

ஆனால் ஒருவனிடம் மொழிப்பற்றையுண்டாக்குவது அவனிடமுள்ள நாட்டுப்பற்றுத் தான்.

ஒருவனிடம் "உனக்குத் தாய் வேண்டுமா? தாரம் வேண்டுமா?" என்று கேட்டால் அவன் என்ன சொல்வான்? "இருவருந்தான்" என்று தான் சொல்வான் இல்லையா? தாய் பாலூட்டித் தாலாட்டி, நோய் வராது வளர்த்தவள். அவளது சத்து அவள் மகனிலும் உண்டு. அவளது அன்பு அளப்பரியது. மனைவியானவள் தன்னோடு ஒன்றித்தவள். கணவன் இன்பமே அவளது இன்பம். அவளை வேண்டாமென்பது எப்படி? ஆகவே இருவருமே வேண்டியவர்கள்தான்.

அதேபோலத்தான் நாட்டுப்பற்றும் மொழிப்பற்றும் இருக்க வேண்டும்.

குவே:- 'நான் கொண்டுள்ள கருத்தைத் தான் தோழன் மணிவேலும் இப்போது அறிவித்தார் ஆகவே நான் கூறவேண்டியதில்லை என்று நினைக்கிறேன' என்று தான் கூறத் தோன்றுகிறது. ஏனெனில் மேடையில் சொற்பொழிவாற்றுவதைப் போலல்லவா ஒரு சிறு குட்டிப் பிரசங்கமே வைத்து விட்டாயே? சரி, மணி! மணி நாலாகிவிட்டது நாளைக்குச் சந்திப்போம்.

# மலைநாட்டுத் தமிழரின்....

(11-ம் பக்கத் தொடர்ச்சி)

பேசும் மக்கள்' என்ற ஒருமைப்பாட்டை வளர்க்கும் கட்சி இலங்கைத் தமிழ் அரசுக் கட்சி மாத்திரமேயாகும்.

தமிழ் பேசும் மக்களின் விடுதலை பெறுவதற்குத் தேவையான ஐக்கியத்தை வளர்ப்பதற்குத் தமிழரசுக் கட்சியைத் தவிர்ந்த வேறெந்த ஸ்தாபனத்திடமோ தனிமனிதரிடமோ போதிய அங்கத்துவ பலம், ஸ்தாபன அமைப்பு வலிமை எதுவும் கிடையாது. இவையன்றி, இன்றைய அரசமைப்பு முறையிலும், நிலவும் அரசியற்சூழ்நிலையிலும் இவையின்றி இலங்கைத் தமிழ் பேசும் மக்கள் தமிழரசு பெற்றுத் தன்மானத்துடன் வாழ முடியாது.

கடைசியாக, எமது சிங்கள சகோதரர்களுக்கு ஒரு வார்த்தை. தமிழ் அரசுக் கட்சி சிங்கள விரோத மனப்பான்மை கொண்டது என்ற அபாண்டமான பிரசாரம் வேருடன் களைந்தெறியப் படவேண்டிய ஒரு விஷம்.

இணைந்து வாழும் அரசமைப்பு முறையை வேண்டும் நாம் சிங்கள மக்களுடன் இணைந்து வாழ்வதற்கு அவர்களின் பரிபூரண ஒத்துழைப்பையும், நட்பையும் ஒற்றுமையையும் வரவேற்கிறோம்.

"சமஷ்டி அரசமைப்பு நன்மை பெறும் பொருட்டும் சகோதரத்துவம் வளர்ச்சியடையும் பொருட்டும் நாம் சிங்கள மக்களின் நல்லெண்ணத்தைத் தொடர்ந்து நிலை நாட்டிக் கொள்ள வேண்டும்" என்பது எமது அடிப்படைக் கொள்கைகளில் ஒன்று.

இந்நாட்டிலுள்ள குடிமக்கள் ஒவ்வொருவருக்கும் சுதந்திரமும் நீதியும் கிடைக்க வழிவகுப்பதிலும் எமது தாய்நாடு பூரண வளர்ச்சி பெறும்பொருட்டு உழைப்பதிலும், தன்மான உணர்ச்சியுள்ள சகோதரர்களாக இலங்கைத் தமிழ் பேசும் மக்களாகிய நாம் எமது சிங்கள சகோதரர்களுக்கு எமது பரிபூரண ஒத்துழைப்பை நல்குகிறோம்; நேசக் கரம் நீட்டுகிறோம்.


இப்பொழுது காண்பிக்கப்படுகிறது!

அவள் யார்

சிவாஜி கணேசன்,
பண்டரிபாய்,
எஸ். வி. சகஸ்ரநாமம்,
எஸ். வி. ரங்கராவ்,
சௌகார் ஜானகி, மாலினி,
டி. ஆர். ராமச்சந்திரன்,
டி. கே. ராமச்சந்திரன், சந்தியா,
கோபால கிருஷ்ணன்
ஆகியோர் நடித்தது.



சென்ட்ரல் (கொழும்பு) ஓடியன் (கல்கிசை) ராணி (யாழ்ப்பாணம்) ஜோதி (திருகோணமலை)
இன்னும் மூன்று திரைகளில் காண்பிக்கப்படும்!

3-வது வாரம்! எல்பின்ஸ்டன்—றெக்ஸி
(மருதானை) (வெள்ளவத்தை)
மற்றும் 6 திரைகளிலும்
ஜெமினி கணேசன்-ராஜம்-ஜமுனா நடிக்கும்
நல்ல தீர்ப்பு
திரைக்கதை வசனம்: முரசொலி மாறன்
நடனம்: குசலகுமாரி-ரஜினி

2-வது வாரம்! செல்லமஹால் (கொட்டாஞ்சேனை)
யானை வளர்த்த வானம்பாடி
தமிழில் முதலாவது டார்சான் படம்

கெயிடி 7-வது வாரம்!
அதிசயப்பெண்


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# வளர்மதி
## சுதந்திரன் மாணவர் மன்றம்

## குறளின் வியாபகம்

திருவள்ளுவரையும், திருக்குறளையும் பாராட்டாத பாரோர் இன்றிருக்க இயலாது. தமிழ் மணம் எங்கெங்குண்டோ; அங்கெல்லாம் திருக்குறளின் நறுமணங் கமழ்ந்துகொண்டேயிருக்கின்றது. தமிழ் மணங் கமழாத இடங்களிற்றனும் அதன் வாசனை வீசுகின்ற தென்றல் பின்னும் பொருந்தும். ஏனெனில் தமிழ் வழங்காத மேல்நாட்டில் உள்ள அறிஞர்கள் திருக்குறளின் மொழிபெயர்ப்பைச் சுவைத்து இன்புறுகின்றனர். அங்கெல்லாம் தமிழ் மணம் ஏது? நாமெல்லாம் நம் தாய்மொழியாம் தமிழையறிந்து அதன்மூலம் குறளை அறிகின்றேம். ஆனல் அவர்களெல்லோரும் குறளைக் கற்று அதன்மூலமாகத் தமிழைப் பற்றி அறிந்துகொள்கிருர்கள்.

ஏனைய தமிழ் நூல்களிற் காணப்படாத சில சிறப்பியல்புகள் திருக்குறளுக்குண்டு. நூற்கண் உள்ள அறம், பொருள், இன்பம், வீடு என்பனவற்றைத் தெள்ளிவாகக் கூறிய நூல்களுள் திருக்குறளுக்கீடானது வேறில்லை என்றே சொல்லலாம். சங்க மருவிய பத்துப்பாட்டு, எட்டுத் தொகை, பதினென் கீழ்க் கணக்கு என்பனவற்றுள் திருக்குறளைப் போல் 1,330 செய்யுட்களையுடைய நூல் வேறொன்று இல்லை; குறட் பாவில் அமைந்ததும் இல்லை.

திருக்குறளில் அமைந்த ஒவ்வொரு குறளும் ஒவ்வொரு கடலைப்போல் ஆழமுடையன. அதன் ஏழு சீர்களும் ஏழு உலகங்களையும் அடக்கும் தன்மைவாய்ந்தன. எனவேதான் குறளை ஒரு கடல் என்பர் பெரியோர். குறள் ஒன்றைச் சொல்லும்; ஆயின் அதில் சொல்லாத பல்வேறு கருத்துக்கொண்ட இயல்புகள் தொக்கி நிற்கும். எனவேதான் திருக்குறளுக்கு உரையெழுதும் ஆசிரியர்கள் தம் உரையினை பல்வேறாக வேறுபடுத்திக் காண்பிக்கின்றனர்.

தனக்கும் பிறர்க்கும் ஒருங்கே பயன்பட உணவுண்டு வாழ்ந்து அறம் நடத்துதலைப்பற்றி வரையறுத்த இப்புலவர் பெருமானது நூல், இவர் தமக்கும் பிறர்க்கும் பயன்படும்படி கற்றறிந்து ஒழுகிருரென்பதை தெளிவாக தெளிவுறுத்துகின்றது. பிறராற் செயற்கரிய செய்தவராகிய இப்பெரியார் புகழ் இன்னுஞ் சிறப்பாக உலகத்தாரெல்லாருடைய உள்ளத்துள்ளும் உளதாகக் காணும் நாள் அணிமையில் இருக்கின்றதென்பது திண்ணம்.

எம். அஸ்றப் கான்

# மொழிப்பற்று

— மூ. கனகராஜா —

[மணிவேல் ஒரு தினசரி பத்திரிகையைப் படித்துக்கொண்டிருக்கிறன். அப்போது அவனது நண்பன் குமாரவேல் வருகிறன்.]

ம வே:- வாப்பா குமார். இங்கே பார் ஒரு கழகத்தில் மொழிப்பற்றைப் பற்றி பேசியிருக்கிருர். "இளைஞர்களிடம் மொழிப்பற்றையுண்டாக்க ஆசிரியர்கள், எழுத்தாளர்கள் போன்றவர்கள் பாடுபட வேண்டும்" என்றெல்லாம் கூறிக் கொண்டு போயிருக்கிருர். இதைப் பார்த்தபின் என்ன சொல்கிருய்?

கு வே:- அவர் சொல்கிறதும் சரியாகத்தானே படுகிறது. ஏன் நீ இதை ஆதரிக்கவில்லை போலிருக்கிறது...?

ம வே:- அப்படியில்லை கொஞ்சம் மாற்றம். அவ்வளவுதான்.

கு வே:- ஏன்? என்ன மணி?

ம வே:- அதுவா...! மொழிப்பற்று என்பது கடைச்சரக்கல்ல ஒருவனிடம் இன்னெருவர் அள்ளிக்கொடுத்துவிட. அது ஒருவரது உள்ளத்திலே பிறக்கவேண்டும். அதுவே உண்மையான பற்ருகும்.

கு வே:- அதுசரிதானப்பா! பிறர் ஊக்கப்படுத்துவதும் குற்றமல்லவே. ஊக்கப்படுத்தும்போது மேலும் பற்ருனது வலுவடையுமல்லவா?

ம வே:- நானும் அதை ஆமோதிக்கிறேன். ஆனல் நான் இப்போது கூறவந்தது என்னவென்ருல், 'மொழிப்பற்று ஒருவனிடத்திலுண்டாக வேண்டு'மென்ருல் இன்னும் சில முக்கியமானவை ஒருவனுக்குவேண்டும்.

கு வே:- இப்படிப்பட்ட ஒரு விவாதத்திற்குரிய விடயத்தை நீ நமது நண்பர்குழு இருக்கும்போது வெளியிடுகிருயில்லையே. அப்போது தானே கருத்துக்களைப் பரிமாறிக்கொள்ளலாம். சரி விடயத்துக்கு வா!

ம வே:- அதாவது ஒருவனிடம் மொழிப்பற்று உண்டாகவேண்டுமென்ருல், முதலில் அவனுக்கு நாட்டுப்பற்று உண்டாக வேண்டும். இல்லாவிட்டால்......!

கு வே:- என்ன மணி எங்கெங்கோ போகிருயே...!

ம வே:- ஏனெனில் ஒருவனிடம் நாட்டுப்பற்று உண்டு என்ருல் அவன் தன் நாட்டைப்பற்றி, தன் நாட்டு மொழியைப் பற்றிச் சிந்திப்பான்.—அப்போது அவனிடம் அவற்றின்பால் ஒருவித விசேட ஊக்கம் பிறக்கும். ஆகவேதான் நான் ஒரு சமுகத்திற்கு ஒரு நாடு வேண்டும் என்கிறேன்.

இதோ பார்! இலங்கையின் பற்பல பாகங்களிலும் தான் பார்க்கிருேமே குறவர் கூட்டத்தினரை. அவர்களுக்கு ஒரு தனி இடம் உண்டா? இல்லை! நாடோடிகளாகவே அலைகின்ருர்கள். இவர்களுக்கு எங்கே இருக்கிறது ஒரு தனி இடம். இவர்கள். எப்படித் தங்கள் நாட்டைப்பற்றி சிந்திக்க முடியும்? நாட்டுப்பற்று இவர்களிடம் எப்படி பிறக்க முடியும்? இனி மொழிப்பற்றுத்தான் இவர்களுக்கு எங்கு இருக்கும்...! இவர்கள் தங்களது குழந்தைகளைப் படிக்க வைப்பதுவும் இல்லையே. அது தான் எப்படிச் சாத்தியமாகும். அவர்கள் தான் நாடோடிகளாச்சே. இப்பிள்ளைகளிடம்தாம் எப்படி மொழிப்பற்றுதிக்க முடியும்? ஆகவேதான் ஒரு தனி நாடு வேண்டும் என்கிறேன்.

கு வே:- ஆமாம் மணி! நீ கூறிய எல்லாவற்றையும் நான் ஆமோதிக்கிறேன். ஆனல், பாரேன், அவர்களிலும் தேசாபிமானிகள் இருக்கத்தானே இருக்கிருர்கள்.

ம வே:- ஆயிரத்தில் ஒன்று தான். இதோ பார், இப்போது, இலங்கையில் தமிழர் பற்பல பாகங்களிலும் சிதறுண்டு கிடக்கிருர்கள். தோட்டப் பகுதிகளிற் சிலர் வீடுவாசலற்ருேர் சிலர். இப்படியாகத்தான் இருக்கின்றனர்.

தோட்டங்களிலுள்ள அநேகர் தேசாபிமானிகள் தான். என்ருலும் அவர்களிடம் தளர்ச்சியுண்டு ஏனெனில் அவர்கட்கு அங்கு நிரந்தரமில்லையே. அப்பகுதிளில் நூல் நிலையங்களோ வேறு தமது மொழியை வளர்க்கக் கூடிய சாதனங்களோ கிடையாது. ஆகவே அவர்கட்கு பெரியோர்கள் தான் ஆவன செய்ய வேண்டும். இல்லாதுபோனல் நமது சமூகத்தின்—மொழியின் கதி......!

கு வே:- இவற்றையும் நான் ஒப்புக்கொள்கிறேன். சரி, மணி! மொழிப்பற்ரு, நாட்டுப்பற்ரு ஒருவனிடம் சிறந்திருக்க வேண்டும் என்பதைப்பற்றி உன் கருத்தைச் சொல்லேன்.

ம வே:- அப்படியாக பிரித்துக்கூற முடியாது. இரண்டும் ... போன்றது. இரண்டும் தேவைதான். வலது கண்ணில் அதிக சிரத்தையும் இடது கண்ணில் அசிரத்தையும் உள்ளவனுக எவனும் இருக்க முடியாது. அதே போலத்தான் நாட்டுப்பற்றுள்ளவன், மொழிப்பற்றற்றவனுக இருக்க முடியாது.

(13-ம் பக்கம் பார்க்க)

ஔவை அமுதம்: 20

## தந்தை தாய்ப் பேண்

குழந்தைகளைப் பார்க்கிறேம். அவர்களுக்கு முதன் முதல் அறிமுகமானவர்கள் தாயும் தந்தையும் தான். 'அப்பா', 'அம்மா' என்றே அவர்கள் மழலைப் பேச்சு ஆரம்பமாகிறது.

அப்பாவும் அம்மாவும் நாம்கண்ணுல் காணும் தெய்வங்களாவார்கள். அவர்களை மதித்து நடக்க வேண்டும். கடவுள் என்றதும் எமக்கு ஒரு பயமும் பக்தியும் ஏற்படவில்லையா? அதுபோல் பெற்ருேரிடமும் நாம் பக்தி கொள்ள வேண்டும்.

தமது கஷ்டங்களையும் இன்னலையும் பாராது எம்மை குறை எதுவுமில்லாமல் வளர்க்கும் பெற்ருேரை எப்போதும் நாம் கனம் பண்ண வேண்டும். அவர்கள் சொற் கேட்கவேண்டும். அவர்கள் விருப்பத்தைத் தெரிந்து கொண்டு அதன்படி நடக்க வேண்டும். அப்போதுதான் அவர்கள் சந்தோசப்படுவார்கள்.

பெண்கள் அம்மாவுக்கு உதவியாக அடுக்களையில் உதவி புரிய வேண்டும். ஆண்கள் அப்பாவுடன் சேர்ந்து வேலை செய்ய வேண்டும்.

ருசியான உணவுகளை அம்மா ஆக்கித் தருவாள். அழகான உடுப்புகளை அப்பா வாங்கிக் கொடுப்பார் நல்ல பழக்கங்களை அம்மா சொல்லித்தருவாள். கல்லூரியில் படிக்க அப்பா வசதி செய்வார். இவைகளுக்காக நாம் அவர்களை ஏத்த வேண்டும்; எமது கல்வியாலும், நல்லொழுக்கத்தாலும் மகிழ்விக்க வேண்டும்.

அப்பாவும் அம்மாவும் எங்களில் எப்போதும் பிரியமாய் இருக்கும்படி நடக்க வேண்டும். அவர்களால் செய்யமுடியாததைச் செய்யும்படி தொந்தரவு கொடுக்கக் கூடாது தருவதைக் கொண்டு திருப்திப்பட்டு அவர்களை மகிழ்விக்க வேண்டும்.

ஒழுக்கங் கெட்டு, அவப்பெயர் வாங்கித் தந்தால் அப்பா கோபப்படுவார்; தண்டிக்கவும் செய்வார். இதைக் கண்டு அம்மா மனம் வெதும்பிப் போவாள். இப்படியல்லாமல் நல்லபடி நடந்து, படித்தவன், கெட்டிக்காரன், குணவான், என்று பெயரெடுக்கும் மகனைக் கண்டு அப்பாவும் அம்மாவும் உள்ளம் பூரித்துப் பெருமைப்படுவார்கள்.

பெற்ருேர் எம்மில் பிரியமாய் இருப்பதுபோல் நாமும் அவர்களில் பிரியமாய் இருக்க வேண்டும். வயது முதிர்ந்து, கோலூன்றி நடக்கும் காலத்தில் அவர்களை அன்போடும், ஆதரவோடும் காக்க வேண்டும். தாய் தந்தையரைப் பேணிக் கொள்வது எம் முக்கிய கடமையாகும்.

"மகன் தந்தைக் காற்றும்
உதவி இவன் தந்தை
என்னேற்ருன் கொல்
எனுஞ் சொல்",

—ஏ. ஜி. ஆனந்தன்.

வள்ளுவர் குரல்: 8-9

## முப்பால்

திருக்குறளுள் மூன்று பால்கள் உள; அவை, அறத்துப்பால், பொருட்பால், இன்பத்துப்பால் என்பன. இங்ஙனம் மூன்று பால்கள் உடைமையால், 'முப்பால் நூல்' என்று திருக்குறளுக்கு ஒரு பெயர் வழங்குகின்றது. அறம் பொருள் இன்பங்களை விரித்துரைத்த திருவள்ளுவர், அவற்றை நுட்பமாகவும் குறித்திருக்கின்ருர்.

அறம் பொருள் இன்பங்கள், கடல் போன்றன; ஒரு புணையின் துணை கிடைத்துவிட்டால், அவற்றை இலகுவில் கடந்துவிடலாம். இறைவனே அறக் கடலாக விலங்குகிருன்; "அற ஆழி அந்தணன்" அவன். அவனதுதான் நல்ல புணையாகும். பிறவிப் பெருங் கடலையே நீந்திக் கடக்க உதவும் அரும்புணை அது! அதன் துணை கொண்டார்கள், இறைவன் திருவுருவமாக விளங்கும் அறக் கடலையும் கடப்பர்; பிற கடல்களாகிய பொருள் இன்பங்களையும் இலகுவிற் கடப்பார்கள். துணை கொள்ளாதவர்கள் நீந்திக் கடத்தல் முடியாது.

"அற ஆழி அந்தணன் தாள்
சேர்ந்தார்க் கல்லால்
பிற ஆழி நீந்தல் அறிது"—

தமிழ் மறை 8.

நாமும் முயன்று, அறக்கடலாகிய இறைவன் திருவடிகளைப் பொருந்தி நினைத்துப் பொருள் தேடி அறஞ்செய்து, இன்பம் துய்த்து வாழ்வோமாக.

## தாளை வணங்காத் தலை

மெய், வாய், கண், மூக்கு, செவி என்பன பொறிகள்; அவை முறையே, ஊறு, சுவை, ஒளி, நாற்றம், ஓசை என்னும் ஐம்புலன்களையும் கொள்ளும். உணர்ச்சியற்ற மெய், சுவையுணரா வாய், ஒளி காணக் கண், நாற்றம் முகரா மூக்கு, ஓசை கேளாச் செவிகள், பயனற்றவைகள்.

எமது உடலில், தலையே முதன்மையானது; தலையாயது. தலையிலேயே வாய், கண், மூக்கு, செவி ஆகிய பொறிகள் இருக்கின்றன; அன்றியும், உடல் முழுவதிலும் பரந்து அமைந்துள்ள மெய் என்னும் தொட்டுணரும் பொறியும், தலையிலும் இருக்கின்றது. ஆகவே, தலையில் ஐம்பொறிகளும் அமைந்துள்ளன எனக் கொள்ளலாம்.

ஒளி காணத கண், ஓசை கேளாத செவி முதலியன பயனற்ற பொறிகளாகும். அவைபோலப் பயனற்ற தலையும் உண்டு. அது எது என்னும் வினவுக்கு விடை தருகின்றது வள்ளுவர் குரல்:

"...என் குணத்தான் தாளை வணங்காத் தலை";

'எட்டுக் குணங்களையுடைய இறைவனது திருவடிகளை வணங்காத் தலை பயனற்றது'

"கோள் இல் பொறியின்
குணம் இலவே
எண்குணத்தான்
தாளை வணங்காத் தலை

—தமிழ்மறை 9

தன்வயம், தூயஉடம்பு, இயற்கை உணர்வு, முற்றும் உணர்தல், பாசம் இன்மை அருள், ஆற்றல், இன்பம் என்னும் எட்டுக் குணங்களையுடைய இறைவன் தாளை வணங்காத் தலை, பயனற்றது; புலன்களைக் கொள்ளாத பொறிகள்போலப் பயனற்றது.

எனவே, இறைவன் தாள்களை வணங்குவதன் மூலம் எமது தலைகளைப் பயனுடையவையாகச் செய்வோமாக.

—பா. ஆறுமுகம்

வளர்மதி — சுதந்திரன் மாணவர் மன்றத்தில் இருபது வயதுக்குட்பட்ட எல்லோரும் அங்கத்தவர்களாகச் சேரலாம் கீழே பிரசுரிக்கப்பட்டிருக்கும் மனுப்பத்திரத்தைப் பூரணப்படுத்தி அனுப்பவேண்டும். மனுப்பத்திரங்கள் தொடர் இலக்கங்களுடன் பிரசுரிக்கப்படும். வெவ்வேறு இலக்கங்களைக் கொண்ட மூன்று மனுப் பத்திரங்களை "வளர்மதி"யில் அங்கத்தவர்களாகச் சேர விரும்புவோர் பூர்த்தி செய்து "வளர்மதி" C/o சுதந்திரன், தபால் பெட்டி இலக்கம் 1183, கொழும்பு 12 என்ற விலாசத்திற்கு அனுப்பி வைக்க வேண்டும் இப்படிச் செய்வோர் பெயர்கள் வளர்மதியில் வெளியிடப்படுவதுடன் அவர்களுக்கு அங்கத்தவர் இலக்கமும் கொடுக்கப்படும். அத்துடன் அத்தாட்சிப் பத்திரமும் வழங்கப்படும்.

### வளர்மதி
### சுதந்திரன் மாணவர் மன்றம்
### அங்கத்தவர் மனுப்பத்திரம்

இல. 9.

பெயர்............................................................

பாடசாலை......................................................

விலாசம்.........................................................

..................................................................

.................................................. ..................................................
பெற்ருேர் அல்லது ஆசிரியர் கையொப்பம் கையொப்பம்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# கழகச் செய்திகள்

## காங்கேசன்துறை இளந் தமிழர் இயக்கம்

"இத்தாலியின் விடுதலைக்குப் போரிட்டு வெற்றியுற்ற 'இளம் இத்தாலிய இயக்க'த்தைப் போல ஈழத்தில் தாழ்த்தி வைக்கப்பட்டிருக்கும் எம். மொழிக்கும்-எம்மின மக்கள் எழுச்சிக்கும் உழைப்பதையே இளந் தமிழர் இயக்கம் மூச்சாகக் கொண்டது. தற்போதைக்கு இவ்வியக்கம் தமிழ்ப் பேசும் சமுதாயத்தை தூய்மைப் படுத்துவதையே தன்கடமையாகக் கொள்ளும்; தமிழர்களின் சமுதாய-பொருளாதார மொழியியல் துறையில் மறுமலர்ச்சி ஏற்படுத்த உழைக்கும் இவ்வியக்கம் மாணவர் இயக்கமாகையால் அரசியலில் ஈடுபடாது. எனினும் 'மாணவர்களே, இனத்தின் இறுதி விடுதலைப் போருக்கு உழைக்க வாருங்கள்'எனத் தமிழர் செல்வம் செல்வநாயகம் அறை கூவல் விடின் அதை இளந் தமிழர்கள் எல்லோரும் ஏற்று உழைக்க வேண்டும்"—இவ்வாறு காங்கேசன்துறையில் இளந் தமிழர் இயக்கக் கிளையொன்றை நிறுவ நிகழ்ந்த கூட்டத்தில் திரு. ஈழவேந்தன் பேசுகையில் கூறினார்.

'இயக்கங்களும்- இளைஞர்களும்' என்பது பற்றி திரு. செ. யோகநாதனும், "இளந் தமிழர் இயக்கம்-அதன் நோக்கமும்-தொண்டும்" பற்றி திரு. சி. நாகரெத்தினமும் இக் கூட்டத்தில் சொற்பொழிவாற்றினார்கள். இளந்தமிழர் இயக்கத்தின் காங்கேசன்துறைக் கிளைக்கு பின் வருவோர் செயற்குழுவினராகத் தெரிவுசெய்யப்பட்டனர்.

இயக்கக் காவலர்கள்: திரு. மு. கார்த்திகேசு, திரு. ஆ. வ. சதாசிவம், தலைவர்: திரு. நா. தில்லையீசன், உப தலைவர்: திரு. வ. முருகேசு, இணைச் செயலாளர்கள்: திரு. தெ. நவநீதன், திரு. சி. பாபநாசசிவன், பொருளாளர்: திரு. நா. கருணைநந்தசிவம். உறுப்பினர்கள்: திருவாளர்கள்: நா. பாலசுப்பிரமணியம், சி. மாசிலாமணி, நா. செல்வநேசன், தெ. சத்தியசிவன், இ. கலியுகவரதன், ஐ. நற்குணநாதன்.

இக் கூட்டத்தில் கௌரவ பார்வையாளர்களாக திருவாளர்கள் வி. வி. வைரமுத்து, சி. நாகரத்தினம், க. செல்வமாணிக்கம் ஆகியோர் இருந்து கூட்டத்திற்குச் சிறப்பளித்தனர்.

## பாலர் ஞானோதய கழகம்

கட்டுவன் பாலர் ஞானோதய கலை, உடல் வளர்ச்சிக் கழக ஆண்டு விழா சென்ற 15-1-60-ல் பாலர் ஞானோதய வித்தியாசாலை மண்டபத்தில் பண்டிதர் திரு. இ. நமசிவாயம் தலைமையில் நடைபெற்றது. காரியதரிசி, தனாதிகாரி அறிக்கைகள் வாசிக்கப்பட்ட பின்னர், ஆசிரியர்கள் திரு. கனகசேந்திரநாதன், திரு. சு. ஸ்ரீ பாஸ்கரன், திரு. நா. ஆறுமுகம் ஆகியோர் முறையே, "எப்படி வாழ்வது?" "தமிழரின் பொருளாதாரம்," "கலையும், உடலும்" என்னும் பொருள்கள் குறித்து சொற்பொழிவாற்றினார்கள். கழக மாணவி செல்வி நா. இந்திராதேவி-"அரசியல் நுட்பம்" என்னும் பொருள் பற்றிப் பேசினார் கூட்ட இறுதியில் கழக மாணவரால் "வாழ்வு எங்கே?" என்னும் நாடகம் நடித்துக் காட்டப்பட்டது.

## ஆனந்தா இளைஞர் சங்கம்

தாவடி ஆனந்தா இளைஞர் சங்கத்தின் 4-வது ஆண்டு வருடாந்த விழா கடந்த 16-1-60-ல் நடைபெற்றது. அவ்வமயம் யாழ்ப்பாண இந்துக் கல்லூரி ஆசிரியர் திரு. க. சிவராமலிங்கம் பிரதம விருந்தினராக கலந்து கொண்டார்.

பின் வருவோர் புது வருட உத்தியோகஸ்தராகத் தெரிவுசெய்யப்பட்டனர்:-

போஷகர்: இணுவில் தாவடி கிராம விதானையார் திரு. வ. கணபதிப்பிள்ளை தலைவர்: திரு. த. [illegible]நலதயா ஆசிரியர், உப தலைவர்கள்: திரு சுப்பையா, திரு செல்லசாமி, திரு செல்லத்துரை, செயலாளர்: வை. விநாயகமூர்த்தி, பொருளாளர்: ம. குமாரசுவாமி, சமிட்டி அங்கத்தவர்கள்: க. சிவானந்தன், க. கனகலிங்கம், சி. பாலச்சந்திரன், இ. தனபாலசிங்கம், க. ஸ்ரீதரன்.

## ஞானப்பிரகாச அடிகளார் தமிழ் விழா

"தமிழ்மொழிக்குரிய மகத்தான பெருமையை உலகிற்கு முதன் முதலாக வெளியிட்ட தமிழ்ப் பெரியார் வணக்கத்துக்குரிய ஞானப்பிரகாச அடிகளாரேயாவார். ஈழத் திருநாட்டிலோ நாம் வணக்கத்துக்குரிய ஞானப்பிரகாச அடிகளாரின் நினைவாக ஏதாவது செய்திருக்கின்றோமா? என்று கேட்டல் இல்லை, இல்லை,என்ற பதிலே கிடைக்கக்கூடியதாக இருக்கின்றது. இப்பதில் எமது தமிழினத்திற்கே அவமானத்தை ஏற்படுத்துகின்றதென்பதை நீங்கள் உணருகின்றீர்களா? இல்லையா? என்பதைத்தான் நான் உங்களிடத்தே கேட்பதற்கு ஆசைப்படுகின்றேன்."

இவ்வாறு அணிமையில் கோப்பாயில் நடைபெற்ற ஞானப்பிரகாச சுவாமிகள் தமிழ் விழாவில் ஆன்மைத் தமிழ் ஆசிரியர் திரு ஏ. க. ஞ. இறைபுகழ்வாழி பேசுகையில் கூறினார்.

தமிழினத்தின் தனிப்பெரும் விழாவாகிய பொங்கற் திருநாள் அன்று கோப்பாய் 'இறை ஓம்பல் இல்லத்தில் அமைக்கப்பட்டிருந்த 'எலியாஸ்' பந்தலில்' "வணக்கத்துக்குரிய ஞானப்பிரகாச அடிகளார் தமிழ் முழக்க இயக்க முயிடுதல்" விழாவும் தைப் பொங்கல் விழாவும் வெகு சிறப்பாக நடந்தேறியது. அன்று பிற்பகல் நாலரை மணி வரையில் கூட்டத்திற்கு அழைக்கப்பட்டிருந்த பேச்சாளர்களும் பெரியோர்களும் பந்தல் வாசலில் தமிழ் மரபின்படி சந்தனப் பொட்டிட்டு வரவேற்கப்பட்டனர். வரவேற்கப்பட்டதும், கடந்த ஆவணித் திங்களில் சொற்கலைப் புலவன் தோன்றிய முப்பதாம்நாள் அன்று தமிழ் முழக்க விழாவை ஆரம்பித்து வைத்தவரும், கோப்பாய் பாராளுமன்ற உறுப்பினராய் இருந்தவருமான திரு வன்னியசிங்கத்தின் மறைவு குறித்துத் துக்கம் தெரிவிக்கப்பட்டு அதற்காக இரண்டு விநாடி நேரம் பேசாமை கைக்கொள்ளப்பட்டது. விழாவில் ஒவ்வோர் நிகழ்ச்சிகளும் நடைபெறும் முன்னர் அவை பற்றிய விளக்கங்கள் கொடுக்கப்பட்டன. விழாவை ஆரம்பிக்குமுகமாக திரு வி. பொ. சி. முத்துக்குமாரசாமியால் கற்பக தருவாகியபனைக் கொடி ஏற்றிவைக்கப்பட்டது. விழாவிற்கு ஆன்மைத் தமிழ் ஆசிரியர் திரு ஏ. க. ஞ. இறைபுகழ்வாழி தலைமைவகித்தார்.

விழாவில் வைத்தியர் திரு நாகநாதன், மேற்சபை அங்கத்தவர் திரு ஞா. நல்லையா, திரு முத்துக்குமாரசாமி, ஆசிரியர் திரு சவிரிப்பிள்ளை, ஆசிரியர் திரு புதுமைலோலன் ஆகியோர் சிறப்புப் பேருரை பெருக்காற்றினார்கள்.

சொற்கலைப் புலவனும் வணக்கத்துக்குரிய ஞானப்பிரகாச அடிகளார் தமிழ் முழக்க இயக்கத்திற்கு கீழ்கண்டவர்கள் நிர்வாகிகளாக தெரிவு செய்யப்பட்டனர்:-

தலைவர்: திரு வி பொ. சி. முத்துக்குமாரசாமி, செயலாளர்: திரு ஏ. க. ஞ இறைபுகழ்வாழி, பொருளாளர்: திரு ஆ சவிரிப்பிள்ளை,

காரியக்குழுவினர்

திருவாளர்கள்: ஞா. நல்லையா, (மேற்சபை உறுப்பினர்) அ அமிர்தலிங்கம், கி துரைசிங்கம், க. சந்தையா, அ. செபஸ்தியாம் பிள்ளை. அ. பிலிப்பையா.

## இளவல்கள் தமிழ்ச் சங்கம்

இளவல்கள் தமிழ்ச் சங்கத்தின் முதலாவது இயக்குநர் குழு 17-1-60-ல் தலைவர் வி. சந்திரதாஸ் தலைமையில் கூடியது. செயலாளர்,பொருளாளர் அறிக்கைகள் ஏகமனதாக ஏற்றுக்கொள்ளப்பட்டன. பின்வரும் பிரேரணைகள் ஏகமனதாக நிறைவேறியது:-

1. எதிர்வரும் சித்திரைத் திங்களில் தமிழ் விழா கொண்டாடுவது.

2. மறை மலையடிகள். உ. வே. சுவாமிநாதய்யர், சி. வை. தாமோதரம் பிள்ளை ஆகியோரின் ஞாபகத்தைக் கொண்டாடுவதுடன், அவர்கள் நினைவாக பேச்சுப் போட்டி,கட்டுரைப்போட்டி நடாத்துவதெனவும் தீர்மானிக்கப்பட்டது.

3. இலக்கிய வகுப்புக்கள் இலக்கியச் சொற்கள் மாதா மாதம் தொடர்ச்சியாக நடத்துவதெனவும் தீர்மானிக்கப்பட்டது.

## விபுலாநந்த கழகம்

"திருவாசகத்தின் பொருளுணர்ந்து நாம் அதனைப் பாராயணம் செய்ய வேண்டும். அதன்மூலம் நாம் நன்மை தீமைகளை அறிய முடியும். அகவாழ்விற்கும் புறவாழ்விற்கும் சமய வாழ்வு அவசியம். உப்பில்லா உண்டியாழ் என்பதுபோல் சமய வாழ்வு இல்லா இல்லற வாழ்வு பாழ்" என்று திரு பஞ்சாட்சரம் திருமலை விபுலாநந்த கழக ஆதரவின்கண் கழக மண்டபத்தில் நடைபெற்ற திருவாசக விழாவிற்குத் தலைமைவகித்துப் பேசுகையில் கூறினார்.

செல்வி பாலேஸ்வரி திருவாசகப் பாடல்கள் பாடினார்கள்.

செயலாளர் திரு இ. சோமசுந்தரம் பேசும்பொழுது பிள்ளைகளுக்கு பாடசாலைகளில் மட்டும் சமயக் கல்வி போதிப்பதை நம்பி பெற்றோர்கள் இருக்கப்படாதென்றும் அவரவர் இல்லங்களிலே பெற்றோர்கள் தங்கள் பிள்ளைகளுக்கு சமயக் கல்வி போதிப்பது அவசியமெனக் குறிப்பிட்டார். பூசையுடன் விழா இனிது முடிவடைந்தது.

## வேலணை ஐக்கிய முன்னேற்றச் சங்கம்

வேலணை ஐக்கிய முன்னேற்ற சங்க வேலணை மேற்கு கிளை அங்குரார்ப்பணமும், தமிழ் வாரக் கொண்டாட்டமும் அணிமையில் வேலணை ஐக்கிய முன்னேற்றச் சங்கத் தலைவர் திரு [illegible] தலைமையில் வேலணை மேற்கு குருக்கள் மண்டபத்தில் நடைபெற்றது. தலைவர் பேசுகையில் கிராம முன்னேற்றத்தில் நாட்டம் கொண்ட அனைவரையும் ஆதரவு நல்கும்படி கேட்டுக்கொண்டார் தமிழ் வாரம் பற்றி பேசுகையில் எல்லோரையும் எம் தாய்மொழியாய தமிழில் சகல அலுவலையும் செய்யுமாறு கேட்டுக்கொண்டார்.

திருவாளர்கள் பொன்னம்பலம், செ சயிலாசபிள்ளை, க. இராசரெத்தினம், இ. சுப்ரமணியம் பொ. பரராசசிங்கம் ஆகியோரும் பேசினர்.

கிளை உத்தியோகத்தர்களாக கீழ்வருவோர் தெரிவு செய்யப்பட்டனர்:-

போஷகர்: திரு சு. நமசிவாயம், தலைவர்: து. பொன்னம்பலம், துணைத் தலைவர்: அ. வி. நாகலிங்கம், செயலாளர்: பொ. பரராசசிங்கம், துணைச் செயலாளர்: வி. மு. இராசரெத்தினம், பொருளாளர்: பொ. கேதாரநாதன் கணக்கு பரிசோதகர்: பி. சந்திரசேகரம் அவர்களுடன் ஒன்பது பேர் கொண்ட செயற்குழு தெரிவு செய்யப்பட்டனர்.

## திருமலையில் பொங்கல் விழா

"இலக்கியம் என்றால் இலக்கு அல்லது நோக்கு எனப் பொருள்படும். தமிழன் கண்ட இலக்கியம் எனின் தமிழன் நோக்கு தமிழன் இலக்கு என்று பொருள்படும்.

அன்றையத் தமிழன் அரசியலில் ஓர் தலைவன், தீர்க்க தரிசனம், புத்தி, சாதுரியம் முதலியவற்றைக்கொண்டிருந்தான். இன்றைய அரசியல்வாதிகளுக்கு அவை எள்ளளவும் இல்லை. அதனாலே தான் இலங்கையில் அரசியல் இந்த அவல நிலைமைக்கு வந்துள்ளது.

இராவணன் ஆட்சியில் விபீடணன்போல், இரணியன் ஆட்சியில் பிரகலாதன் போல், கட்டப்பொம்மன் ஆட்சியில் எட்டப்பன்போல் தமிழினத்தைக் காட்டிக் கொடுக்கும் காக்கை வன்னியர் கூட்டம் இன்றும் இருந்துகொண்டுதான் உள்ளது. இலங்கைவாழ் தமிழர்கள் இவர்கள் விஷயத்தில் மிகுந்த எச்சரிக்கையுடன் இருக்கவேண்டும்" இவ்வாறு கலாநிதி சு. வித்தியாநந்தன் திருமலை திராவிட முன்னேற்றக் கழக ஆதரவில் திருமலை நகரமண்டபத்தில் நடைபெற்ற பொங்கல் விழாவில் பேசுகையில் கூறினார்.

திரு டி. எம். பீர்முகம்மது "பேச்சில் என்ன இருக்கின்றது" என்ற தலைப்பில்பேசும் பொழுது. பேச்சின் மூலம் செயலைச் செய்யலாம், ஆகவே பேச்சில் செயலைத் தூண்டும் சக்தியிருக்கிறது எனக் குறிப்பிட்டார்.

திரு கோடீஸ்வரன் பேசும் பொழுது தமிழ் இலக்கிய மறுமலர்ச்சிக்கு வித்திட்ட பெருமை அண்ணா அவர்களுக்கே உரியதென்றும், அதனால் தமிழன் 19ம் நூற்றாண்டின் புத்துலகச் சிற்பி அண்ணா அவர்களே என ஆணித்தரமாகக் குறிப்பிட்டார்.

மற்றும் ஈழவாணன், இ. சோமசுந்தரம், இராயப்பு, தி. அரியநாயகம் ஆகியோர் பேசினார்கள். திரு இ. ஏகாம்பரம் தலைமைதாங்கினார்.

இறுதியில் கலைக் கதம்ப நிகழ்ச்சிகளுடன் விழா இனிது முடிவடைந்தது.

## கலைவாணி சன சமூக நிலையம்

கீழ்கரவை கலைவாணி சன சமூக நிலையத்தின் ஆண்டு விழா தைப்பொங்கல் திருநாளன்று ஆசிரியர் திரு ஜே. எஸ். வேலுப்பிள்ளை தலைமையின்கீழ் நடைபெற்றது. பெரியார் பலர் "வாசிகசாலையும் அதன் பயனும்" என்னும் விஷயம்பற்றி இனிது சொற்பொழிவாற்றினர். அன்றைய தினம் மாணவர்களிடையே கட்டுரை, பேச்சு முதலிய போட்டிகள் நடாத்தப்பட்டன.

கட்டுரைப் போட்டியில் முறையே செல்வன், செ. கந்தசாமி, வி. ஜே. சற்குணம், சு. பாலச்சந்திரன் முதலியோர் 1ம் 2ம் 3ம் இடத்தைப் பெற்றனர். பேச்சுப் போட்டி மேற்பிரிவில் முறையே செல்வன் செ. கந்தசாமி, செல்வன் சு. பாலச்சந்திரன், வி. டபிள்யு. நற்குணம் ஆகியோரும், கீழ்ப் பிரிவில் முறையே செல்வி கனகரத்தினம், செல்வி சகுந்தலா வேலுப்பிள்ளை, செல்வன் ஏ. வி. திரவிய நாயகம் ஆகியோரும் பரிசில்கள் பெற்றனர். திரு ஜே. எம். வைரமுத்து பரிசில்களை வழங்கினார். கூட்டத்தின் இறுதியில் நிர்வாக சபை அங்கத்தினர் தெரிவு செய்யப்பட்டனர்.


# ஆனந்தா லேகியம்

இதன் குணத்தை ஒரே நாளில் அறிந்து கொள்ளலாம்.

நிர். 174, ஆனந்தா வைத்தியசாலை என்ற விலாசத்தைப் பார்த்து வாங்குங்கள்.

ஆனந்தா லேகியம் நாள் தோறும் மலஜலத்தை சுகமாகக் கழித்து, அசதி, சோம்பல், மேல், கால், கை, கணுக்களில் வலி, அஜீரணம், பசியின்மை, பித்த வாய்வு, புளியேப்பம், வயிற்றுப் பொருமல், வயிற்று வலி, இடுப்பு வலி, நெஞ்சு வலி, கிரங்கு, பற்றுகள், சொறி, தேமல், நெஞ்சு எரிவு, திரேகம் காந்தல், கண் எரிச்சல், உள்ளங்கால், கை எரிச்சல், வாய்வுக் குத்து, நெஞ்சடைப்பு, சகலவித வாய்வுகள், வாதக் கடுப்புகள் முதலிய அநேக வியாதிகள் தீரும். சில காலம் சாப்பிட்டு வந்தால் மூல வியாதி அடியோடு தொலைந்து போகும். பத்தியமில்லை.

பெரியது ரூ. 5-75. சிறியது ரூ. 3-00.

இத்துடன், "ஆனந்தா தைலத்தை"த் தேய்த்து வந்தால் அதிக உஷ்ணம், கண் எரிச்சல், மூலச் சூடு, பித்த மயக்கம், கை கால் எரிவு முதலான அநேக வியாதிகளை நீக்கி மூளைக்கு குளிர்ச்சியையும் கண்ணுக்குப் பிரகாசத்தையும் கொடுக்கும். சகல வியாதிகளுக்கும் விபரமடங்கிய கேட்லாக் எழுதினால் இனாமாக அனுப்புவோம்.

பெரியது ரூ. 5-50. சிறியது ரூ. 3-00.

வி. பி. பி. செலவு வேறு.

தயாரிப்பாளர்:-

ஆனந்தா வைத்தியசாலை,

நிர் 174 செட்டியார் தெரு, கொழும்பு-11


Digitized by Noolaham Foundation. noolaham.org | aavanaham.org

# சினிமாஸ் தாபனத்தாரின்

## திரைகளில் எதிர்பாருங்கள்!

சிவாஜி கணேசன், பத்மினி, சந்தியா,
பாலையா, சந்திரபாபு, முத்துலட்சுமி, துரைராஜ்

முதலியோர் நடித்த

பக்ஜிராஜாஸ்

# ★ மரகதம் ★

கதை வசனம்:
முரசொலி மாறன்

சங்கீதம்!
எஸ். எம். சுப்பையா

## 3-வது வாரம்!

கிங்ஸ்லி (கொழும்பு) பிளாஸா (வெள்ளவத்தை) வெலிங்டன் (யாழ்ப்பாணம்)

வெம்பிளி (கண்டி) விஜயா (மட்டக்களப்பு)

மற்றும் 7 திரைகளில்



நடிகர் திலகம்

## சிவாஜி கணேசன்,

பாலையா, சாவித்திரி,
தங்கவேலு, பி. கண்ணாம்பா,
சந்திரபாபு, ஈ. வி. சரோஜா,
சகாதேவன், எம். என். ராஜம்,
ஓ. ஏ. கே. தேவர், மோகனா

நடித்த



ஆர். ஆர். பிக்சர்ஸ்

# காத்தவராயன்


இப் பத்திரிகை கொழும்பு பண்டாரநாயக்க மாவத்தை 185-ம் இலக்கத்தில் வசிக்கும் எஸ். டி. சிவநாயகம் அவர்களால் சி[illegible] பப்ளிகேஷன்ஸ் லிமிட்டெட் ஸ்தாபனத்தாரின் சார்பாக பண்டாரநாயக்க மாவத்தை, சுதந்திரன் அச்சகத்தில் பதிப்பித்து 1960 ஜனவரி 31-ம் தேதி பிரசுரிக்கப்பட்டது

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org